S.465 NO: 65

உ

பரமபதி துணை.

திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய

# கற்பம் 300.

நாதாந்தசாரம் 100 கற்பக்குரு நூல் 50
முப்புசூஸதிரம் 30 வாதசூஸ்திரம் 16
முப்புக்குரு 11 வைத்திய சூஸ்திரம் 100
ஆக ஏழு சாஸ்திரங்களடங்கியது.

கோழிக்கொடி

ஸ்ரீ வாலையானந்த சுவாமிகள்

ஏட்டுப்பிரதியின்படி

மதுரை வித்வான்

த. குப்புசாமி நாயுடு அவர்களாற்

பரிசோதிக்கப்பெற்றதை,

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ராம. குருசாமிக்கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி,

ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

Registered Copy Right.

இதன் விலை] 1928. ரூபா 1—4—0

உ

பரமபதி துணை.

# திருவள்ளுவ நாயனார் திருவாய்

மலர்ந்தருளிய

# கற்பம் 300.

ஆதியெனும் பராபரையா ளருளேகாப்பு
அகிலமதைப் பெற்றெடுத்த அன்னைகாப்பு
சோதியெனும் ஓங்கார வட்டங்காப்பு
சுழிமுனைக்குள் ளுதித்தெழுந்த சுடரேகாப்பு
நீதியெனுஞ் சரஸ்வதியாள் பாதங்காப்பு
நேர்மையுள்ள ரவிமதியுங் கந்தன்காப்பு
பாதிமதி யணியீசன் பதமேகாப்பு
பாக்கியமா யெழுந்தகண பதியுங்காப்பே.

காப்பாகச் சித்தர்களோ கோடிவித்தை
கழறினர் பெருங்காயாய்ப் போச்சுதென்று
தாப்பாக அவையெல்லாங் குறுக்கிப்பின்பு
சரியாக மூன்றுநூல் சொல்லிவிட்டேன்
கோப்பாக அதைக்குறுக்கி நூல்முந்நூறு
குருமுறையாய் வெளியாகக் கூறுதற்கு
வாய்ப்பாகச் சரஸ்வதியென் நாவில்நின்று
வழுத்திடமுக் கோணசத்தி வாலைக்காப்பே.

## வாலை தியானம்.

### தருகண்ணிகள்

மூக்கோணச் சுழிமுனை வீதிலேநல்ல
மூலாதாரப் பிரணவத்தில்
தக்கவட்டத்திற் சுழியொ டுங்கும்உன்
தாளிணை ஓங்காரத் திருத்துவனே.

ஓங்காரவட்டப் பிரணவத்தி னதில்
ஓமென்ற முக்கோணச் சுழியடியில்
ஆங்காரவல்லபை ஐங்கரனீந்த
ஐயனையென்னாளும் போற்றுவனே.

ஐயாகணபதி ஐங்கரனே எங்கும்
ஆதியு மந்தமு மொன்ருகச்
செய்யும்படிசெய் யுபதேசம் நன்ருய்ச்
செப்பு மெனக்குத் திடமாக.

செப்பும்படியே உபதேசம் உன்
சீடனுக் கருளிய பாதாரம்
தப்பிதம்வாராமற் காத்திடு வாய்நல்ல
சதுர்மறை வேதவிநாயகனே.

கொச்சகம்

வேதவி நாயகனே மெய்ப்பொருளே உன்னருளால்
ஆதிபரை தந்த அருமையுள கற்பமதை
நீதியுடன் சொல்லுதற்கு நெஞ்சிற் குடியிருந்து
சோதனை யொன்றில்லாமற் சொல்வாய் மறைதனையே.

ருத்திர தியானம்

தரு கண்ணிகள்

மறைநாலு வேதம் வகுத்தவனே உன்
மக்களுக் காதாரமானவனே
இறைதவரும லெந்தனுக்கு அருள்
நெடுநாள் மறவாதிருக்கவுமே.

மறவாதிருக்க வரமருள்வாய் ஆதி
மரைவீற்றிருந்த பிறைவீட்டில்
திருவாம் லெட்சுமிதாளிணையைத் தொழத்
தீவினையாவையுந் தான்போமே.

தீவினைபோகவும் ருத்திரனை அனு
தினமும் வணங்கக் கலிதீரும்
மாவினை தீரமயக்கமற நல்ல
வரமெனக்கருள்வாய் ருத்திரியே.

ருத்திரியே யென்னைப் பெற்றவளே பல
ரூபாரூபமு மானவளே
சத்துருசங்காரஞ் செய்தவளே நல்ல
சாயுஜ்ய பதமருள் சங்கரியே.

கொச்சகம்

சங்கரியே யெங்கணையுந் தன்வயிற்றில் வைத்திருந்து
பங்கமில்லாம லிந்தப் பாரில்வாச் செய்தாயே
எங்கும் பிரபலிக்க இன்பமுள கற்பமதை
மங்களமாய்ச் சொல்லுதற்கு வாக்கெனக்குத் தந்தருள்வாய்

## மனோன்மணி தியானம்.

தரு கண்ணிகள்

அருள்வா யகண்டம்யேஸ்பரியே எங்கள்
ஆயிமனோன்மணி பூரணியே
இருளா துவந்தெனக்கணுகாமல் இப்போ
எனையாளம்மா யீஸ்பரியே

ஈஸ்பரியே யென்னை யாண்டவளே உல
கெங்கு நிறைந்த மனோன்மணியே
சாஸ்வத வீட்டுக் குடையவளே வேண்டுஞ்
சதாசிவ பாதமெனக் கருளே

அருளே பொருளே சாம்பவியே வேத
அம்பரமான பரம்பொருளே
இருளே ஒளியே வான் வெளிக்குள்ளே
எழுவகைத் தோற்றமு மானவளே

எழுவகைத் தோற்றம்நால் யோனி அது
எண்பத்துநான்கு நூறுயிரம்
வழுவறக்காக்கும் மரகதமே பரா
மங்கையேநீ சிவமலைமகளே

கொச்சகம்

சிவமாய்மனோன்மணியாய்த் தேவியாய்ச் சிற்பரையாய்
பவமே விலக்கவந்த பாக்கியமே யெந்தனுக்கு
நவமாய்த் துவாரமதாய் நாற்கோண சத்தியதாய்த்
தவமாய் சமுத்திரமாய்த் தான்வந்ததற்பரையே

## கலைமகள் தியானம்.

தரு கண்ணிகள்

மலைமகளே நற்கலைமகளே திரு
மாலுக்குத் தங்கையுமானவளே
நிலைதவறாமற் சிவயோகம் இந்த
நேரத்திற்றருவாய் சிற்பரையே

சிற்பரையே சிவதற்பரையே முன்
திரிபுரமெரித்த செந்தணலே
கற்பூரதீப விளக்கொளியே என்
கண்ணே விண்ணே காரணமே

காரணமே பரிபூரணமே தருங்
கஞ்சமலர்த்தாளஞ்சுகமே
வாரணியு முலைமா மயிலேசதா
வாமுந்தருவாயா மெனவும்

ஆமெனவும் ஹரீஓமெனவும் பிறை
ஐயுங்கிலியுஞ் சௌவெனவும்
தாமெனவுஞ் சிவமாமெனவும் சிவந்
தங்குசிங்குபுனலெனவும்

புனலே அங்கி பூரணமே தேகம்
பொன்னே மின்னே சிவப்பானுஞ்
கனலே பூரணவடிவானுப் நான்
காணும் அகார உகாரமிதே

விருத்தம்

அகாரஉகா ரத்தையின்ன தென்றுதானும்
அறிவுபெறச் சித்தர்களுஞ் சொல்லவில்லை
சுகாதீத மானகற்ப மின்னதென்று
தொட்டுமே காட்டவில்லை மறைத்தேபோட்டு
தகாதவொரு காரியத்தைக் கற்பமென்று
சாற்றிவிட்டு அலைந்திடவே செய்துவிட்டார்
விகாதமாய் உப்பென்றும் உவர்தானென்றும்
வேண்டியே சுத்தசெல மென்றூர்பாரே

சுத்தசலம் வாலைரசம் பானம்பச்சை
சுழிபருதி மதியமுதஞ் சூடுங்காலம்
நித்தமுந்தான் பூரணத்தில் நிலையில்நிற்கும்
ரேசகபூ ரக்கும்பம் நிறுத்தியூக
அத்துவித ஆகாயக் ககனம்பாயும்
அறுபத்து நாலுசாரக் கடங்கிநிறும்
வித்துமுத லில்லாமல் விளைவுமுண்டோ
மேலான சித்தர்களும் விண்டிடாரே

விண்டதொரு வாலைரசந் தெரியவேணும்
மேலான வாக்கியத்தை யறியவேணும்
கண்டவரும் விண்டுசொல்லா இந்தவித்தை
கனிவாக உந்தனுக்கு உரைப்பேனப்பா
பண்டுநான் ஆயிரத்தி ஐநூற்சொன்ன
பாகமதிற் சிலபாக மிதிலெடுத்து
உண்டுவரச் சொல்லுகிறேன் மூந்நூறென்று
உதராதே பதராதே வெளியிடாதே

வெளிவிட்டுச் சொல்லாமல் மறைத்துக்கொண்டு
வேறொன்றைக் குறிப்பிட்டுச் சித்தர்சொன்னார்
சுழிவாக அறிந்திடவும் முடியாதப்பா
சூட்சமாயூகித்துத் தெரியவேண்டும்
அழிவுடனே வாழ்வுபெற வேண்டினோர்கள்
அங்கங்கே கருவறிந்து ஆடவேண்டும்
வழிதெரிய ஏலேலசிங்கா கேட்டாய்
மார்க்கமூட னுந்தனுக்கு உரைப்பேன் நானே

உரைத்தாக்காற் றலைவெடிக்கு மென்றேதானும்
ஒருவருமே வெளியாகச் சொல்லவில்லை
நிலையாக யிந்நூலிற் கொஞ்சங்கொஞ்சம்
நேர்மையுள்ள கதைபோலத் திறந்துநானும்
பரையருளாற் சொல்லுகிற வழியைக்கண்டு
பார்த்துநீ தேறிக்கோ வெள்ளிவிடாதே
வரையாகத் தெரிந்துகொண்டாற் சித்தனாவாய்
மகிழ்வாக விட்டுவிட்டாற் பித்தன்றானே

பித்தனென்று லென்னவென்று மயங்கவேண்டாம்
பெருங்காடு ஞானமெல்லாம் பேரின்பந்தான்
உத்தமனே யிதைத்தெரியோன் பித்தனாகும்
உயர்வான கற்பமுறை யறியமாட்டான்
மெத்தவுமே திறந்துசொல்ல முடியாதப்பா
வேணுமென்று திறந்துசொன்னாற் சாபமெய்தும்
இத்தனையுஞ் சித்தனென்று லறிந்துகொள்வான்
இயல்பாகக் கற்பமுறை சொல்லக்கேளே

சொல்லுவேன் கற்பத்துக் காதிதானும்
சுகமான அகளந்தான் விந்துவாகும்
நல்லதொரு விநாடியினிற் சித்தியாகும்
நான்சொல்லும் கற்பமது வீட்டிலொன்று
மெல்லவே வெளியில்ரெண்டு கண்டுகொள்ளு
மேலான சித்தர்களும் வெளிவிடார்கள்
வல்லபமா யங்கங்கே கொஞ்சங்கொஞ்சம்
வகைதெரியச் சொல்லிவிட்டே றிதிபாரே

## திருவள்ளுவர் ஜெனன விபரம்

### நொண்டிச் சிந்து

ஆதியிலே யென்தாயார் பராபரத்தின்
அருமை நிலைதனைக்கண்டறிந்து
சோதிச் சுரோணிதத்தால் கற்பமுற்றுச்
சுகமா யவனும் மகிழ்ச்சியுற்று

ஒன்றான திங்களிலே மெய்
யுடம்பு வெளுத்து விருவிருப்பாய்
நன்றான திங்கள்ரெண்டில் நல்ல
ஒளின முகமு மினுப்பாச்சு

சீரான சோம்பல்வந்து வெகு
திமிருங் கடுப்பு மயக்கமுடன்
வாரா யமுதள்ளி மிக
வாந்தி யுடனே கிடைகிடந்து

கூராக மூன்றுதிங்கள் கோபக்
கொடுமை பிறக்கும் வயிறுவிடும்
நோராகப் படுக்கவைக்கும பின்பு
நேர்த்தியாய்த் தேகம் மினுமினுக்கும்

நாலான திங்களிலே மிக
நகைப்புடன் முகமும் வெளுப்பாகும்
மேலான வேலைகளும் செய்ய
வேண்டி நினைத்தாலும் முடியாது.

அஞ்சான திங்களிலே நல்ல
அடிவயிறு தான்மிகக்கனத்து
நஞ்சுதின்ற பாவனைபோல் அசதியும்
நல்வயி றுளைச்சலும் மேல்வலியும்

### கொச்சகம்

மேல்வலிப்பதோடு மினுமினுப்பு முண்டாகிப்
பால்போலத்தேகம் பரிவாகவே யிருக்கும்
சால்போலவே வயிறுதான்காட்டுமப்போ கை
காலசதியோடுங் கணவன்மே லாசைமிகும்.

### நொண்டிச் சிந்து

ஆசையும் மோகமிகும் பின்பு
அழகுந் தளதளப் புண்டாகும்
பாசம் வெறுத்துவிடும் மிகுந்த
பக்குவதோ டன்னம் புசிக்கசெய்யும்

ஆறான திங்களிலே மிக
அசதியு மயக்கமும் மெத்தவுண்டாம்
சேறான தவிப்பிளைப்பும் இந்த
மேதினி பூராவுந் தான்வெறுக்கும்

பூரணத் தேதானும் மனது
பூராகச் சொக்கியே தானிருக்கும்
காரண மில்லாமல் ஒன்றைக்
கையா லெடுப்பதும் எறிவதுவும்

பைய நடைதளரும் தம்
பர்த்தாவின் மேலாசை யொழிந்துவிடும்
கும்பமும் புண்ணாகும் நல்ல
குணமும் பேச்சு மதிகமிகும்

விருத்தம்.

அதிகமா யன்னமதில் ஆவ லிருக்காது
விதியா பொருளை வேண்டியது தான்கேட்கும்
சுதியான வார்த்தைகளுந் தான்வருகு மப்போது
பதிவாக வேயிருக்கும் பண்பாய்ப் பாரேழினிலே

சொண்டிச்சிந்து.

ஏழான திங்களிலே நல்ல
இடுப்புக் கடுக்கும் முகம்வெளுக்கும்
தாழாமல் வார்த்தைவரும் மிகு
தயக்கமும் மயக்கமும் உண்டாகும்

மொருமி யுடல்வலிக்கும் தன்
புருடன்மே லாசைகொள்ளும் யேலாது
தருவாமல் பூரணத்தில் மனது
தானடங்கி நின்றுவிடும் பாகமுடனே

மயக்கம் மிகவாகும் ஒரு
வார்த்தை யுரைத்திடவும் வாய்கூசும்
தியக்கத் துடனேதான் ஒருவேலை
செய்யவும் முடியாது இளைப்பாகும்

எட்டான திங்களிலே மாதுக்
கிடையுஞ் சிறுத்துவிடும் முகம்வெளுக்கும்
வட்டதனந் தான்கறுக்கும் மேலும்
வயருப்பல் போலிருக்கும் மயக்கமிகும்

சொச்சகம்.

மயக்கமிகவுண்டாம் மனதிற்கிலேசமிகும்
தியக்கமதால் வேண்டியதைச் செப்புமதன்பிறகு
நயக்கமுடன்வார்த்தை நவிலுஞ்சிலநேரம்
கயற்கண்ணில் நீர்வடியக் காணுமே குண்டலியால்

நொண்டிச்சிந்து.

குண்டலி மூரப்பாகும் அப்போ
குருகுரு வென்றொரு பேதியுண்டாம்
கண்ட பொருள்மேலே இச்சை
காணும்மறக்கும் தியக்கமிகும்

ஒன்பதாந் திங்களிலே நல்ல
உறக்கமுமற்று கிரக்கமுற்று
தின்பதை மறந்துவிடும் ஒருவேளை
சிணுங்கிப்படுப்பா ளெழுந்திருப்பாள்

பிணங்கி யழுதுகொள்வாள் இனிப்
பிழைப்பேனோ யென்னமோ வென்றழுவாள்
கணவனைக் கண்டழுவாள் அப்போ
கையெடுத்துக் கும்பிட்டு வணங்கிடுவாள்

பத்தான திங்களிலே ஒரு
பக்கமாய்ப் போயவளு மிருந்துகொள்வாள்
மூத்தான வாய்திறவாள் நல்ல
முகமுஞ் சுழித்துப் பேசிடுவாள்

அன்னை படும்பாட்டை வெளியி
லாரோடுஞ்சொல்ல முடியாது
சொன்ன மொழிப்படியே இரண்டு
தோழிகளுடனே கூடியிருப்பாள்.

கட்டிப் பிடித்துக்கொள்வாள் மருந்துவக்
கன்னியர்கள் வேணுமென்று சொல்லிடுவாள்
மூட்டி யழுதிடுவாள் அப்போ
மூதண்டமாகிய மருந்து தின்பாள்

உற்ற மருத்துவரும் வருமுன்னே
ஊக்கமாய் வலிகண்டு அந்நேரம்
பெற்றுளொரு பிள்ளையும் மிகப்
பேரான வள்ளுவன் நன்றுனே

கொச்சகம்.

தானேயிப் பூவிற் சனித்தோன்றுந் தோணாமல்
மானார் முகந்தெரிந்து வாய்திறந்து தான்கதற
தேனார் மொழியாள் சிறப்பா யெனையெடுத்துக்
கோனாகத் தூக்கிக் கொடுத்தா ளமுதமதே.

வள்ளுவருக் கமுத மூட்டுதல்.

கொண்டிச்சிந்து.

அமுத மதுகொடுத்து பே
ரானந்தமாகவே தொட்டிலிட்டு
சமூகம் தாகவேதான் வேதத்தைச்
சொல்லியே தோராட்டிச் சீராட்டி

நிதமுங் குளிப்பாட்டி நெற்றியில்
நீறணிந்து அந்திசந்தி திலதமிட்டு
பதமாய் மடியில்வைத்து ஞானப்
பாலூட்டி திருஷ்டி யதுகழித்து

வெட்ட வெளிகாட்டி இந்த
மேதினியி லிருக்க கற்பமூட்டி
நட்டணை யில்லாமல் மறை
நாலு மறிந்திடப் பேராட்டி

வெயில்முக மறியாமல் அங்கு
விரும்பிவந் தோருக்குந் தெரியாமல்
ஓயிலா யெனைவளர்த்து நன்றாய்
ஓன்பது திங்களும் வந்தபின்பு

கொச்சகம்

வந்தபின்பு தானெனக்கு வார்த்தைத் தெரியவைத்துச்
சிந்தை மகிழ்வாகத் தேனமுதந் தானூட்டிப்
பந்தமது வாராத பாக்கியமா மோரெழுத்தைச்
சந்ததமுஞ் சொல்லிச் சரியாய் வளர்த்தாளே.

தரு கண்ணிகள்.

மாதமும் பத்தாச்சே ஆண்டே
மாதமும் பத்தாச்சே

மாதமும் பத்தாச்சே வையகந் தன்னிலே
மங்கை திரண்டந்த வாழ்பூ ரணத்தினில்
நாதத்தி லேயுரு வாகிப்பஞ் சாட்சர
நவ்வும் அவ்வுமொரு மவ்வையுஞ் சேர்த்திட (மா)

ஆதிபிரான் றனை யறிந்தே அனுதினம்
ஆங்கார மாகிய ஆணுவ காமியம்
நீதி பரப்பிரம்ம நாட்டத்தி லெய்திடும்
நேமியெனு மபிராமி பாதங்கண்டு
சோதி யொளிசங்கு னாதப்ர சங்கத்திற்
சூரிய சந்திரப் பிரபையென் மேற்பட
ஓதி யுணர்ந்திடும் பூரண மாகிய
ஓங்காரக் கம்பச் சுழிமுனை நாட்டினில் (மா)

மண்டல மூன்று மகார மதனுள்ளே
மாணிக்க மான மனோன்மணி பாதத்தில்
குண்டலி வட்டமா மூலச் சுழிதனிற்
கோடை யிடித்தொனி நாத முழங்கிட
அண்டர் பதஞ்சலி வியாக்ரம பாதரும்
அன்பாய்த் தனித்தனி யாடற் றெரிசனம்
முண்டக மான கருவூரு நாட்டினில்
முத்திச் சுழிமுனை வீட்டினி மேலின்று (மா)

நாற்சான் பருமனு மெண்சா ணளவுடன்
நாடிப் புகுந்து நடந்தேன் தெருவினில்
ஆச்சந்திர கால மழியா வரமொரு
அம்பிகை யீய்ந்தாள்நான் தென்பாக வாங்கியே
மூச்சான முச்சு முனைச்சுழி வீட்டிலே
முட்டித் திகைத்துமுக் கோணத் திருத்தியே
பேச்சற்ற பூரணம் வாச்சுது காணிந்த
பிரபலந் தன்னி லுறமுடன் நின்றபின் (மாத)

விருத்தம்.

மாதமூன்தான் பத்தாகி வயதொன்றாகி
மகிழ்வாக அஞ்சுவய தானபின்பு
நீதமுடன் பவரயருளாற் கல்விகற்று
நேர்மையுடன் பத்துவப தானபின்பு
வேதமுதல் யாவையுமே பார்த்துத்தேறி
வேதாந்தத் தாயருளால் வயதீரெட்டிற்
சாதகமாய்க் குருவினுட கடாக்ஷத்தாலே
சகலகலைக் ஞானகற்பங் கொண்டேனுண்டே.

கொச்சகம்.

சகல விதந்தெரிந்து சாஸ்திரவே தம்படித்து
நிகரிலா நீணிலத்தில் நேர்மையாய்த் தானிருந்து
சுகராஜ யோகமுற்றுச் சோதிதனைப்பார்த்து
அகத்திற் சுழிமுனைகண் டானபின்புதானுண்டே

ஷை கொச்சகம்.

பின்பு வெளியில்வந்து பேசினேன் சாஸ்திரத்தை
அன்பான வள்ளுவனென் றம்புவியிற் சொன்னார்கள்
தென்பாக ஏலேல சிங்கமே உந்தனுக்கு
இன்பாகச் சொன்னே னிதனை யறிந்திடுவாய்

## சுழிமுனைத்திறப்பு.

விருத்தம்.

அறியவே நாதவிந்து யெங்கேயென்று
அலையவேண் டாமுந்தன் சிரமேற்றானும்
பெருகி வருமமுதமதைக் கண்டறிந்தால்
பேரான சித்தனுந்தான் நீயேயாகும்
கருவிருந்து பிறக்குமடா அமுதந்தானும்
கண்டபின்பு ஒருவருக்கும் வெளிவிடாதே
மருவில்லா வாசியினூற் றிறக்கவேண்டும்
வாசிவசு மானபின்பு செய்துபாரே.

செய்வதென்ன ஒன்றுமில்லை பழக்கத்தாலே
திறக்கலாம் ஒருவேளை திறக்காவிட்டால்
உய்வதென்ன அறைக்கதவு உள்வாசற்றான்
உற்றபடி திறப்பதற்கு வகையைக்கேளு
மெய்யான சுழிமுனையென் றிதற்குப்பேரு
வேணுமென்றே உற்றுப்பார்த் தாலுங்காணூர்
பொய்யான மொழியில்லை நிசமேயாகும்
பூரணத்தைத் தெரிந்துகொள்ள வேணும்பாரே.

யாரப்பா அண்ணாக்குண் ணாக்குக்கூடே
பண்பாக வோர்வாச லடைத்ததப்பா
கோப்பா அதைத்திறக்க மருந்துகேளு
நேர்மையுள்ள ஆவின்நெய் சுத்தமாகச்
சேரப்பா படியரைக்கால் வாங்கிவந்து
திறமாங்கை யாந்தகரை தளைப்பிடுங்கிக்
காரப்பா அதைத்தானும் அரைத்துமிம்பக்
கனியளவாய்த் தானுருட்டி வைத்துக்கொள்ளே.

உருட்டியதோர் கரிப்பானும் நெய்யுஞ்சேர்த்து
உண்மையுடன் றான்குழப்பிக் கொதிக்கவைத்துப்
பருவம்பார்த் தேயிறக்கி யெடுத்துத்தானும்
பக்குவமாய்ப் பீங்கானில் வைத்துக்கொள்ளு
திருவான அமுதரசக் கற்பமாச்சு
செயமான மேல்வாசல் திறநாய்க்கண்டு
தருவான வலதுபெரு விரலால்நெய்யைத்
தானெடுத்து மேல்வாசல் தடவக்கேளே.

வாசலிலே அடைத்தசவ்வு விலகுதற்கு
வலக்கைபெரு விரலாலே வலமாய்ச்சுற்றி
நேசமுடன் மாலுதரந் தடவிப்பின்பு
நினைவாயோர் சாமம்பட் டினிருக்க
யாசவினை தானகலும் உண்ணுதற்குப்
பத்தியமோ புகைபுளியு மாகாதப்பா
ஆசையுள்ள பசுமோருஞ் சோறுமாகும்
அதுதவா மற்றவைக ளாகாதன்னே.

ஊற்றபடி யிக்கற்பங் காலமேதான்
மண்டலமும் தடவிவர மேலாம்வாசல்
உற்றபடி கால்மண்ட லங்கழித்தால்
ஒருவாசல் திறக்குமப்பா பூட்டுவிட்டுக்
கற்றவர்க ளறிவார்க ளமுதஞ்சிந்தும்
கணக்காக மண்டலமு மாச்சுதானால்
பெற்றதொரு நால்வாசல் திறந்துபோகும்
பெருமையுள்ள அமுதமது பெருகுந்தானே

பெருகுகின்ற அமுதமது நாதமாகும்
பிரித்துநான் சொல்லுகிற விபரங்கேளு
மருகியே விந்துவென்றால் வெள்ளையாகும்
மதிப்பான சிவப்பானால் நாதமாகும்
பொருதிபெற இதையெடுத்துப் புளியேசெய்து
புசித்துவரக் காயாதி கற்பமாச்சு
பருதிகண்ட பனியாகும் பிறப்பும்போச்சு
பாங்காக இன்னமொன்று சொல்லக்கேளே

சொல்லுவேன் கற்பமதை இன்னுந்தானும்
சுகமாக யிதையுள்ளே கொள்ளுதற்கு
வல்லபமாய்ப் புலஸ்தியரு மூன்றுநூறு
வழியோடே கைபாகஞ் சொல்லிப்போட்டார்
மெல்லவே போகருந்தான் வெளியதாக
வேணுமென்று கற்பமுந்நூற் றைம்பதுக்குள்
செல்லம்போ லிருப்பதற்குச் சொல்லிவிட்டார்
திறமென்று குருமுனியுஞ் செப்பினாரே.

குருமுனிவர் நூற்றுஐம் பதிலேகற்பங்
கூறினார் வகைதொகையாய்க் குறிப்பிட்டேதான்
மருவில்லாக் கருவூரார் கொண்டிதன்னில்
வகையாகச் சுழிமுனையின் சிறப்புச்சொன்னார்
திருவாகு மிந்நூலில் விபரத்தோடு
செய்முறையுங் கைமுறையுஞ் சுருக்கிச்சொன்னேன்
பெரிதான ஆயிரத்தைந் நூற்றினுள்ளே
பேசினேன் விபரமதைக் கூர்ந்துபாரே.

கூர்ந்துபார் சகலமுந்தான் வெளியாகாட்டால்
குண்குறிபோல் முன்சொன்ன நூலைப்பாரு
தேர்ந்துபார் வெட்டவெளி யாகத்தோணும்
திறமறிந்து கற்பமதைச் சேர்த்துக்கொள்ளு
ஓர்ந்துபா ரிதற்குத்தான் பலபேராக
ஓதிவிட்டார் சித்தர்களு முற்றுப்பாரு
சேர்ந்திந்த முந்நூறு தன்னிலேதான்
செறிமுறையாய்க் காயகற்பம் நிகழ்த்தினேனே.

காயாதி கற்பமது தேடித்தேடி
காடுமலை தணைச்சுத்தி யலையவேண்டாம்
மாயாத கற்பமது உன்னுக்குள்தான்
வளர்ந்திருக்கு தென்றறியார் மடையர்தாமும்
ஓயாமல் பச்சிலைகள் தின்றுசெத்தார்
ஓகோகோ என்னாலே யுற்றுப்பார்த்தால்
வாயாத கற்பமது வாய்க்குமப்பா
வழியோடே குருநூலைப் பதுவும்பாரே.

குருநூலில் விபரமாய்ச் சொல்லினாலும்
குண்டலிசத்தி சொரூபந் தெரியாதப்பா
கருவாக நந்திகொலுக் காண்பாயானல்
கைமேலே கிடைக்குமப்பா பூரணந்தான்
திருவாகக் காலையிலும் மாலைநேரம்
தீர்த்தமது தானாடிப் பூசைசெய்தால்
மருவில்லாப் பூரணந்தான் வெளியாய்த்தோணும்
மக்களே யதுகாண வருத்தந்தானே.

வருத்தமென்று லேசான வருத்தமல்ல
வகைதெரிந்தோன் கருவோடே காண்பானப்பா
திருத்தமுடன் திட்சைவிதிக் கந்தரங்கள்
தெரியவென்று லண்டபிண்ட மதுதானப்பா
பொருத்தமுடன் அகாரவுகா ரங்களாகும்
பூமிவிற்போம் பூனீற்றை எடுத்துக்கொள்ளு
அருத்தமது தெரியாம லலைந்தார்கோடி
அவனிதனி லலையாம லிருந்துபாரே.

பாரமுட னண்டபிண்டந் தெரியச்சொன்னேன்
பரிவான அடையாள மேதென்றக்கால்
தீரமுடன் கடுவனைதான் வாலையாகும்
தேவியைநீ பூசைசெய்து செபித்துப்போற்றி
சாரமுடன் கற்பமதை யுண்டாயானால்
சகலசித்தும் உன்னுக்குள் ளாடும்பாரு
காரமுடன் நாதவிந்தைக் கண்டுதேவி
காலிலே நீவிழுந்து கற்பமுண்ணே.

கற்பமது லகுவல்ல ஐந்துதிங்கள்
கணக்காகக் கொண்டபின்பு தேகம்பொன்னும்
விற்பன யங்கங்கே தெரியச்சொன்னேன்
விரும்பிநீ யுண்டுலகில் வாழச்சொன்னேன்
உற்பனமாங் கருவிபடும் பாடுசொன்னேன்
உற்றதற்கு வேண்டியநல் மருந்துஞ்சொன்னேன்
அற்புதமாய்ச் சித்தனைப்போ லிருக்கச்சொன்னேன்
அன்பாகக் கற்பமுண்ட முறைசொல்வேனே.

தரு.

கற்பமுறை சொல்லுகிறேன் ஆண்டேநான்
கற்பமுறை சொல்லுகிறேன்

கற்பமுறை சொல்லுகிறேன்
உற்பன அகாரமது
அற்பமல்ல பூரணந்தான்
விற்பனவி வேகியேகேள் (கற்)

வல்லபமாய்ச் சொல்லவில்லை மறந்திடா துங்களுக்கு
நல்லறிவு கொள்ளவினி நாட்டுகிறேன் பூரணத்தை
அல்லும்பக லாயிருந்து அன்புடனே கொண்டவர்க்கு
வெல்லமது வாயிருக்கும் வீட்டினி லிருந்தபழம் (கற்)

திங்களொன்று கொண்டவர்க்குத் தேனொழுகும் வாயதனில்
மங்கையுடன் கூடியேநீ மாண்டிறந்து போகாமலே
பொங்கமுட னேயருந்திப் பூரணவா சியையுண்டு
சிங்கம்போ லிருப்பதற்குத் திகட்டா தமுதமுண்டு (கற்)

கொண்டிட இரண்டுதிங்கள் கூறுமதி யைக்கேளு
பண்டிருந்த தேகமெல்லாய் பதராதே தங்கமாகும்
கண்டுகொள்ளு வெண்கருவால் காயம் வலுத்துவிடும்
விண்டுசொன்னேன் மூன்றுதிங்கள் விரும்பி யருந்திவிட. (கற்)

சமரிவிடும் வாயுவு கலைபொருந்திக் கொள்ளவுமே
அமுதமடா ஊசிநீரி லாசை மிகுந்துவிடும்
தமரில்வரும் பேதிக்குஞ் சடத்தில் மயக்கமூண்டு
விமரிவிடும் வாதனையில் விட்டுவிடிற் கேட்டுவிடும். (கற்)

கண்சிவக்கும் நாலுதிங்கள் கணக்காக ஆனவுடன்
புண்சிவந்து குய்யமதிற் பூப்போல ரத்தம்விழும்
பண்சிவந்த தொண்டைநெஞ்சு பருத்துத் திறக்குமப்பா
மண்சுமந்த யீசனுந்தான் வகையுடன் சொன்னதிது. (கற்)

அஞ்சுதிங்க ளானவுடன் அன்னமதைத் தூஷணிக்கும்
பஞ்சுபோல மேனியெல்லாம் பவனமும் வெந்துவிடும்
நஞ்சுகின்ற பாவனைபோல் நாடிய சந்துவிடும்
கொஞ்சுகின்ற பூரணத்தைக் கொள்ள வருத்தமிகும். (கற்)

வருத்தமினிச் சொல்லுகிறேன் மலத்தை மிகுந்துதள்ளும்
இறுத்தவயது போலத் தேகம் வெளுத்துவிடும்
உருத்தரித்த பேருக்கு ஒச்ச லதிசமூண்டு
கருத்தரித்த பெண்களைப்போற் கனத்ததொரு மாச்சலுண்டு

ஓச்சலென்ன சொல்லுகிறேன் உதயமதிற் பேதிக்கும்
மாச்சலதில் மெத்தவுண்டு மத்தியான மேகெடுதி
பாச்சலுக்கு அந்திதனிற் பாடினரே மூலருந்தான்
காச்சலுடன் சூடுமெத்தக் கைகா லசந்திடுமே. (கற்)

கொச்சகம்.

காலமே யிஞ்சியுண்ணக் காட்டினர் சூஸ்திரத்தில்
மாலையதி லேகடுக்காய் மத்தியானஞ் சுக்கருந்த
சூலமே தேகமடா சுக்கிலத்தைக் கட்டிவிடும்
ஞாலமே லுனதுவிந்து நற்றேங்காய் போலாமே. (கற்)

விருத்தம்.

கற்பவிதி பாடினதோர் விபரங்கேளு
காலமே புளியுண்ணக் கனல்தான் மெத்த
உற்பனமாய் மத்தியானம் ஆதிவிந்து
ஓங்காரோ பூரணந்தா னந்திமேவே
சற்பனையாற் கொண்டுவா தேகத்துற்ற
சண்டாள வாயுவெல்லாஞ் சாகுமாண்டே
விற்பனமாய்த் தின்மூன்று காலங்கொள்ள
விதிபாரு குருமுறையை வேண்டினோர்க்கே.

வேண்டிடவே பத்தியந்தான் மூன்றுமேவே
வெள்ளாட்டுப் பாலோடு ஆவின்பாலும்
மூண்டிடுபச் சரிசியும்பா சிப்பயறும்
மூசியாம லுண்டுவிடு வெறுக்காமற்றான்
தாண்டவமா மம்பலத்தைக் காணலாகுந்
தயங்காமல் அகாரத்தை போற்றலாகும்
ஆண்டேயினிச் சொல்லுகிறேன் புளிச்சுண்ணத்தால்
அலைவாமல் வாதவித்தை யறிந்துகொள்ளே.

அறிந்துகொள்ளு அந்திதனிற் சவுக்ய மாகும்
ஆத்தலிலே தேருவர்க ளாருஞ் சாகார்
பிரிந்துகொள்ளு மலசலத்தைப் பாண்டத் திட்டுப்
பேரான வாலைதிரா வகமும் வாங்கித்
தெரிந்துகொள்ளும் புளிச்சுண்ண மதிலே தூவச்
செலமாகுஞ் சாக்கிதிலே மெழுகு மாகும்
குரிந்துகொள்ளு சூதமது ரவியிற் சாகும்
குணமான வாதமிதிற் கொள்ளே தானே.

விருத்தம்.

தானான சூதந் தன்னைத் தக்கதோர் சுண்ண மாக்கித்
தோனான நவலோ கத்திற் சேர்த்திட நீறிப் போகுங்
கோனான செம்பிலேதான் கொடுக்கப்பத் தரையு மாகும்
காணான மெழுகை மாதம் நலமுட னுண்டு பாரே.

மாதமொன்று கடந்தபின்பு மாற்றைக் கேளு
வாகாக இரண்டுமூன்று மாத மாகி
மாதமது நாலுக்கு இரண்டே காலாம்
வைத்தசடம் பொன்னிறமாய்ச் சிவக்கும் பாரு
மாதமது ஐந்துக்கு மூன்றே யாகும்
மணியோசை காணுமப்பா தேக மின்னும்
மாதமிரு மூன்றுக்கு நாலே யாகும்
மாதெய்வ சித்தருக்குப் பரையுமாமே.

பரையடா ஏழுக்கு வயதைத் தாகும்
பதிவான யெட்டுக்குள் நரையு மாறும்
கரையான ஒன்பதுக்கே பூரையு மாகும்
கசக்காதே பத்துக்கொன் பதுமே யாகும்
சிரையான யென்தாயார் சிறுபெண் ணாத்தாள்
செப்புகிற வாதமதின் திறமை தன்னை
அரையான இடந்தனிலே சென்று நீயும்
அலையாமல் நல்லதொரு கருவைப் பாரே.

கருவாயின் பட்டைதனை மைய தாக்கிக்
கதலியின் சாற்றாலே காந்தம் நேரே
வருவாயிற் சூதமிட ரவியிற் சுண்ணம்
மகாலிங்கந் தாளகத்தை மயன மாக்கி
ஒருவாயிற் றுமிரத்தோ டுரிமை யாக
ஒத்துநிற்கும் அவிபுடத்தி லுண்மை யாகும்
தருவாயி னண்டத்தோ டதனை முன்பு
சுண்ணமதில் நல்லதொரு வேதை தானே.

நல்லதொரு கற்பமதைக் காலை தன்னில்
நலமாக உண்டவர்க்குக் காய சித்தி
வல்லமையாய் மாலையிலே யுண்ட பேர்க்கு
வருகுமே பெருவாழ்வு மகிழ்வுண் டாகும்
செல்லமதா யிதுதவறி யுண்ட வர்க்குச்
சிறகுமில்லை வாலுமில்லை தீரந் தீரம்
கல்லமதா யில்லாமல் வாலை பாதங்
கருத்தில்வைத்துப் பூரணத்தை நாடிப்பாரே.

பூரணத்தை ஆயிரத்தைந் நூறுதன்னிற்
புகழ்பெறவே சொல்லிவிட்டே னதன்சூட்சத்தைத்
தாரணமா யிதிலெடுத்து முக்யமான
சங்கதியை மட்டும்நீ தெரியச்சொன்னேன்
பாரணமாய்ப் பச்சையென்றுங் கிள்ளையென்றும்
பாலனென்றும் பூரணமாய்ப் பாடினேன்யான்
ஆரணவே தம்போலத் தீட்சைசெய்து
அந்தநல்ல பூரணத்தை அருந்திப்பாரே.

கரு.

பூரணங் கண்டுகொண்டேன் என்னுள்ளே ஆண்டே
பூரணங் கண்டுகொண்டேன் (பூர)

பூரணங் கண்டேனுன் பாதக மில்லாத
போதகந் தன்னை அறிவா லறிந்துமே
ஆரணங் காமபி ராமி யருளாலே
அகாரஉகார மிதுவென் றறிந்துநான் (பூர)

வாசியின் போக்கு வழியை யறிந்துநான்
வையகத் தோர்க்கு மறைப்பிட மாகவே
நாசி நுனிவழி நாட்ட மதுகொண்டு
நாத னிருப்பிடம் நன்று யறிந்துமே (பூர)

நல்ல சுழிமுனை நாடித் திறந்துமே
நாரணி யாள்தனைப் பூசைகள் செய்துமே
வல்லபத் தாயிடம் நாதமும் வாங்கியே
மார்க்கந் தவறும லுண்டுவருதற்கு (பூர)

விருத்தம்.

சரியாகப் புளிதனையே யுண்டபேர்கள்
தானிருத்திப் பூரணத்தைக் காணவேணும்
பெரிதான விந்துவதைப் பார்க்கவேணும்
பேதாபே தங்களில்லா திருக்கவேணும்
அரிதான சுழிமுனையை யறியவேணும்
அறிவோடு காரசாரங் கட்டவேணும்
இரிதான சிற்றின்பம் விடவேவேணும்
சிவனுமையு மகாரவுகா ரந்தான்பாரே.

பாரேநீ இன்னுமொன்று சொல்லுகின்றேன்
பண்பான புளியுப்பால் காயசித்தி
நேரேதான் நாலுதிங்கள் கொண்டபின்பு
நேராக நானறிந்தேன் பூரணத்தை
சீரோதான் சிதம்பரமும் வெளியாய்த்தோணும்
சிற்சபையுந் தெரிசனமுங் கிடைக்கும்பாரு
தாரேதான் கேசரங்கள் பாயுதற்குத்
தக்கதொரு குளிகைதனைக் கட்டினேனே

தரு

குளிகை கட்டுகிறேன் ஆண்டே
குளிகை கட்டுகிறேன் (குளி)

குளிகை கட்டுறேன் மூலத்தி லேநின்று
கோதை யபிராமி பாதத்தை யேகண்டு
வெளியிற் பிறந்திடும் நாதமுந் தான்சேர்ந்த
விந்துப் புளியினால் மந்திரத் தோடேநான் (குளி)

அஞ்செழுத் தோடே அகாரந் தனைச்சேர்த்து
அவ்வுட னுவ்வும் அறிவினாற் கூட்டியே
தஞ்சமென் றேபுளி விந்துட நாதத்தில்
சதாசிவந் தன்னைச் சரியென் றெடுத்துநான் (குளி)

திங்கள் முகமல ரெங்கும்பிர காசிக்கத்
தேவி யபிராமி பாதத்தைப் பூசிக்க
வங்கணமான வயது பதினாறில்
வல்லி கொடுக்க நான்வாங்கி யனுதினம் (குளி)

காரமுடன் சாரம்வீரமுங் கூட்டியே
கருவா லெடுத்திடுஞ் சாரத்தி னாலேமே
தாராள மாக ரவியினிற் பக்குவந்
தந்திரமாய் வைத்துச் சிந்தை மகிழ்ந்துநான் (குளி)

விருத்தம்.

தேவிசிவ காமியபி ராமிவாலை
சிறுபிள்ளை மதலையெனத் தெரிந்துகொண்டு
தாவியே அவனிடத்தில் காதம்வாங்கித்
தக்கபடி காரசாரத்திற்சேர்த்து
மேவியே செய்துவரும் விபரந்தன்னை
விதமாகச் சொல்லிவிட்டே னதுபோல்நீயும்
ஓவியம்போற் குளிகைதனைச் செய்துகொள்ளு
உற்றதொரு சரக்குகளைக் கட்டிக்கொள்ளே.

நொண்டிச்சிந்து.

கட்டினேன் குளிகைதனை நல்ல
கம்பி வெடியுப்புச் சீனமுடன்
கொட்டினேன் புளியுரமும் அதின்
கூடவேசூடனும் பூரமுடன்

இட்டுத் திமிர்ந்துவைத்தேன் பின்னும்
இனியநல்லமுதமுங் கெந்தியொடு
சட்டி நிறையவைத்து அதில்
சாக்கு அறுபத்து நாலையுமே

திட்டமுட னிட்டுவைக்க அது
செக்கச்சிவந்திடும் பூரணத்தை
மட்டாய்க் கலக்கிவைத்து அதில்
வங்காளப் பச்சை வழலையிட்டு

கட்ட மிவைகளையும் போட்டுக்
காடையொருபுட மிட்டெடுக்க
வெட்ட வெளியாகக் குளிகை
விரும்பியபடியே தானிருக்கும்

கொச்சகம்

தானிருக்கு மேகுளிகை தன்னை மறைத்துவைநீ
மானிலத்தி லுள்ளோர்க்கு வாய்ப்ப தரிதசுகும்
தேனிருக்கும் பூஞ்சுனையைத் தேடி மலைகளிலுங்
கானி லலையாமற் கண்டேனே நேர்த்தியதாய்

நொண்டிச்சிந்து

நேர்த்தி யுடனெடுத்து அதை
நேர்மையுடன் சாபந்தானீக்கி
ஆத்தா ளபிராமி அவள்
அன்பாகக் கொடுத்ததோர் பாலைவிட்டு

சேர்த்துமே ஊறவைத்து நாலுதாஞ்
சிறப்பாகச் சாரணை தீர்ந்தவுடன்
பார்த்து மகிழ்வடைந்து அறு
பத்துநால் சாரணை தான்முடித்து

தந்திர மாகவேதான் வாயில்
தானிட்டுக் கொண்டுகே சாம்பாய்ந்தேன்
இந்திர ஜாலமல்ல யார்க்கும்
இயல்பாய் கிடைப்ப தரிதாகும்
மந்திர மிதுவாகும் இந்த
மார்க்கத் தெரிந்தே னறிவாலே
விந்தை யுடனேதான் எனக்கு
வேண்டியே யீய்ந்தாள் பராபரையாள்

விருத்தம்.

பச்சையாம் பசுக்குழந்தை பாவையாளும்
பரிவுடனே தான்கொடுக்க வாங்கிவந்து
இச்சையுடன் தீட்சைவிதி பத்துஞ்செய்து
இயல்பான லேகியத்துக் காதியாக
அச்சமற மருந்துகளை யதிலேசேர்த்து
அன்பாகத் தானரைக்க வகையுங்கேட்டு
உச்சிதமாய் லேகியங்கள் செய்துகொண்டு
ஒருமனதாய்ச் சாப்பிடவு முகந்தேனுண்டே.

கொச்சகம்

உகந்தபடி கொடுக்க உற்பனமா யெந்தனக்கு
செகந்தனிலே தாயாய்ச் செனித்து மனம்போலே
சுகந்தந் துமிக்கச் சுந்தரம்போ லேயிருக்க
புகழ்ந்து கிளிபோலப் புகன்றெனக்குத் தந்தாளே.

வெண்பா.

கிளிமொழியாள் காதந் கிடையா தெனக்கு
களிப முடன்ரசிதம் நல்கினாள்—புளியதனைத்
தின்றே னொருமனதாய் செய்முறைகள் தப்பாமல்
நின்றேன் பரப்பிரமம் நேர்.

கொச்சகம்.

நேர்பெறவே நான்முன் நிச்சயமாய்ப் பூவுலகில்
சீர்பெறவே கற்ப தேகமதாய்த் தானிருக்கத்
தார்பெறவே தந்து தாரணியில் மற்றோர்க்கு
ஏர்பெறவே சொல்லாதென் றிப்படியுஞ் சொன்னாளே.

கொச்சகம்

இப்படியே வாலை இன்பமுட னேயெனக்குத்
தப்பிதங்கள் சொல்லாமற் றான்தந்தாள் தாயாரும்
சற்பனைகள் வாராமல் தான்கொடுத்த பூரணத்தை
அற்புதமாய்த் தான்வாங்கி யருந்தினேன் லேகியமே

தரு

லேகியங் கொண்டேனான் ஆண்டே
லேகியங் கொண்டேனான்

லேகியங் கொண்டேனான் நெடுநா ளிருப்பதற்கு
வாகுடன் பராபரை வசனித்த படிக்குயான் (லே)

பெற்றிடும் நல்லமதலை நான்வாங்கி
பிசகாமல் நின்று ஒருமன தாகவே
சத்தி யிடித்தொரு லேகிய மாகச்
சமைத்துக் கொடுக்கச் சகல வினைவிட்டு
முத்தி கொடுக்கும் பரைவீட்டி லேநின்று
மூலா தாரக் கருவி யறுத்துமே
வெற்றிய தாகக் குளிகை தனைக்கட்டி
மேலான கேசர மேறியே பாய்ந்திட (லே)

வாசிக் குதிரையி லேறித் தினந்தினம்
வையாளி போடும் வயண மறிந்தபின்
தேசி யெனுங்கருவி தொண்ணூற் றாறையும்
தீயினாற் சுட்டுச் சிதம்ப ரத்தில்வந்து
ஊசி முனைமேல் நெருப்பாறு தாண்டினான்
உற்ற மயிர்ப்பால மீதினி லேறியே
பூசிக்குஞ் சொர்ணக் கணபதி பாதத்தைப்
போற்றியே பூரணம் சேர்த்தியீ தென்றுநான் (லே)

காயா புரியெனுங் கோட்டையுங் கொத்தளம்
காவற் காரர்கள் கடின மறிந்துநான்
மாயா வுடலை வலுக்கவே பார்த்திட
மகத்தான் தனஞ்செயன் வந்தே குறுக்கிட
ஓயாத குண்டலி வட்டத்தி லேநின்று
உற்ற பரத்தின் நிலையை யறிந்துநான்
சாயாத வட்டத் திரிபுரை பாதத்திற்
சரணஞ் செய்தெந்தன் சாவைத் தொலைத்திட (லே)

விந்துவிற் பூரண மாகவே சேர்த்து
வெட்ட வெளிதனி லிட்டுமே பார்த்து
புந்தியி லேம்பத்தோ ரக்ஷர மாகவும்
பூமியி லுள்ளோர் புகழ்ந்து பணியவும்
அந்திப் புளியதைத் தானே யறியவும்
ஆதியில் நின்று அனுகதந் தன்னிலே
மூந்திய காரண விந்தை யறிந்துநான்
முடித்த அவிழ்தத்தின் முத்தி தெரிந்திட (லே)

கொச்சகம்.

நேசவினைப் பாசமற்று லேகியத்தைக் கொண்டவுடன்
வாசியெனும் மவுனமதில் வந்தே குடியிருந்தேன்
பேசி யிருக்கவொரு பேரானந் தத்தைவிட்டுத்
தூஷணைகள் வாராமற் சொல்லியே விட்டேனே.

நொண்டிச்சிந்து

வைத்தியஞ் சொல்லுகிறேன் இந்த
மானிலந் தனிலுள்ள யோகிகட்கு
பைத்தியம் வந்தாக்கால் நல்ல
பக்குவ மான மருந்ததைக்கேள்

சத்திபுளி தனையரைத்து முறையாகத்
தானுருட்டி யேயெடுத்து வகையுடனே
பத்திய மாகவேதான் மூன்றுநாள்
பண்பா யருந்திவரப் பறக்கும்நோய்கள்

விபரந் தனைக்கேளு சோகையொடு
மேலான சயித்தியங் காமாலையும்
கபவாத சன்னிகளும் வெடிசூலை
கண்டவுட னோடிவிடும் பரைபருளால்

விருத்தம்.

பத்தியொடு மூலப்புளி யுண்டபேர்க்குப்
பரிவாகத் தேகமெங்கும் பொன்னதாகும்
நித்தியமு மமுதரச முண்டபேர்க்கு
நீங்காது சடலமுந்தான் வலுத்துப்போகும்
முத்திபது பெறலாகுஞ் சாயுச்சியத்தில்
முடிவான பரம்பொருளை யறிந்தோனுவான்
சித்திபெறுங் காயகற்ப மருந்துவோர்கள்
சிரஞ்சீவி யாயுலகி லிருப்பாரண்டே,

இருப்பார்கள் மூலப்புளி யுண்டபேர்கள்
இயல்பாக ஒருவருக்குந் தெரியாதப்பா
மருப்படாத் தேகமது கற்பதேகம்
வலுத்துவிடுங் கேசாத்தி லிருப்பாரப்பா
திருக்கான மானிடர்கள் வாய்வீணைச்
செப்புவார் சித்தரெங்கே யிருக்காரென்பார்
செருக்கான மானிடரின் பேச்சைத்தள்ளு
தேவிமனோன் மணியைநீ பூசைசெய்யே.

செய்யவே பரையினுட பூசைதன்னைச்
செய்தாக்கா லவள்மனது மிகக்குளிர்ந்து
உய்யவே அவள்கொடுப்பாள் வாங்கிவந்து
உறமான புளிசெய்து உண்டுபாரு
மெய்யவே அகாரவுகா ரங்கள்வாங்கி
விரும்பியே முப்பூவை முடித்துக்கொண்டால்
அய்யமில்லை வெகுசரக்கு நீறிப்போகும்
அருவாகுங் குருவாகும் பரைசொன்னாளே.

சொண்டிச்சிந்து.

அன்னமெனும் பாராபரையாள் அவள்
ஆணோடே பெண்ணும் பிறந்தாளே
என்னவென்று சொல்வேனான் அது
எண்ணெயில் லாப்பிள்ளை வண்ணமுண்டோ

உண்ணவேணுங் காயகற்பம் முன்னம்
ஊழ்வினை யின்படி தானறிந்து
நன்னயமாய்த் தோஷமில்லை மிக
நற்குருவை யறிந்து மருவவேணும்

கரும்பா லிளமதலை பாரு
கடித்து ரசத்தை யருந்தவல்லோ
திரும்பா ததுகாயம் இனி
தெருட்டப் புசட்ட வகையறிந்தால்

இரும்பாகு மேனியெல்லாம் அண்டத்
திந்திரன் சந்திர னிணையோதான்
விரும்பாம லேயிருந்தால் உனக்கு
மேலான பதவியுங் கிட்டாது

கொச்சகம்.

கிட்டும் விதமனைத்துங் கெம்பீர மாகவுமே
திட்ட முடன்பிரித்துச் செப்பினே னுந்தனக்குச்
சட்டமுடன் காயகற்பந் தானுண்டு வந்தாக்கால்
அட்டாள தேசமுந்தா னுண்டிருப்பார் நீபாரே

நொண்டிச்சிந்து

முன்னுகக் கற்பமதை வாங்கி
முக்கியமாய்ச் சாப்பிட்ட பிற்பாடு
இன்னுளிற் காயகற்பம் கொண்டால்
எந்நாளுஞ் சாகா திருந்திடலாம்

காயகற்ப மின்னதென்று வெளியாய்க்
காட்டிவிட் டேனந்தப் பூட்டுத்திறந்து
நேய முடனேதான் மனங்கொண்டு
நேர்த்தியுட னுண்டுவரத் தேறிடுவாய்

வாலைப் பிராயமதாய் சிறு
வயதோ யீரைந்து மனேமணியாள்
சேலை யுடுத்தறியாள் இன்னுஞ்
செப்பு மதலை மொழியுடையாள்

ஆலகால விஷத்தையுண்ட நல்ல
ஐபருட பாக மிருந்தவள்காண்
வாலையபி ராமிதந்த அமுதம்
மகத்துவ மல்லால் வேறுமுண்டோ

விருத்தம்.

பாரிலே பிறந்தகன்னி வடிவுள்ளாளாய்ப்
பண்புடனே வந்துதித்த காமரூபி
நேரிலே அவதரித்த மூலத்தாய்தான்
நேர்மையுடன் ஒங்காரத் துள்ளுதித்துத்
தாரிலே வன்னியேனும் வலையறுத்துத்
தகைமைபெற சிவாயமென வைத்துநீயும்
ஊரிலே கருணைகொண்ட மூலப்பெண்ணை
உண்மையுடன் காணுதற்கு வல்கையைக்கேளே.

வகையான வாலையுந்தான் பிள்ளையாகி
வந்துந்தன் னுடப்பிறப்புச் சீஷனாகி
நகையான குருவாகித் தாய்தானாகி
நலமான வேதைப்பெண் தானுமாகி
சிகையான பெண்ணாகி நீசப்பெண்ணாய்ச்
சேருதற்கு அரிதரிது மிகவுநன்று
பகையான பெண்ணாகா நல்லபெண்ணைப்
பார்த்துநீ அவளோடு கூடிவாழே.

கூடிவாழ்ந் திருப்பதற்கு வகையைக்கேளு
குலப்பெண்ணு தானாகும் பரவாயில்லை
தேடியே சாதிவகை பார்க்கவேண்டாம்
சிற்பரையி னருளாலே கிடைத்தபெண்ணை
நாடியதோர் அகாரஉகா ரத்தில்நாட்டி
நலமான தேவிபதம் பூசைசெய்து
நீடியதோர் பூரணத்தில் மனதைநாட்டி
நீணிலத்தி லிருக்கும்வரை உண்டுதேரே.

நொண்டிச்சிந்து.

இருக்க மிகவும்நன்று மூலத்
தியல்பை யறிந்து நடக்கவென்று
பெருக்கமாம் பூரணத்தில் நாதம்
பிறக்கும் அகார உகாரமதில்
மருக்கொள்ளும் மூலத்திலே றீங்காரம்
மவ்வும் அவ்வும்ஓங் காரக்கம்பம்
செருக்கொள்ளுங் காரணத்தில் நாதவிந்து
திரண்டு கனியாகிச் சிவந்துவிழும்
மூத்தியெழுஞ் சூட்சத்துள்ளே ஆதார
மூலைத்துக் கனியாகப் பழுத்துவிழும்
சத்தியதி லுக்கிரமதாய்த் தாமரைத்
தடாகத்தில் தண்ணீரு மிருப்பதுபோல்
தாட்டிக மாகவேதான் இவைகளைச்
சரிசெய்து ஒன்றாக வேசேர்த்துக்
கூட்டி யிடித்தல்லவோ உண்டைசெய்து
கொள்ளுகிற விதமினிச் சொல்லுவேனுண்டே

கொச்சகம்.

சொல்லுமே விம்மருந்தைச் சொல்லமனங் கூசுதையோ
நல்லபடி யாகவிதை நான்சொன்னேன் பாகமது
எல்லார்க்குந் தானும் எளிதாகத் தோணுது
வல்லபமாய்ச் சித்தருக்கு வாய்த்த புளிதானண்டே

கொண்டிச்சிந்து.

புளியொடு உப்புங்கூட்டி நல்ல
பூரணத் தோடுவெள்ளைச் சாரையுங்கூட்டிக்
களிப்போடு ஆதியுங்கூட்டி இன்னுங்
காமரூபிப் பழந்தை தானுமேசேர்த்து
எளிதல்ல கொண்டோராண்டே அவர்கள்
என்றும் பதினாறு யிருப்பார்கள்
வெளியாகத் திறந்துசொன்னேன் இன்னுமொரு
விபரமுஞ் சொல்லுகிறேன் கேளாண்டே
காரமுடன் சாரமுஞ்சேர்த்து நல்ல
கம்பியுப்புப் புளியெனும் நாதமுங்கூட்டிச்
சாரமதில் வீரமுஞ்சேர்த்து அத்துடன்
சவுக்காரமது சேர்த்துப் பின்னுங்கேளு
நேரமுடன் காலமறிந்து உண்டுவர
நிச்சயமாய்த் தேகமது வச்சிரமாகும்
சாரமுடன் பன்னிரண்டு ஆண்டு
சாப்பிட பதினாறு வயதாவாம்

கொச்சகம்.

வயதுபதி னாறாக வருவார்க ளென்றேதான்
நயமாய் விரித்துனக்கு நாட்டினேன் பூரணத்தைச்
செயமாகக் கண்டறியச் செப்பினநூற் கோர்வையிலே
பயமில்லா தேஎடையும் பாகமது காண்பாயே

கொண்டிச்சிந்து.

எடைபாகம் செய்பாகம் எல்லாம்
இயல்பாக ஆயிரத் தைந்நூறில்
தடையின்றிச் சொல்லிவிட்டேன் பின்பு
தக்கதொரு வைத்திய மெண்ணூறில்

விரிவா பெடுத்துரைத்தேன் அதைக்குறக்கி
வேணுமென்று பஞ்சாத்னம் ஐந்நூறிற்
சரியாகச் சொல்லிவிட்டேன் கற்பமது
தான்தெரிய முந்நூறில் விரித்துரைத்தேன்
நாதாந்தச் சுருக்கமப்பா நூறு
நலமாகச் சொன்னேன் வெகுசிறம்பாய்
வேதாந்தம் போல்நூறு நன்றாய்
விரித்துரைத் தேனது தேன்போலே
கற்பசூஸ் திரந்தானும் ஐம்பது
கருத்தாய்த் திறந்து வெளியில்விட்டேன்
அற்புதமுப் பூச்சூத்திரம் இருநூறு
அருமை யுடனேசொன்னேன் பெருமைபெற
மலைமகள் முப்பதுவும் யீரெட்டும்
வாதசூத் திரஞ்சொன்னேன் தெளிவாக
நிலைபெறப் பத்தொன்று சூட்சமுப்பு
நேர்மைபெறச் சொன்னேன் சுளிவாக

## கற்பஞ் சாப்பிட்டடையும் பயன்

### விருத்தம்.

பாருலகிற் றிங்களொன்றிற் கடுமையாகப்
பாரிப்பாய் பேதியுண்டு காலமேதான்
வாருதியு மிரண்டுதிங்கள் ளுடுண்டாகும்
மகத்தான பேதியொடு மந்தமாகும்
காரியமாய் மூன்றுதிங்க ளானபின்பு
கனிவாயும் அபானம்வரை வெந்துபோகும்
பேரிகைபோல் வாசியங்கே சிக்கிக்கொள்ளும்
பேதமடா புத்திசற்று பிதற்றும்பாரே.

யாரடா நாலுதிங்கள் ஆண்மைவீழும்
பதிவான காலுங்கை பசநிகாணும்
சேரடா அக்கிபுளி பதனேயுண்ணு
திறமான பேதியுமே கட்டிக்கொள்ளும்
ஆரடா யெந்நூலைப் பழுதுசொல்வார்
ஆச்சரியந் திங்களைந்தில் அரட்டிமெத்த
சாரடா பூரணத்தை யறிந்துகாரு
காற்றுபனி வெய்யலிலே கையாடாதே.

ஆடாதே ஐந்துதிங்கள் கடினம்மெத்த
அடிவயிறு புண்ணாகுமா சனமும்வேகும்
தேடாது பெண்மாயை உலகவாழ்க்கை
சிறுநீருங் கடுத்துவிழுஞ் செவிகேளாது
பாடான பாடுவெகு கடினமெத்த
பாழிலே திரிந்தலைந்து பதறிப்போகும்
ஈடேது அஞ்சுதிங்கள் செயித்தாயாகில்
ஏமனுக்கு ஏமனுமா யிருப்பார்பாரே.

இன்னுமினிச் சொல்லுகிறேன் ஆறுதிங்கள்
என்மகனே அன்னமினி ரெம்பக்கொள்ளும்
பின்னுமது வெறுத்துவிடும் பொல்லாப்புண்டாம்
பேதிக்கும் புளிப்போடும் பொருமல்காணும்
சன்னுமது உடல்ரோகும் நாவிவேகும்
தயிரியமாய்த் திரிவதும்போம் நடையும்ஓயும்
கன்னல்மெழு கதுவெயிலிற் காய்ந்தாற்போலக்
காணுமடா காரசா ரந்தான்கொள்ளே.

கொள்ளடா காரமுடன் உப்புந்தள்ளிக்
கொண்டிடுவாய் தினந்தோறும் பூரணத்தை
தள்ளடா யெள்ளெண்ணய் கடுகுசுண்ணஞ்
சாதித்து வருகையிலே பேதிகாணும்
அள்ளடா மூலமென்ற புளியைத்தானும்
அந்தியிலே சந்திவிட்டு அள்ளியுண்டு
கள்ளடா புறமயக்கங் காணும்பாரு
கடினமெத்த யேழுதிங்கள் கருதுந்தானே.

தானான யேழுதிங்க ளானபின்பு
சடலத்தில் திமிரேறும் அசதிகாணும்
வானான கால்கையும் வெளுப்புக்காணும்
வாயுவினுற் புளியேப்பம் மதங்கள்மீறும்
தேனான பெண்மேலே மோசமுண்டாஞ்
சிறுவலியா யடிவயிறு நோவதாகும்
சானான மூன்றுதிங்கள் கண்டாப்போலச்
சாற்றலா மேழுதிங்கள் சத்தியாமே.

இன்னுங்கான் சொல்லுகிறேன் ஏழுதிங்கள்
இளைப்பேறும் பசிபோகும் எரிவுகாணும்
அன்னமது தூஷணிக்கும் ஆளிவேகும்
அறிவழிக்கும் நினைவழிக்கும் அரட்டிமெத்த।
முன்னமே சொன்னவைந்தாங் திங்கள்போல
முக்கியமா வியாதிகளும் மிக்வேகாட்டும்
நன்னயமாய்த் தானிருநீ பயப்படாதே
நற்கடலா மமுதரசம் பொங்கும்பாரே.

கடல்சிறந்த எழுதிங்க ளானபின்பு
கதிக்குமடா யிடுப்புவலி கால்கைரோகும்
மடல்பெருகுஞ் சீதம்விழும் ரெத்தங்காணும்
வாய்வேகும் நெஞ்செரியும் வலியுண்டாகும்
தடமதிகக் கோபமது மிகவுண்டாகும்
சந்தியிலே புளிகொள்ளச் சௌக்கியமாகும்
அடமிருந்த பூரணத்தை யறிந்துபாரு
ஆத்தாளைப் பூசைசெய்ய அறியலாமே.

பூசையடா திங்களெட்டுக் கடந்தபின்பு
பொன்மேரு போலாகுந் தேகமப்பா
பாசையடா எலும்பினுள்ள மூளைபோகும்
பதறாதே கைமுறையாய்ப் தனம்பண்ணு
வாசமென்று எண்ணாதே துவாலேபோடு
மகத்தான பூரணத்தை மருவிக்கொள்ளு
தோசமது வாராது மலைக்காதேநீ
சுந்தரமாய்ச் சோதிவொளி கக்ணும்பாரே.

காணுமென்று சொல்வதென்ன மெய்யோபொய்யோ
கண்வாயுங் குய்யமுடன் ஆருதாரம்
தோணுமடா பச்சைப்புண் ணுகவேகுந்
துடைகளெல்லாம் விறுவிறுத்துத் துயாங்காணும்
பூணுமடா பெற்றோர்க்கு மனம்புண்ணாகும்
பூரணத்தில் நாதவிந்து புனிதமாக
ஆணுவந்தா னிளந்தேங்காய் போலேகாணும்
அந்திசந்தி உச்சியொடு முறையாய்மூட்டே.

மூட்டுவது இப்படித்தான் முட்டினக்கால்
மூன்றுதிங்க ளேழுதிங்கள் மோசம்மெத்தக்
காட்டுவது அஞ்சுதிங்கள் போலேயுண்டாம்
கைவிட்டுப் போகாமற் காருகாரு
தேட்டுவது திங்களொன்ப தானபின்பு
செத்தபிணம் போற்கிடக்குந் திகைக்காதேநீ
நாட்டிலுள்ள பேர்களுட வாசம்விட்டு
நமாவெனவே ஓதுசெய நாமமாச்சே.

ஆச்சடா திங்களது பத்துமானல்
அனிபரயப் பேதியின லசதியிக்க
மூச்சடா மூச்சேறி வாய்வுகாணும்
முறமூறப்பு முன்போலப் பொருமலுண்டாம்
நீச்சடா பெருநீச்சு கடக்கவேணும்
நெருப்பிலிட்ட நெய்போலப் பொங்குந்தேகம்
பாச்சடா தனஞ்செயன்தா னேடிக்குத்தும்
பரிவாகச் சந்துவலி அதிகமாமே.

சந்துவலி யிடுப்புநோய் கைகால்குத்தும்
சண்டாளத் தனஞ்செயன்றன் செய்யுங்கூத்து
நொந்துவிடும் மண்டையிடித் தோடிப்போகும்
நுணுக்கமாய்ச் சுவாசமது நெருக்கிவாங்கும்
மூந்தவே சொல்லிவைத்த முறையைப்பாரு
மூக்காணும் பூரணத்தில் மூழுகிக்கொள்ளும்
தொந்தமே எங்களுக்குத் தெய்வம்வாலே
சுக்கிலத்தை யறிந்திங்கே சொல்லுவேனே.

சொல்லவே வாயதுவுங் கூசாதோதான்
சொல்லினற் றலைவெடிக்குங் கொஞ்சங்கொஞ்சம்
மெல்லவே சொல்லுகிறேன் அறிந்துகொள்ளு
வேதாந்தத் தாயவளும் தசமாதத்தில்
நல்லதொரு சிறுமகலே தருவாளாகில்
நலமாகத் தான்வாங்கி வைத்துக்கொண்டு
வல்லவன நீயிருந்து அதனைத்தானும்
மகிமைபெற தீட்சைசெய்து அருந்தித்தேறே.

நொண்டிச்சிந்து

ஐயிரண்டு திங்களிலே — பரைக்கு
அன்பான பாலன்பி றந்திடுவான்
மெய்யாகத் தான்வணங்கி — அங்கு
வேண்டியே பூரணங் தான்வாங்கி

சிவனை மனதிருத்தி — அவ்விட
திக்குள்ள பாலகரை தோத்தரித்து
தவமது தான்பெருக — நல்ல
சாரமுங் காரமும் சமனாக்கி

ஒன்றாய்ச் சமூலமதை — வெகு
உண்மைய தாகப் பிடித்துருட்டி
நன்றாக வேயெடுத்து — அதை
நலமாய்ச் சிமிழி லெடுத்தடக்கி

தென்பாக வேதானும் — அதை
தினமோர் கழஞ்சியா யுண்டுவந்தால்
அன்பாய் நரைதிரைபோம் — பின்பு
ஆணவ மாயை யொடுங்கிவிடும்

விதமாகக் கொண்டவர்க்கு — சித்தி
மென்மேலு முண்டா மறிவீரே
இதமாய்த் தனஞ்செயனும் — அப்போ
ஈராறு திங்கள் கடந்தபின்பு

கொச்சகம்.

கடந்தபின்பு தானறியாக் கண்மபக்க மூங்காணும்
திடத்துட னீராறு திங்க ளதுகழித்தால்
படபடப்புத் தான்மாறிப் பக்குவமு முண்டாகிச்
சடமும் பலக்குமதி தான்போலு மாகுவையே

நொண்டிச்சிந்து.

மதிபோல் வெளுத்துவரும் — பின்பு
வாய்குழறும் மூர்ச்சை யுண்டாகும்
பதிமூன்று திங்களிலே — தேகம்
பார்வைக் குடம்புசற் றேவலுக்கும்

விதியா னதுபோச்சு தேகத்தில்
வேர்வை யங்நோம் வெளியாகும்
சதிராக அப்போதான் எ லுமிச்
சம்பழம் போல்மேனி தான்காட்டும்

எட்டாறு திங்களிலே தேகத்
தினிமையாய் ரோமங்களு மினுமினுக்கும்
திட்டமுடன் பதினேழ்தில் சடலம்
சீராகவே யிருக்கும் வலிமைமிகும்

பதினாறு திங்களிலே சிறு
பாலன் வயிறு மதமதத்துக்
கைகா லசதிவிடத் தினங்
கன்னியின் பாலைக் குடித்துவந்தேன்

கொச்சகம்.

வந்தே பசும்பாலில் வாகாக வேதானும்
சிந்தை மகிழ்வாகத் தேனதுவுங் கொஞ்சம்விட்டுச்
சந்தேக மில்லாமற் சாப்பிட்டு வந்தபின்பு
மூந்தப் பன்னாறு முடிந்ததுகாண் பத்தியமே

நொண்டிச்சிந்து.

பத்தியுட னேயிருந்து நல்ல
பதினேழு திங்களுஞ் சென்றபின்பு
பதினெட்டாந் திங்களிலே யோக
பக்குவம் வந்து வலுத்ததுகாண்

அறுநான்கு திங்களிலே கால்கைகள்
அசதி கொடுத்து மிகவலிக்கும்
கருவான தேகமெங்கும் விருவிருப்பு
காட்டு மதற்குநீ யஞ்சாதே

தத்து நடைதொடுத்து உற்ற
தாய்பதம் போற்றிச் சரணஞ்செய்து
சித்து விளையாண்டேன் மேலோர்
தெய்வ மிவனேன்று செப்பிடவே

உலகந் தனைமறந்தேன் வரும்
ஊழ்வினை யாவுந் தொலைத்துவிட்டேன்
கலகந் தனையறுத்து வருங்
காலனைச் சுட்டுவிட மனத்துள்வைத்து

மருமம தாகவேதான் ஆயி
மனேன்மணி பாதத்தைப் போற்றிசெய்து
பொருமை யுடனேதான் இந்தப்
பூமியில் வீற்றிருந் தேனுண்டே.

விருத்தம்.

பொறுமைதனைப் படைத்திருந்தேன் பூமிதன்னிற்
பூரணத்தில் வாழ்ந்திருந்தேன் புதுமையாக
மருவுபுகழ் கருக்குழியில் நாதவிந்து
மனேன்மணியைப் பூசைசெய்து வரங்கிவந்து
உரிமையுடன் கற்பத்தின் காரசாரம்
உற்பனத்தாய் நற்பதத்தை யுகந்துபோற்றி
அருமறைக்கு மெட்டாத சோதிதன்னில்
அனுதினமுங் குடியிருந்தே னுண்டேகேளே.

இருந்தபின்பு மும்மூலப் புளிதானுண்டேன்
இனிமையுடன் பத்தியமா யிருந்துவந்தேன்
பொருந்துகின்ற தேகமது பொன்போலாச்சு
பூதலத்தோர் காணும விருந்துபின்பு
அருந்தவே தேகமது வெளுத்துப்போச்சு
அன்னையெனும் பராபரையைப் பூசைசெய்து
திருந்தவே மறுபடியும் உண்டுவந்தேன்
தீவினைகள் யாவுந்தான் தீர்ந்துதாண்டே.

ஆண்டேகேள் முதல்வருட முடிந்துதானல்
அப்பனே வருத்தமில்லை ஞானியாவான்
வேண்டியே இரண்டுவரு டங்களானல்
மெஞ்ஞானி யிவனுகும் சோதிதோணும்
தாண்டவங்க ளாடுமந்த சிவனுமாவான்
தனியாக வேயிருப்பான் கெவுனம்போவான்
நீண்டநாள் தானிருப்பான் மருந்தருந்தான
நெடுநாளும் போகியாய் வாழ்வான்றானே.

தானேதான் மூன்றுவரு டங்களானால்
தவயோகி யாயிருப்பான் சவம்போல்வாழ்வான்
நானென்று ஒருவரிடம் பேசமாட்டான்
நாலுவரு டங்கள்சென்றால் மௌனமாவான்
வானென்ற சத்திசிவ பூசைசெய்வான்
மகத்தான ஐந்துவரு டங்களாகில்
தேனென்ற சித்தனுக்குள் சித்தனாவான்
தீராத ஆறுவரு டங்கள்பாரே.

பாரப்பா ஆறுவரு டங்கள்சென்றால்
பண்பான சகலகலைக் கியானந்தோன்றும்
நேரப்பா ஏழுவரு டங்களாகில்
நிலையான வாதவித்தை கைக்குள்ளாகும்
பேரப்பா மலசலங்க ளெதில்பட்டாலும்
பிரபலமாய் வேதையுருக் காட்டும்பாரு
சீரப்பா யிருநான்கு வருடமாகில்
சித்தனென்ற பேரிவனுக் குண்டாம்பாரே.

உண்டாகும் ஒன்பதாம் வருடமாகில்
உத்தமனுக் குத்தமனா யிருப்பானப்பா
கண்டாலும் ஒருவரோ டிணங்கமாட்டான்
கருவழித்து அட்டமா சித்திசெய்வான்
துண்டான குகைகளிலே வாசஞ்செய்வான்
சுகமாக வேயிருப்பான் வடிவுண்டாகும்
பண்டான காரியத்தை நினைக்கமாட்டான்
பசிதீர்ந்து பாரிலே திரிவான்பாரே

தீர்ந்தபின்பு பத்துவரு டங்களாகச்
செய்பாகத் தோடேயோ கத்திருந்தேன்
ஆர்ந்தபதி னோர்வருடஞ் சென்றபின்பு
அதிகமாய் மலசலம்பே திக்கலாச்சு
வார்ந்ததொரு தேகவுப்பு மாறிப்போச்சு
வடிவான சோதிபோ லிருக்கலாச்சு
ஓர்ந்ததொரு மனதாக விருக்கும்போது
உடம்பெல்லாம் விறுவிறுப்பாய் வந்ததாண்டே!

விருவிருக்குந் தியிசெடுக்கும் பணிரெண்டாண்டில்
வெம்பியே வலியாது எனாம்பினுள்ளே
மருவிருக்கு மூலையெல்லாங் கருகிப்போகும்
மாவாகி தானேறி வனுக்குந்தேகம்
பெருவிரற்கும் முடிவரைக்குந் துவாரம்போலப்
பேசாம லோடிவிடும் வாசிதானும்
குருவிருந்து சொல்லவுந்தான் வேணுமோயார்
கோடிரவி போற்காந்தி பார்க்கலாமே.

பார்க்கவே பன்னிரண்டு வருடமானால்
பாடுகிறேன் காயசித்தி பண்பாகத்தான்
சேர்க்கையிலே நினைவறிந்து சேர்க்கவேணும்
திறமாக இதுவரைக்கும் நாடிசுத்தி
மூர்க்கமுள்ள காயகற்பஞ் சொல்லக்கேளு
மூதண்ட லேகியந்தான் முடிக்கவேணும்
ஏர்க்கையுடன் விந்துதனைக் கலிதம்பண்ணும்
இயல்பான கிழங்கதுவும் வாங்குவாயே.

வாங்குவாய் சமூலமதை மையதாக்கி
மருவியதோர் காய்ந்தபுளி பிடித்துத்தூவி
இங்கியதோர் லேகியமா யுருட்டிக்கொண்டு
உற்பனமாய்க் காலமேதான் கொள்ளவேணும்
தூங்கியலை யாதேபனி ரெண்டின்மேலாய்ச்
சுகபோக பூரணமே கிடையாதப்பா
வாங்கிமுன்னே காயவைத்துத் தூளதாக்கி
வகையுடனே உண்டுவர வண்மைதானே

தானென்ற் நாதவிந்து கிடைக்கும்போது
சாதகமாய்க் கிடையாது மும்மூலந்தான்
தேனென்று மூன்னெடுத்து உலரவைத்துத்
திறமான பீங்கானிற் பதனம்பண்ணி
மானென்ற அந்தியினிற் கோண்டாயானால்
மகாசித்தி யோகமடா வனுக்குத்தேகம்
பானென்ற பொன்போலே மின்னும்பாரு
பாரிலுள்ளோர் வந்துன்னைப் பணிகுவாரே.

பணிந்திடுவாய் நாதவிந்து மிரண்டும்வாங்கிப்
பதனமதாய் வைத்துநன்றாய்ப் பகரக்கேளு
கணிந்திடவே மூலமென்ற புளியைவாங்கிக்
காயவைத்து உரலிலிட்டு யிடித்துத்தூளாய்
அணிந்திடவே புளித்தைல மதிலேவிட்டு
அழகாகப் பிசைந்துகிண்டி எடுத்துக்கொண்டு
துணிந்திடமுன் னுரைத்தஅண்ட லேகியந்தான்
சுகமாய்க்கொண் டிடமுடியுஞ் சூடலாமே.

சூடியந்த லேகியந்தா னருந்திக்கொள்ளச்
சுகமாமுப் பத்திரண்டு நரம்புதானும்
ஆடியது தான்வலுக்கும் பின்புபாரு
ஆதியந்த மாய்ச்சிறந்த தாண்டேகேளாய்
மேடியநற் றிரவியமும் வேண்டாதாச்சு
வெகுசுளிவு வெகுசுளிவு வேலைமெத்த
நாடியிந்தப் படியறியக் காயசித்தி
நலமாகும் கைலாசம் நமக்குத்தானே.

தொண்டிச்சிந்து

நாட்டினி லதிசயத்தைச் சொல்வேன்
நலமுடனைம்பத்தோ ரட்சரத்தில்
கூட்டிய சுழிமுனையில் கணபதிக்
குஞ்சரன் பதத்தினி லுகந்துகொண்டேன்

தேட்டெனத் தேடுகின்ற ஞானச்
செயல்தனை நன்றாய்த் தெளிந்துகொண்டேன்
ஏட்டுசருக் கரைபோலச் சொல்லவில்லை
ஏக பராபரமு மிதுதான்பார்

சங்கையுந் தொலைந்ததுகாண் மெத்த
சாவாகு மந்தவிதி தொலைந்ததுகாண்
அங்கமது வலுத்ததுகாண் பின்னும்
அதிரூப மானவடி வமைந்ததுகாண்

மங்கலத் தாளம்போலே வாக்கியம்
மதிமுக மானதிந்த வாகுண்டே
தங்கம்போல் மேனிமின்னும் யோக
சாதனமு மிதிலே முடிந்ததப்பா .

கொச்சகம்

வாரான பின்பு மதிமயக்கந் தான்போகும்
நோகச் சேதி நிலைமையுட னேதெரியும்
ஆரா வமுதம் அதில்வரவே கண்டவுடன்
சீரக வங்காளிற் றேடிவெளிச் செல்லாதே

கொண்டிச்சிந்து.

தேடிய பசிபோச்சு மிகவும்
தெள்ளிய பெண்களின் மாயைபோச்சு
கூடிய சனம்போச்சு என்றுங்
கொள்ளுகிற நித்திரையுந் தள்ளிப்போச்சு

ஆடிய பாம்பதுவுங் கையில்
அமர்ந்தது ஆதிவிந்து உரைந்ததுகாண்
நாடிகளும் நரம்புகளும் வீணைபோல்
நன்றாக வேவலுத்துச் சுத்தமாச்சு

கொக்கிறகு போலவுமே உக்ரமுள்ள
கோரவினை நரைகளும் சோகிலம்போல
பக்குவம தாகித்தானே ரோமம்
பரிவாய்க் கறுத்து மினுமினுக்கும்

திக்குத் திசைகளெல்லாம் குளிகையால்
க்ஷணமதிற் போய்வரலாம் பதமாகத்
முக்கியமாய் முடிந்ததப்பா பூரண
முடிவாகி கண்ணுக்குத் தொக்காச்சே

கொச்சகம்

தொக்காச்சு பூரணமே சொல்லாச்சு சோதிமதி
திக்காச்சு எந்தனக்குச் செயமாச்சு யோகமும்மே
மெக்காச்சு தன்னருளால் விந்துவென்ற பாம்பதுவுங்
கொக்காச்சு தானதனைக் குய்யமில்லா தேபிடிப்பாய்

விருத்தம்.

குய்யமென்ற மூலமதில் மனதைவைத்துக்
கூசாமல் மனம்புத்தி கசகாமற்றான்
பையரவைக் கண்டுமே வழலையெல்லாம்
பக்குவமா யன்றாடம் வாங்கியுண்ணச்
செய்யடா எலும்பிலுள்ள மூளைகக்கும்
திருவாயிற் கபம்போல தானேஏறும்
மெய்யடா நாடிசுத்தி யானபின்பு
வெகுசுறுக்குக் காயசித்தி பேவிப்பாரே.

பாரடா பிறப்பிடத்திற் சிறுவைவைத்துப்
பக்குமாய் சிறுவாக்ரத் துன்னிநீயும்
தேரடா அனலிவித்து பலிதமாகும்
சிதறுமல் ஆவியது வெளிபோகாமல்
ஆரடா அதையுண்ண நரம்பெல்லாந்தான்
அந்திபகல் வெங்கலம்போ லமுழுந்தும்பாரு
காரடா முன்னுரைத்த நாடிசுத்திக்
காதாவு சொல்லிவிட்டேன் கருதிப்பாரே

வழலைச்செயநீர்

பார்க்கவே யின்னுமொரு செய்திகேளு
பத்தியுட னுதவிந்து செண்டுக்கோாய்
ஏர்க்கவே ரேகித்து அமுரியுப்பை
இயல்பாகப் பதினாறுக் கொன்றுதூவ
மூர்க்கமுள்ள செலமாகும் வழலையப்பா
மூடிவைத்துப் பின்னுமதை யுண்டாயாகுல்
சேர்க்குமடா பரவெளிச்சம் ஞானமார்க்கம்
செகமயக்க மற்றுப்போங் திறமைதானே.

தானென்ற வழலையிலே வீரம்பூரந்
தனிச்சீனம் புழுகோடு உறமும்கோாய்
மானென்ற நிந்துவிரு லரைத்துநன்றாய்
மதியமுத நீரதனிற் கரைத்துக்கொண்டு
தேனென்ற அமுரியுப்புக் கர்சுண்ணும்பு
திறமாகச் சமனிடையா யதனிற்போட்டுக்
கோனென்ற ரவிமுகத்தில் வைத்தாயானுல்
கொடியசுண்ணங் கடுங்காரக் குருவாங்காணே.

காணப்பா குருவெடுத்து வைத்துக்கொண்டு
கருவான சவாதோடு கோசபீசம்
ஆணப்பா கிழங்கதனை லரைத்துமைபோல்
அடியுப்பு புளியோடு அமுரிக்குள்ளே
பூணப்பா கரைத்துநன்றாய்த் தெளிவைவாங்கிப்
பூரணந்தான் சமனுகப் புகட்டிநீயும்
தோணப்பா ரவியில்வைக்க உப்பதாகுஞ்
சுருக்கான வேதையிது சொல்லொண்ணுதே.

கொச்சகம்

சொல்லப்போ காதுஒன்றுஞ் சுகபோக வேளையிலே
வெல்லப்போ காதுகண்டாய் வேதக் குருமுறைமை
அல்லப்போ வென்றுலகில் அலேந்தால் வருவதுண்டோ
வல்லபமா யிப்பொழுது வாய்த்ததுபார் எத்திசையும்

எத்திசையும் புகழ்விளங்கும் ஏலேலா உனக்குரைத்த
புத்திதனை மற்றோர் புகழ்ந்துமே தான்கேட்டுச்
சத்திதனை விட்டுலகிற் சார்ந்து தவசிருந்தார்
வெத்திபெற்ற கொங்கணர்க்கு விரித்துரைத்தேன் கற்பமதை

தரு

காயகற்பம் பாடுகிறேன் ஆண்டே
காயகற்பம் பாடுகிறேன் (காய)

காயகற்பம் பாடுகிற உபாயமது வேயறிந்து
நேயமாகச் சொல்லுகிறேன் நிஷ்டைதனிலேயிருந்து (காய)

சித்திதனை யேயறிந்து முத்திபெற சீவமிருந்து
புத்திதனி லேநினைந்து பூரண மதிலிருந்து (காய)

நாடிமிகுந் தேயறிந்து நாவிலோப மேமிகுந்து
சாடிதனி லேநிறைந்து சாதிகுல மேதவிர்ந்து (காய)

விந்துநாத மேகலந்து சொந்தமதி லேவளர்ந்து
அந்திபக லாயருந்தி ஐயிரண்டு திங்களுக்குள் (காய)

கொச்சகம்.

ஐயிரண்டு திங்களுக்கு ளொம்பத்தோ ரக்ஷரமும்
பையனென்று பேர்விளங்கிப் பாருலகில் வந்ததுகாண்
மெய்யரவம் பூண்டதிரு பேணியர ளுரைத்த
சைய்யனவே உண்டுமுன்னே சாவைததொலைத்தேனே.

மூன்னுரைத்த நாடிசுத்தி மூவுலகிலுங் கிடையா
இன்னும்பெரி யோர்க ளிருந்து மயங்குகிறார்
சொன்ன மொழிபிசகாச் சொற்பனத்தும் வாராது
அன்னை யுரைத்தகுரு வறிந்துமே சொன்னேனே.

குருவென்று சொல்லிக் கொடுப்பா ரெவருமில்லை
கருவெனக்கு யிப்புவியிற் காணவந்த காரணமே
மருவிருக்கு மேயிடத்தில் வண்டதுவும் வந்ததுபோல்
திருவிருக்கு மேயிடத்திற் சென்றுவந்த ஞாயமே.

தாயார் கலைமகளாம் தந்தையே நான்முகனும்
மாயா வுலகமதில் வந்தார் புலைவேதம்
ஓயாக் கவலையிலே உற்றுழன்று மாளாமற்
காயாம்பு மேனியனைக் கண்டேன் கருத்தினுள்ளே.

வெண்பா.

கண்டேன் கருத்தினுள்ளே காயகற்பஞ் சொல்லுகிறேன்
உண்டபடி யானுரைத்த வுண்மைகேள்—தண்டமிழ்சேர்
கொங்கைமின் னாருங் கொடுத்தவிந்து வுங்கலந்து
தங்கப் புளியுடனே தான்.

நாடிசுத்தி தானும் நவிலுகிறேன் காயசித்தி
கூடிவெகு நாட்கலந்து கொண்டபின்னே—தேடிக்
நலவியதிற் றானும் நமிதிரண்ட பின்பு
குலவியதைத் தானரைத்துக் கொள்

கொச்சகம்.

கொள்ளு வதற்குக் குருவேணு மென்றெண்ணி
யுள்ளங் கலங்கா துரைக்க வுலகிலுண்டோ
கள்ளமல்ல விந்நூல் கனிந்த குருவாகும்
வள்ளுவனென் மெய்யுரையாய் வையகத்திற் பாடினனே

பாடினர் முன்னோர் பலபலவாய் வேதமெல்லாந்
தேடினா லுங்கிடையா தேனமுதை சித்தரெல்லாம்
ஆடினா ரம்பலத்தில் ஆதிபுளி யைமறைத்துக்
கூடினர் ஏமவித்தை கொள்ளையிட்டார் வாதமதை

வாதக்கா லாயிருந்த வண்மையினிச் சொல்வேன்யான்
வேதுக்கால் தொந்தொமென்று வேடமிட்டா ரிருபேர்
போதக்கால் தானுமுண்டு பூரணத்தைப் பார்த்ததினால்
சாதக்கால் மன்றுள் சபைதனிலே ஆடினரே

ஆடினசந் தேகம் அடியேனைக் கேட்கவந்த
வேடிக்கை யென்று வெளியிடவு மாட்டாமல்
ஓடி யிருபேரும் உன்சேதி யென்னவென்று
நாடியே கேட்க நலமெனக்குச் சொல்லினரே

விருத்தம்.

சொல்லுவது உலகைதனி லெவருமில்லை
சோதிமதி பூரணமே சொந்தமாக
வல்லபம தாயெடுத்து உண்டேனப்பா
வாய்த்துதையா யெந்தனுக்கு மனைவிதானும்
இல்லரமுந் துறவரமு மெனக்கேசித்தி
இருதயமுங் கலங்காம லேறிப்பார்க்க
நல்லபொரு ளிதுவென்று நாடினேன்யான்
நாதாந்தத் திறவுகோல் தன்னைப்பாரே.

நொண்டிச்சிந்து.

முன்னுரைத்த மொழிகளெல்லாம் நாடிசுத்தி
முதன்மைய தாகவே சொல்லிவிட்டேன்
இன்னமொரு சேதியுண்டு ரகசியம்
ஈன மடையர்களுக்குக் கெய்திடாதே

சொன்னபடி கற்பங்கொண்டால் வருடமது
சுகமுடன் பனிரெண்டு மானபின்பு
அன்னமது வேண்டாது காயமும்
அலக்காக வேமெத்த உலக்களிக்கும்

தன்னினைவு தான்மாறும் விந்துவுந்
தனைவிட்டுத் தனியே பிரிந்துவிடும்
உன்னியே சனிகையிடஞ் சேர
உற்பனம தாகுமந்த நாதமுந்தான்

தழைத்திட்ட நாதமதில் சனிகையிடந்
தைரிய மாயமுதந் தான்வாங்கி
குழைத்தமை போலரைத்து வெருகடி
கொண்டாயே யாமாகு லுன்தேகம்

சொர்ச்சகம்.

தேகம் பரிமளமாய்ச் சீர்பெறவே தான்மணக்கும்
பாகமுடன் பத்தாநாள் பசும்பொன்போற் றுனுதும்
தாக மிகுமதற்கு சந்தேக மேதுமில்லா
ஏகப் பசும்பாலை இளைப்பிலா துண்டிடுவாய்

## கொண்டிச்சிந்து.

இழைத்திடுஞ் சந்தனம்போல வாசனை
ஏக பரிமளமு தாய்வீசும்
அழைத்திட்ட பேரெல்லாம் வந்துவந்து
அடிபணிந் தேற்றித் தொழுதிடுவார்

தொழுதிடும் வேளையிலே புழுகுடன்
சொல்லுகிறேன் மூலப் புளிதனையும்
விழுதிடும் அமுரிதனிற் குழைத்து
மெய்யினிற் பூசி யுருட்டிவிட

தேகம்பொன் னிறமாய் வெகு
சீராக வேயிருக்கும் நேராகவே
பாகந் தவறுமற் செய்துவர
பழிவான நாம்பெல்லாம் வழுத்துவிடும்

அறைவீடு தனிலிருந்து கற்பம்
அன்பாகக் கொண்டவர்க்குத் தென்பாகவே
பறையி னருளாலே வெயிற்
படாமலிருந்து தீர்த்த மாவோய்

## கொச்சகம்

அறைவீட்டுக் குள்ளிருக்க ஐயாறு திங்கள்தனிற்
குறையொன்று மில்லாக் குழந்தை வடிவாகுந்
துறையான சேதியிது சொல்லிவிட்டே னுள்ளபடி
பறையாதே சொல்லிற் பழிபாவ மெத்தவுண்டே

மெத்தவுண்டாம் பத்தியத்தை விள்ளுகிறே னுண்டேகேள்
பத்தியுட னாவின்பால் பச்சரிசி தன்னுடனே
புத்தியாய்ப் பாசிப்பயறு போட்டுமே கஞ்சிவைத்து
ஒத்திருந்து காலமறிந் துண்ணுவாய் சொன்னேனே

சொன்னேனே ஏலேல சுந்தரனே பூரணத்தை
அன்னை யிடம்வாங்க அறிவித்தே னுந்தனுக்கு
உன்னமன மில்லா துலுத்தரைநீ சேராதே
தன்னு ளறிந்துண்பாய் சாற்றும் புளிதனையே

புளியை யருந்தி பூரணத்தை பூசைசெய்தால்
அழியா தவன்தேகம் அவனியுள்ள காலமட்டும்
தெளிவுடனே தானருந்திற் சேலாம் நல்லகெதி
வழியுடனே யுந்தனக்கு வல்லமையாய்ச் சொன்னேனே

வல்லமையாய் வாரவிதம் வன்மையெலாந் தானறிந்து
நல்லமன மாச்சுதென்றால் நாதவிந்து மூட்டுவேனே
சல்லாப மானமுறை தான்மறைத்தார் முன்னோர்கள்
எல்லா மறிந்தோர்கள் இதைவிட்டு பேசுவாரோ

விட்டதினாற் பூவுலகில் வீணருக்குத் தோணாது
சிட்டர் மனத்தோன் திருடாகச் செய்தொழிலை
விட்டகுறைக் காரருக்கு வேதமெல்லாந் தான்றோணும்
திட்டமுடன் சாவுவாரா தென்று உரைத்தேனே

விருத்தம்.

சாவதினாற் பலனென்ன ஒன்றுமில்லை
சமாதிகற்பஞ் சொல்லுகிற சார்புகேளு
ஆவதுவும் ஆதிபுளி யுப்பினாலே
அழிவதுவுஞ் சுகபோகத் தாசையாலே
பாவமது உண்டுடுத்தும் வகையினாலே
பாழான கும்பிதனைச் சித்திசெய்து
காவதுமெய்ஞ் ஞானச்சுழி முனையிலேற்றி
நாட்டில்வெற்றிக் கொடியதனை நாட்டினேனே

தரு

வெற்றிக்கொடி கட்டிவிட்டேன் வேதாந்தசார
வெற்றிக்கொடி கட்டிவிட்டேன்

வெற்றிக்கொடி கட்டிவிட்டேன்
மற்றுமுள்ளோர்க் குந்தெரியப்
பற்றுதலை நீக்கிவிட்டு
உற்றபரை நாதத்தாலே (வெ)

ஓங்காரவட் டத்திருந்து
தாங்கமுடி யாதுமையாள்
ஸ்ரீங்காரசத் தத்தில்வந்து
பாங்காயமு தங்கொடுக்க (வெ)

கற்பத்தை வெளியாய்ச்சொல்லி
உற்பனம தாயிருக்க
அற்புதமாய் லேகியமும்
சுற்பனேயி லாதுசொல்லி (வெ)

முப்பொருளை யின்னதென்று
உப்பெடுக்கும் வழிகண்டு
முப்புமுறை தன்னையுமே
தப்பிதமி லாதுசெய்து

கொச்சகம்

நித்தியமுங் கற்பமதை நேராக வுண்டுவந்து
சித்தியது பெற்றுச் செகமாயை தானகன்று
முத்தி வழிகண்டு மூவுலகோர் தானறிய
வெதநிக் கொடிகட்டி விட்டேன் தெரிந்திடவே

விருத்தம்.

வெத்தியென்ற கொடிதனையே கட்டியானும்
விபரமுட னுந்தனுக்கு வுரைத்தேன் கண்டாய்
முத்திதரும் பரைவீட்டில் வந்தேனந்த
மும்மலமும் முச்சுடரும் மூச்சுக்கீழாய்ச்
சத்தியுட தாளிணையைப் பணிந்துமூலச்
சதாசிவனைக் கண்டடியேன் சரணமென்று
சித்திதருஞ் சிதம்பரத்தின் ஒளியினுள்ளே
சிவஞான போதகத்தைத் தெரிசித்தேனே

நொண்டிச்சிந்து

திங்களும் பன்னிரண்டில் சில
தீட்சையு முடிந்தது உகாரதீட்சை
திங்களும் முப்பத்திரண்டு சத்தி
தீட்சையுஞ் சரியான பிற்பாடு

திங்களுந் தப்பாமற் கொள்ளத்
தேசிக னுகுஞ் சித்தாகும்
திங்க ளறிவறிந்தால் நல்ல
தீர்க்காயு ளென்றுமே செப்புவர்காண்

நெஞ்சு வலிகாணும் குடல்வெந்து
நெருப்பது போலுட லதுகாணும்
பஞ்சுபோற் றெண்டை வெடித்து நல்ல
பழுவெலும் பெல்லாம்நூல் போற்றுஞ்சி

துஞ்சிமெத்த வலிகாணும் கருவி
சுட்டு அருத்தெல்லாங் கட்டுவிடும்
அஞ்சிநீ யிளையாதே பின்பு
அசையாத யிருபபுத்தூண் போலாகும்

கொச்சகம்.

ஆகுமென்று முன்னம் அறைந்தேன் தெளிவாகப்
பாகுடனே கற்பம் பதமாகக் கொண்டவுடன்
வாகுடனே நோய்கள் மாகும் புளியாலே
ஏகுமென்று நீயு மிருப்பாய் சிவந்தேடி

கொண்டிச்சிந்து.

தேடியலை யாதேசொன்னேன் இந்தச்
செகத்தினிற் கைமுறைகள் கிடையாதே
நாடிகள் நரம்பெலும்பு பிருவாய்
காட்டிய குண்டலி வட்டத்துள்ளே

தேடியே தினம்பார்த்தால் கற்பூரத்
தீபச் சுடரொளி போற்காணும்
வாடிநீ யலையாதே பூரண
வாலைபா தநிதமும் போற்றிசெய்வாய்

உற்றதொரு புளியுடனே கற்பூர
உப்புடனே சாரம் பூரணமாய்ச்
சுத்தியது மிகவறிந்து செய்து
சூரிய புடமிட்டுச் சாப்பிடுவாய்

அதினல் வருங்குற்றம் யாவையும்
அன்புடனே சொல்லுகிறேன் நான்தெரிந்து
மதிநற் கதிகொடுக்கும் கொஞ்ச
மண்டையிடி கள்வரும் மலையாதே

கொச்சகம்.

மண்டையிடி நெஞ்சுவலி வாய்குழறும் நீர்வடியும்
தொண்டை யிடுப்புவலி தோளும் விறுவிறுக்கும்
பண்டைவி யாதியெனப் பண்பாய் நினையாமல்
தண்டையிடு மென்தாயைத் தஞ்சமென்று போற்றுவையே.

தரு திருப்புகழ்ச் சந்தம்

மனந்துணிந்துநீ செய்வாயே நிழ
லிருந்துயோகமு முய்வாயே பல
சனங்கள்யாவரு மறியாமல் மனச்
சலிப்புயாதொன்று மில்லாதேசெய நலமாமே

செய்தபின்புமீ மலையாதே பல
தினமுநல் லுணவையு மருந்தாதே பூவி
லுய்யும்படிசெய் யொருவேளை யுட
லொடுங்கியிருப்பது நல்வேளையிது பலமாமே

பாலைவனத்தினிற் செல்லாதே இந்தப்
பாங்கையொருவருக்குஞ் சொல்லாதே தினங்
காலைமாலைபூசை செய்வாயே பெருங்
காற்றிலாவிடமதி லிருப்பாயேயிது முடிவாமே

சாதிபேதகமு மெண்ணாதே பல
சரக்குமருந்துக ளுண்ணாதே பரை
நாதமமுதத்தைக் கொள்வாயே பல
நாளும்விடாமல்நீ செய்வாயேசரி முறையோடே

கொச்சகம்.

மூக்கோண வாசலிலே மும்மலமும் முப்பொருளாய்
அ.க்கோண வீதிதனி லைம்பத்தோ ரட்சரமாய்
சட்கோண வாலையுட தாளிணையைப் போற்றிசெய்து
எக்கால முந்திருவா என்று மிருப்பாயே

விருத்தம்.

திருவான ஆதார மூலாதாரத்
திருந்துமே கருநெல்லிக் காடுகண்டு
அறிவான வெண்சாரை தான்பிடித்து
அருந்தினேன் பன்னிரண்டு வருடமாக
தருவான கற்பகத்தின் விருட்சங்கண்டேன்
சாயுச்ய வாலைதனைத் தானுங்கண்டேன்
உருவான சத்தியைநான் போற்றிசெய்தே
உண்மையாய் நாதமது வாங்கினேனே

வாங்கிமளந் தளராமல் ஏலேலாநீ
வருந்திச்சிவ பூசைகளைச் செய்துபாரு
தூங்கிநீ திரியாதே யப்பாசொன்னேன்
துரியமடா அதீதவித்தைச் சோதியாக
வீங்கிவயிர் வெடிததிறந்து போகாமற்றான்
வேதாந்தம் நாதாந்தம் விரித்துச்சொன்னேன்
பாங்கியுட னைத்திருந்தே உலகுதன்னிற்
பார்த்தவீரோ வேதாந்தப் பெரியோராண்டே.

வேதாந்த மாவதுபூ ரணமேயாகும்
வேண்டியது உன்னுக்குள் மெத்தவுண்டு
மாதாந்த மானதொரு பூவைவாங்கி
வரிசையுடன் மையதுவாய் வைத்துக்கொண்டு
தேசாந்தரம் போயலைந்து திரியவேண்டாம்
தேவியுட பாதமதைத் தரிசித்தேநீ
வாதாந்தம் பேசாதே அந்திசந்தி
மாட்டுவாய் இருவேளை வரிசைதானே.

தானென்ற வருடம்பன் னிரண்டேயானால்
சதாசிவனு மிவன்றானே சாவேயில்லை
மானென்ற மாதருட ஆசைவிட்டு
மானிலத்தோ ராசையுட மயக்கம்விட்டுத்
தேனென்ற சிவகலைபா லுகமேழுந்
தேடாமற் பார்க்கமனத் தெளிவுண்டாகிக்
கோனென்ற பூதமைந்தின் கருவைக்கண்டு
குவலயத்தில் வாழ்ந்திருக்கக் கூவினேனே.

கொச்சகம்.

கூவினேன் இன்பங் குருவுள்ள வித்தையிது
ஆவியென்ற பூதம் அலையுந் துணியாது
பாவியென்ற யிந்திரியப் பாம்பு பிடியாமல்
தாவியே பூரணத்தைத் தான்தொடவு மாட்டாரே.

தொட்டாலு முட்டுஞ் சுடுகாடு புக்காமல்
தட்டாலுந் தட்டித் தலைகிழியப் பாயுமென்றேன்
அட்டாள தேசம் அலைந்து திரிவாரைக்
கட்டாமற் கட்டக் கயர்நாதங் கண்டேனே.

விருத்தம்.

நாதவிந்து பூரணத்தோ டுண்மைசொன்னேன்
நன்மையுள்ள புளியுப்பு நன்றாய்ச்சொன்னேன்
சூதறிந்து வழலையுட மார்க்கஞ்சொன்னேன்
சுண்ணமதாற் சரக்கெல்லாம் நீறுஞ்சொன்னேன்
சாதனையாய்க் கற்பமுண்ண முறையுஞ்சொன்னேன்
சடலமது படும்பாடு தானுஞ்சொன்னேன்
வேதயெனத் தெரியாமல் மாண்டார்கோடி
வெறும்பேச்சுப் பேசியே உருண்டார்பாரே.

உருளாம லிருப்பதற்குக் கற்பமுண்டு
உண்மையுள்ள குருபதத்திற் றெண்டுசெய்து
வெருளாதே முன்னுரைத்த முறையைப்பார்த்து
விட்டுவிட்டாற் கெட்டுவிடும் விந்துபாழாம்
இருளான கருவியுன்னைக் கொல்லுங்கொல்லும்
எவர்தேறப் போறூர்க ளென்றெண்ணாதே
மருளாம லிருப்பவரே பெரியோராகும்
மாதருடன் வையகத்தில் வாழலாமே.

வண்ணச்சந்தத்தரு

மனதுத்தம ஞன சீடர்கள்
வகையுற்றிட வந்து கேட்டிடில்
சினமெப்படித் தானே மின்னிய
திறமட்டிகள் போலே பூரணம்
செயலெப்படித் தானே வேறொரு
திறமொத்திடு ஞானத் தெளிவிது
எனமுற்றவர் தன்னுடன் கூடியே
இயல்பாகவே நாடிக் கண்டுமே
இணைபிரி யாமலே துணைமற வாதேநீ
பிணைவழி மாதர்கள் தனையுகற்றிடு (மன)

விடையத்திரு வாகிய நகைவிழி
மிகநெற்றியில் வேர்வை கழன்றிடும்
துடையிட்டற மேல்வயி றுப்பதும்
சுகமாகிய அமுதக் கவசமும்
நடைமெத்த நடந்துபி லுக்கியே
நவில்சாயல்கள் காட்டி மயக்கியே
உடைகட்டியே மையல்க ளூட்டியே
உலகத்தையே சாம்பல்க ளாக்கிடும்
ஒருவழி யில்லாமற் பெருவழி காட்டிடுஞ்
கருவுள மாதர்கள் வரும்வழி செல்லாதே (மன)

கொச்சகம்.

வரும்வழிகள் சொன்னேன் மகிழ்வா யமுதமது
தரும்வழிகள் கண்டுதான் பூசை கொண்டவுடன்
பெருவழியைத் தானும் பேணியினிப் பார்க்கணுமோ
உரிமை வழியீதென்று உகந்துமே கூடினனே.

வண்ணச் சந்தத் தரு

கூடிய பூரண மேதெய்வங் கூறிய சக்கர மூள்மூலம்
ஆடிய பாதமே பொற்கோவில் ஆறு தாரமே மெய்ஞ்ஞானம்
நாடிய விந்து சந்திரனும் நாதாந்த வேத பராபரனும்
தேடிய நட்சத் திரமதனில் தெளிவா யிருந்தாள் திரிபுரையே

ஆதி சொரூபம் புளிமூல மனேவோர்க்குந் தெரியும்வெளிமூலம்
சோதிச் சுடரே சந்திரனுந் துலங்கும் நாதஞ் சதாசிவமாம்
நீதிய தான அண்டக்கல் நேராமிடியி னுற்பனமாம்
பாதி மதியணி பரமசிவன் பாக்கிய மாகத் தந்ததுவே

உந்திச் சுழிமுனை வேறுகும்
உற்ற சுழிமுனை தன்னிலேதான்
அந்தி வண்ண னிருப்பிடமாம்
அம்பிகை வாலை சேர்ந்தயிடஞ்
சந்தி யறிந்து அமுதமதைத்
தானே வாங்கி யருந்திடிலோ
முந்திச் செய்த தோஷமும்போம்
மூப்பு முடிந்த யிடமிதுவே.

பரிசுத் தமதாய் நீதானும்
பார்பிங் கலைதனை யனுதினமும்
தெரிசித் திடுவாய் சந்திரனைச்
சேரச் செய்வாய் சூரியனில்
வரிசைப் படியே மெய்ஞ்ஞானம்
மௌன சமாதி தனில்நின்று
குறியே தவறு திருப்போர்கள்
கோடியி லொருவர் தான்பாரே.

விருத்தம்.

ஆறிலோர் கடமை கொண்டே அம்பரத் தேறிப் பார்த்து
வேறிலோர் கடமை கொண்டு விட்டதோர் குறையி ருந்து
மீறியே யுலகோருக்கு விரும்பிமுன் நூறுஞ் சொன்னேன்
சீறியா யிரத்தைந் நூற்றிற் றெரிந்திடு முறையைத்தானே

தரு கண்ணிகள்

வாலையபி ராமி மாதுமை பாதத்தைப் பாரும்—திரு
வள்ளுவன்நான் நீசொன்ன வசனப்பிர காரஞ் சேரும்
ஞாலத்தி லேறிய மூலமுனைச்சுழி பாரும்—இந்த
நட்சத்திர வீட்டினில் நாதவிந்து தனைச்சேரும்

குத்துவ லியுங் குடைச்சல் மிகவே காணும்—மலக்
குய்ய மிருந்துபல் கூச்ச மதிகமாய்த் தோணும்
தொத்து வலிக்குஞ் சொருகு மயக்கமுங் காணும்—உந்தித்
தொப்புள் தனிற்சுத்தி கெற்ப வலிபோலத் தோணும்

இஞ்சி தின்றகுரங் காகிடும் வாயும்புண் ணாகும் பொல்லா
நீளையுங் காச மிருமலுங் கோழையுண் டாகும்
சஞ்சலமில் லாதிருக்க யில்லாவது வேகும் எளி
தல்ல மெத்த யிடையூறு போல்வந்து தான்சேரும்

பாலான வாலையை பூசிக்க யிற்பாவம் போகும் மிக
பக்குவ மாகையில் தாபசோ பங்களு மாகும்
மேலான கற்ப முறையுண்ண வக்கால மாகும் முன்பு
வேண்டிநீ செய்த வினையிருந் தாலது வாகும்

விருத்தம்

எளிதான வித்தைகள்தா னுலகிலுண்டோ
எவரறியப் போறார்க ளிந்தக்கூறு
களியான களிச்சுண்ணம் வகார மார்க்கம்
கைமுறையுஞ் செய்முறையுங் கருவாய்ப்பாரு
பூளியான புளிப்பதுவைப் பின்னேயுண்ணு
பூரணத்தின் பெருமைதனைப் புகழ்வாருண்டோ
அழியாம லிருப்பவரே பெரியோரையா
ஆதியுப்பால் வாதமதை யடக்கினாரே.

கொச்சகம்.

வாதமிது வேயுலகில் வாய்ப்பேச்சி னால்வருமோ
சாதனையாய்க் கற்பமுண்டால் தான்வருமே யல்லாது
வேத மறிந்தோர் வெகுசித் தடைந்தார்கள்
நீதமுடன் விட்டகுறை நிச்சயமென் றெண்ணுண்டே

விட்டகுறை யானுலகில் வேதமிக வேதேடிக்
கட்டறிய மாட்டாமற் காசினியி லேயலைவார்
பொட்டியதில் வைத்த பொருள்போலே சொல்லிவிட்டேன்
திட்டமுடன் கண்டவர்கள் செய்தறிவா ரிப்படியே

வெண்பா.

இப்படியே பூவுலகி லேங்கினா ரெல்லோரும்
தப்பிதமி லாதிநூல் சாற்றினேன்—இப்பொழுது
உந்திச் சுழிமுனையி னுற்பனமாய் நின்றிலங்கும்
சந்தித்த பூரணமே தான்.

### தரு கண்ணிகள்.

அஞ்செழுத்தைம்பூத மைம்பத்தோ ரக்ஷரந்தோறும்-நிதம்
அண்டபிண்டமும் அகாரவெளியில்நீ பாரும்
பஞ்சணைமீதிற் படுத்துறங் காமலேகாரும்-பின்னும்
பத்தியத் தோடாவின் பாலுடன் அன்னத்தைச் சேரும்

குன்றி கழஞ்சளவை வீதமூலத்தை தானும்-இன்பங்
கூடிய பூரணம் விந்துவை யுட்கொளக் காணும்
நன்றி யுடனே பராபரை பாதமுந் தோணும்-அந்த
நாதாந்த சத்தியின் நாதத்தைக் கண்டிடவேணும்

கற்பூர தீபச் சுடர்முனை பார்த்துநீ கூடு-மனக்
கர்ம வினையுங் கருவி யறுத்திடத் தேடு
உற்பனமான குழியையுந் தள்ளிவிட் டோடு-பின்
னுற்று ருறமுறை யார்களை யுந்தள்ளிப் போடு

குண்டலி சத்தியின் நாதமறிந் திடவேண்டும்-வெகு
கோலா கலமா யிருந்து யுகங்களை தாண்டும்
வண்டர்க ளோடு இருந்து நீகெட்டு விடாதே-இந்த
மர்மந்தெரிந்து ஒருவற் கிடமுஞ் சொல்லாதே

### விருத்தம்

பூவாகிப் பிஞ்சாகிக் காயுமாகிப்
புத்தியறிந் துற்பனமாய்க் கிழங்குமாகிச்
சாவாதப் பிழைப்பாகிச்சாரா சாரமுமாகிச்
சங்கையுட னிங்கிதமாய்ச் சைவமாகி
மாவான மவுனபுளி யுப்புமாகி
மகத்தான சமாதிகற்ப வடிவுமாகிப்
பாவான நூலாகிப் பஞ்சுமாகிப்
பழுத்தமயிர் கறுத்துவரும்நாடிப்பாரே.

நாடிநரம் பெலும்புடனே வலுத்துத்தேகம்
நட்டுவைத்த கற்போலாம் நரையிராது
சூடியதோர் பூவாக விந்துவட்டச்
சுழிமுனையிற் பாய்ந்துறைந்து நீதமாக
ஓடிவெகு பேர்கள்வந்து பணிவார்பாதம்
உயர்வீணை போலுமிவன் சத்தந்தானும்
தேடியவர் தனைக்காணக் கடினமெத்தச்
சிவசிவா நிஷ்டையிலே சேர்வாராண்டே.

தரு நாதநாமக்கிரிகை

உற்பனஞ் சொல்லுகிறேன் ஆண்டே
உற்பனஞ் சொல்லுகிறேன்

உற்பனஞ் சொல்கிறேன் மூலாதாரத்தினில்
ஓங்கார வட்டச் சுழிமுனை மீதினில்
விற்பன மாகமேல் மூலத்தி லேயொரு
வெட்ட வெளியின் விசாலத்தி லேநின்று
கற்பூர தீபச் சபாமண்ட பராசன்
காளியின் நிர்த்தன மாடிடும் வேடிக்கை
வெற்பூத மாகவே விண்டவர் கண்டிலர்
வேத மிதுவறி யாமற்று ணண்டையே (உற்)

நாட்டிய குண்டலி வட்டத்தின் மேலேதான்
நாற்சதுர் பீடம நகார மதனுள்ளே
ஊட்டிய சந்திர கோணத்தில் முக்கோணம்
உத்தம ஞானப்ர காச மதனுள்ளே
பூட்டிய சூரிய சக்கரத் தினுள்ளே
பூரண வாலைச மாதிக ளுமங்கே
கோட்டிகள் மெத்தக் குருவரு ளாலேதான்
கூடின பேர்க்குக் குறையில்லை யாண்டேபார் (உற்)

சாகாத காலுஞ் சவுக்கடிக் குள்ளேதான்
தந்திர மாகச் சதுர்க்கோண மீதினில்
வேகாத் தலையும் அமுத மதுவுண்ண
வெட்ட வெளியாகும் வேத பரஞ்சோதி
வாகாக வேஅறு கோணத்தின் மீதேறி
மாதளம் பூநிற வாலையின் பாதத்திற்
பாக முடனே பணிந்துற வாடிடிற்
பார்பதி ஞரும் பருவம் பாராண்டே. (உற்)

கொச்சகம்.

நாடியிரு வட்டமுனை நாதாந்த விந்துவைத்தான்
சூடியதோர் பூரணத்தைச் சொல்லுவே னுற்பனமாய்
கூடியிருத் தேயலைந்து கூவினதா லாவதில்லை
மூடியந்த வட்டம் முனைசுழியைப் பாராண்டே;

தரு

விட்டறிவு சொல்லுகிறேன் ஆண்டே
விட்டறிவு சொல்லுகிறேன்

விட்டறிவு சொல்லுவேன்நான்
பட்டதுய ரத்தையல்லோ
நட்டமாம் புத்தியிலே
சுட்டெரிந்த கொள்ளியாச்சு (விட்)

குத்துமிதி போலக்கடுக்கும் சரீரமெல்லாம்
குடைச்ச லதிகமிருக்கும் மயிர்சிலிர்த்து
மெத்தவே தலையுமிடிக்கும் கண்ணெரிச்சலும்
விரிந்துபுண் ணுகுந்தொண்டை யாருதாரமும்

பத்தியெரி யுங்குடலும்
பதைக்குமீ ரல்துடிக்கும்
எத்தனைநா ளிப்படிக்கு
இருக்குமென் றெண்ணிடாதே (விட்)

ஆவியுமலையு மேநொந்து உடற்கருவில்
அல்குலும்புண் ணுகவிரிந்து எலும்பினுள்ளே
நீவியே கடுக்குமேநைந்து தேகங்களெல்லாம்
நெட்டுநெட்டாய் வருமதை நினைக்காதே

மேவியஞா னங்களெல்லாம்
பாவிகட்குக் கிடையாது
தாவித்தாவி யலைந்தாலும்
தன்மைவெளி யாகுமோபோம் (விட்)

திட்டமதாய்க் கட்டடங்கண்டு அதற்குள்ளே
சென்றிருந்து கண்டதைவிண்டு சொல்லாமற்றூனும்
பட்டப்பக லோர்வேளையுண்டு யுறங்கிடாதே
பக்குவமாய் வாசிவழி யமுதம்வரும்

நட்டணைக ளொன்றில்லாமல்
நாரியர் கண்ணிற்படாமல்
விட்டகுறை யாலுலகில்
மேதினியிற் கிட்டினதால் (விட்)

விருத்தம்.

சொல்லுகிறேன் பூரணத்தை நன்றாய்த்தானுஞ்
சோதிமதி யாயிருந்த சூக்ஷமெல்லாம்
வெல்லுவேன் கற்பமுறை தன்னைத்தானும்
விரித்துரைத்தே னிந்தமுந் நூறுதன்னில்
வல்லபமாய்ச் சொல்லவில்லை பார்த்துத்தேரு
வகைவிபரங் கற்பவிதி மார்க்கமெல்லாம்
நல்குவேன் பட்டசள மெத்தவுண்டு
நன்மையுடன் மேனியைப்பார் நவில்வேனுண்டே

கொண்டிச்சிந்து.

மேனியும்வெ ளுத்துவந்ததே தேகம்
மெத்தவுமே சந்திரன்போற் காந்தியானதே
ஞானியென்று சொல்லுவார்களே அன்னியில்
நற்பதவி யின்னதென்று தெரியார்களே

என்னசெய்வேன் மாநிலத்தில் ஒருவரும்
இதையறி யாமலே யிறந்தார்கள்
சொன்னாலுங் கேளார்கள் சாஸ்திரச்
சுருக்கத்தை யறியாமற் றவிப்பார்கள்

ஆயிரத் தைந்நூற்றில் மெத்த
அற்புத மாகவே விற்பனத்துடன்
தாயுந்தந் தையுமிருந்து புத்தி
தான்சொன்ன பாவனை போலச்சொன்னேன்

கற்ப முறைகளெல்லாம் மறையாமற்
கழறினேன் யாவருக்குந் தெரியவேதான்
சிற்பரை யருளாலே ரத்தின
சிந்தாமணி யெண்ணூறு தெளிவாக

உரைத்தேன் புவிமீதில் வழிதெரிய
உண்மைபஞ்ச ரத்தினமைந் நூறுசொன்னேன்
நிரைத்தயிந் நூலுக்கெல்லாம் குருவாக
நேத்திரமா மிந்தநூல் சூஸ்திரமாகும்

சகலமும் வெளியாக யாவருக்குந்
தான்தெரிய வேணுமென்று மேன்மையுடனே
இகமதிற் கற்பமுறையை வழியாக
இயல்புடன் மூந்நூற்றில் தெளிவாக

விரித்துநான் சொல்லிவிட்டேன் இந்தநூல்
மேதினி யோர்கட்குக் கிடைத்தாக்கால்
கருத்துடை யோனுவான் இக்கக்
காசினியிற் சித்தனென்று பேரும்பெருவான்

விருத்தம்

பூரணத்தை யின்னதென்று காணமாட்டார்
புளிவழலை யின்னதென்று அறியமாட்டார்
காரணத்தை யறிவதற்குக் கருத்தைக்காணார்
கயிலாச மின்னதென்று காணமாட்டார்
ஆரணத்தை யறிந்தவனே யோகசித்தன்
அறியாம லலைந்தவனே லோகப்பித்தன்
வாரணத்தாய் பதம்பணியக் குருவுமாச்சு
மவுனமென்று சந்ததமு மறியாராண்டே.

சந்ததமும் மவுனமுற்றே யிருக்கும்போது
தலையுமொரு புறம்வலிக்கும் தவனமாகும்
வெந்துவிடும் நீர்த்தாரை விரிந்துபுண்ணும்
மேனியுமே அசந்துமெத்த வெளுப்புண்டாகும்
நொந்துவிடும் மோகமுமே அதிகமாகும்
நுணுக்கமிதை நினைக்கையிலே நோயுண்டாகும்
பந்துதனப் பாவையர்மே லிச்சைகாணும்
பலங்குறையுங் குடலிரையும் பண்பாய்ப்பாரே.

குடலிரைச்ச லுடனேபூ ரணத்தைத்தானும்
கூடியனு பவிக்கையிலே கூகூவென்ன
மடைதிறக்க வொட்டாது மூலாதாரம்
வாய்குன்றி யுள்ளிருந்து வருகும்பாரு
படபடத்து மேனியெல்லாம் வேர்க்குமூச்சைப்
பத்தியல்லோ யெறியுமந்த லிங்கந்தானும்
சடலமது படும்பாடு முன்னேசொன்னேன்
சாந்தமாய்ப் பாந்தமாய்த் தானுப்வாயே.

கலித்துறை

பந்தாடும் பூமுகை வந்தாலும் நல்ல பருவத்திலே
நொந்தா ளுடம்பு நுகர்ந்தா ளறிவினில் யூகமெல்லாம்
தந்தால் பெருத்துச் சடைத்தாளம் மாயதனைத்தட்டிப்பின்பு
எந்தாய் தெரியும் புகழ்தா னதிலென்ன இன்பமென்றே.

தரு கண்ணிகள்

வாதவிதி சொல்லுகிறேன் ஆண்டே
வாதவிதி சொல்லுகிறேன் (வா)

வாதவிதி யிதுவென்று நாத னுரைப்படிக்கு
பூதத்தய வுன்றுழைந்து நாதமதைத் தானெடுத்து (வா)

இப்போ துலகமதில் எவரு மறியார்கள்
மூப்பூவும் பூரணமு முறிக்க ஜலமதாகும் (வா)

சாக்கு மறுபத்தினல் சரக்கு வகைகளெல்லாம்
இருக்கும் வகைமெழுகு மென்றும் உருத்தெரிய (வா)

அறுபத்து நால்சரக்கும் ஆகமெழுகு சுண்ணம்
மறுவற்ற ஜலமதில் மாதா வெனக்குரைத்தாள் (வா)

அடியு முடியுமோமம் கொடியும் வெடியுங்கூட்டி
மடியு மதிற்சரக்கு மாதுமையாள் பூரணத்தில் (வா)

துருசை யதிற்றுவைத்து சூரியனில் வைத்தெடுக்க
மருவற்ற நீராகும் வாய்க்கும்பத் தரைமாற்று (வா)

சூதவித்தை யாலேதானும் வாதவித்தை யாகவேணும்
நாதசத்தி நீர்வடிந்தால் நவலோகம் பொன்னதாகும் (வா)

விருத்தம்.

மலஜலமும் பானையிலே பிடித்துவைத்து
வாலையது வைத்துமே மருவிக்காய்ச்ச
நிலப்புகழப் பன்னீர்போற் ஜலமும்வீழும்
நிச்சயமாய்ப் பிங்கானில் வாங்கிக்கொண்டு
தலப்புகழச் சரக்கனைத்துந் துவைத்துப்போடத்
தனித்தனியே சுண்ணமொடு பற்பமாகும்
பலம்புகழ வாதமிதி லடக்கிப்போட்டேன்
பாருமினி வந்தவளி பகர்வேனாண்டே.

கொச்சகம்.

சந்துவலி யோடுந் தலைநோயுந் தானெடுக்கும்
விந்தைவிந்தை யாகவுமே பெய்யெல்லாந் தானேகும்
முந்தவுடல் கைகால் முகமெரிச்சல் தான்காணும்
இந்தவிதம் ஆர்படுவா ரென்றியம்பி னேனாண்டே.

தரு

இன்னமுந்தா னென்ன சொல்லுவேன் ஆண்டே
இன்னமுந்தா னென்ன சொல்லுவேன் (இ)

இன்னமிதி லென்னசொல்வேன்
முன்னஞ்சொன்ன கற்பமுண்ண
நன்னயமாய்த் தேகமது
பொன்மயம்போ லாகுமேபார் (இ)

துய்யவே கைகா லசருமே நாடிநரம்பு
சுருக்கி யிழுத்துப் பாயுமே எந்நேரமும்
மெய்யறிவு விளைமுற்றுமே மனது
விரிந்து குவிந்துபாயுமே பத்தியகாலம்

தொய்யுமே மனமுமெத்தச்
சோம்புமே துயாமாகி
வையகத்தி லிந்தவார்த்தை
வாகுடன் சொல்லுவே னாண்டே (இ)

துத்திப்பூப் போல்விரியுமே லிங்கத்தைச்சுற்றி
தோலிலேவேக் காடுகாணுமே சனிகையாகை
பத்தியிழுத் தேவருகுமே மனம்விரிந்து
பார்க்குதே சுருங்கவிடாமே இதுபோலாக

எத்திசையும் காணேனந்த
நத்தியகோ ரணிகளால்
சத்தியமாய்ப் பட்டபாட்டைத்
தாரணியிற் சொல்லிவிட்டேன் (இ)

அன்னமது வேண்டுதேயில்லை யிளம்பசியும்
அரைநாட் பொருக்குதுமில்லை முன்னமேநான்
சொன்னதுபோல் பசிமீறுமே சுணைமாலிச்
சொக்கியேயின் றுடல்சோருமே படபடத்து

நன்னயமாய் நாவறண்டு
நாடியுந் தழன்றுபின்பு
பொன்னுகுந் தேகமினிப்
பூரணத்தில் விந்துறையும் (இ)

வெண்பா.

விந்து வுறைந்ததுகாண் மேனி சிவந்ததுகாண்
கந்தவிழிக் கக்ஷிம்போற் காணுதுகாண்—சந்தயமோ
வீணைத் தொனிகாணும் மேனி பலமாகும்
நாணயமாய்ச் சொன்னேன் நயந்து.

## வைத்திய மூப்பு

பூநீரெடுக்க விருத்தம்.

நல்லதை மாசிபங் குனியிமேலதான்
        நலமான பூநீரு எடுக்குங்காலம்
வல்லவமாய்ப் பூநீரு விளைவிடத்தை
        மகிழ்வாகக் கண்டுமதை மாதந்தன்னில்
மெல்லவே தானேகி யிடத்தைப்பார்த்து
        வேணுமென்ற இடந்தனையுங் குறிப்பிட்டேதான்
கல்லவே குடிசையொன்று கட்டிக்கொண்டு
        காத்திருந்து பூநீற்றை யெடுக்கக்கேளே.

கேளேநீ எடுப்பதற்கு வகையைச்சொல்வேன்
        இருபையுடன் அங்கிலத்தில் பனிவிழுந்தால்
தாளேபார் முரைபோலும் உப்புப்போலுந்
        தான்பூத்துக் கொண்டிருக்கும் கதிர்காணுமுன்
காளேதான் சாடியிலே யெடுத்துப்போட்டு
        நலமாக வேணமட்டுஞ் சேர்த்துக்கொண்டு
கோளொன்று மில்லாமல் வெயிலில்வைக்கக்
        கொடியஉப்புப் பூத்திருக்கும் பார்த்துக்கொள்ளே.

பார்த்துமே அதையெடுத்து வைத்துக்கொண்டு
        பண்பாக அடிமண்ணில் கங்கைவிட்டு
சீர்த்தியுடன் முன்பிசைந்து தெளிவிறுத்து
        தெளிவதனை வெயிலில்வைக்க உப்பதாகும்
ஆர்த்தியுடன் முன்பெடுத்த உப்போடேதான்
        அன்பாக வேசேர்த்து வைத்துக்கொண்டு
நேர்த்தியுடன் பூநீரும் விளைந்திடத்தில்
        நினைவாகத் தான்தோண்டிப் பாருபாரே.

பாரேநீ மாதம்பத் தானகற்பம்
பண்பாக வேயிருக்கும் அண்டக்கல்லு
நேரேதான் சத்தியுட நாதமாகும்
நேர்மையுடன் ருனுறைந்து கல்லதாச்சு
சீரேதான் தைநீத்தி யுப்பெடுத்து
சிறப்பாக அதைத்தானும் வைத்துக்கொண்டு
தாரேதான் சத்தியிடம் பூசைசெய்யத்
தருவாளே காயமென்னும் நாதம்வாங்கே.

காயமென்றுங் கற்பமென்றுங் குளிகையென்றுங்
கருவென்றும் புளியென்றும் விந்துவென்றும்
தாயகமா மும்மூலப் புளிதாமென்றும்
சத்தியுட நாதமென்றுங் குருவண்டென்றும்
நேயமுப்புத் தானென்றும் பூர்ணமென்றும்
நிலைமைபெற்ற கற்பலே கியங்களென்றும்
மாயமாய்ச் சித்தர்களும் வெளிவிடாமல்
மறைத்துமே சொல்லினது நாதந்தானே.

நாதமுடன் விந்ததுவுங் கருக்குழியில்
நலமாகப் பாய்ந்தவுடன் கருவுமாச்சு
பேதமில்லா வுருவாகித் திரளலாச்சு
பின்புநா ளுக்குநாள் காயமாச்சு
மதமது பத்தானல் விழவுமாச்சு
மண்ணின்மே வந்தவுடன் பசளையாச்சு
சேதமொன்று மில்லாம லெடுக்கலாச்சு
தேவியுட அருளாலே வாங்கலாச்சே.

வாங்கினபின் பூரணமென் றிதன்பேராச்சு
வகையுடனே தீட்சையது செய்தபின்பு
பாங்கான புளியாச்சு மூலமாச்சு
பக்குவத்தா லேகியமுங் குருவண்டாச்சு
நீங்காமல் தின்றதினற் கற்பமாச்சு
நிலைபெறவே உண்டைசெய்யக் குளிகையாச்சு
தாங்காத காரஉப்புஞ் சாரஞ்சேர்த்துச்
சரியாகப் வைத்தியமுப் பூவுமாச்சே.

முப்பூக் காயாதி முடித்தே னொருவாரு
தப்பிதங்க ளில்லாமல் தான்சொன்னே னுந்தனுக்கு
இப்புவி யோருக்கு மியல்பாய் வயித்தியத்தின்
முப்புக் குருவையுநான் மூடிக்கிறேன் பாராண்டே.

## முப்புக்குரு

தரு

குருமுடிக்குகிறேன் வைத்தியக்
குருமூடிக்குகிறேன்
குருமுடிக்குறேன் கோடிசாரக்கதை
அருமையுடனே அருளுடனீத்திடக் (குரு)

மகரகும்பமீன மாதத்திலேயன்று
வாகாயுப்பூனீரை யெடுத்துக்கொண்டுவந்து
அகரமுதலாயீரைந்து தீட்சைசெய்து
அன்பானஉப்பையெடுத்து வைத்துக்கொண்டு (குரு)

கஞ்சியுப்பைக் கரைத்துத்தசதீட்சை
கட்டாயமாய்ச்செய்து உப்பையெடுத்துமே
அஞ்சாமல்வெடிடப்பை ஐந்துதாங்காய்ச்சி
அன்பாகவேதானுந் தென்புடன்வைத்துமே (குரு)

சங்கையாய்மூன் றுஞ் சரியிடைசேர்த்துமே
சத்தியமாய்ப்பழச்சாற் றினிற்போட்டுமே
மங்களமாய்க்கொதித்துப் பின்னிறக்கியே
மாசில்லாதெண்ணெல்போய் நீறிவெழுத்திடக் (குரு)

சித்திதரு முவர்வெள்ளைக் கல்தன்னையே
தீரமாய்நீத்திநான் சுண்ணும்பதாக்கியே
பத்தியுடனேயிடைக் கிடைசாரத்தை
பண்பாகவேபோட்டு வீரம்பூரமிட்டுக் (குரு)

நற்பணிவைத்திடவே செயநீரதாம்
நாட்டமுடனேயதை யெடுத்துவைத்து
பொற்பணியாகவே மூன்றுப்புங்கல்வத்தில்
பூரணமாய்ச்செய நீர்விட்டரைத்துமே (குரு)

அரைத்ததோருப்பையும் வில்லைகள்தட்டியே
அன்பாய்ரவியி லுலர்த்தியெடுத்துமே
நிரைதவருமல் பத்துயெருவினில்
கோரகவைத்துப் புடமிடச்சுண்ணமாங் (குரு)

இந்தகற் சுண்ணத்தை யெல்லாச் சரக்கிலும்
இட்டுப் புடமிட்டுச் சுண்ணங்க ளாக்கியே
சிந்தை மகிழ்வாக வேண்டுஞ் சுண்ணங்களை
செய்துகொன் பார்த்து சிறப்புடனே தானும் (குரு)

விருத்தம்.

மூப்பூவு முடிந்துதப்பா பாருபாரு
மூதண்டச் சரக்குகட்குக் கொஞ்சமீயத்
தப்பிதங்க ளில்லாமல் நீறிப்போகும்
தடையின்றிச் செய்தறிந்து பார்த்துக்கொள்ளு
எப்பொருளும் வகைவிபரந் தெரியவென்றால்
எண்ணூறும் ஆயிரத்தி ஐநூறும்பார்
அப்பொருளைக் கண்டறிந்தால் வாதியாவான்
அதீதமுப்பூ இதுதானே அறிவாய்நீயே.

அறிவாய்நீ யோகமது செய்வதற்கு
அன்பாகப் பதினாறு வயதின்மேலாய்ச்
சிறியதொரு பருவமதே நல்லதாகும்
சிறப்பான வயதுமுப் பதுக்குள்நன்று
குறிபோலே முப்பதுக்கு மேலேதானும்
குலவுநாற் பதுக்குள்ளே சமமதாகும்
நெறியாகும் நாற்பதுக்கு மேலேதானும்
நேராமைம் பதுவரைக்கும் வருத்தமாமே.

வருத்தமது ஐம்பதுக்கு மேலேதானும்
வயதறுப தாகிடிலோ பலனேகொஞ்சம்
திருத்தமுட னறுபதுக்கு மேலேயப்பா
செய்தாலுஞ் செய்தபலன் கிட்டுமப்பா
பொருத்தமிலா எழுபதுமேற் கூடாய்ப்போகும்
பொருந்தாது மறுஜெனனம் வாய்க்கும்யோகம்
அருத்தமுடன் பன்னிரண்டு வருடஞ்செய்து
அதுமுடிந்த பிற்பாடு கற்பங்கொள்ளே.

கற்பமுப்பு.

கற்பமது கொள்ளுதற்கு மார்க்கங்கேளு
கருவாக யோகமது புரிநாட்கொண்டு
அற்புதமாய்ப் பன்னிரண்டு வருடமாரி
அதுமுடிந்த பிற்பாடு கற்பங்கொண்டால்
சற்பனைக ளொன்றுமில்லை தேவிகிட்டத்
தானிருந்து நாதாந்தர் தானுங்கொண்டு
விற்பனமாய்க் கற்பங்கள் லேகியங்கள்
வேணுமென்ற மூலப்புளி தானுஞ்சேரே.

சேரேநீ தேகமது வலுத்துப்போகும்
சிவனுமையும் நீயாவாய் வேறொன்றல்ல
நேரேநீ கவனமது செய்யலாகும்
நிலமையுள்ள சித்தனென்று போதாகும்
பாரேநீ யுலகமதை வெறுக்கலாகும்
பண்பான வுணவுகளை நீக்கலாகும்
தேரேதான் உன்தேகம் பொன்னதாகும்
சித்திமுத்தி யின்னதென்று செப்பலாமே.

இன்னமொன்று சொல்லுகிறே னப்பாகேளு
இல்லாளு மாகாதென் றியம்புவார்கள்
கன்னலாய் யோகமது செய்யும்போது
கனிவான பெண்ணவளு மாகாதப்பா
நன்னயமாய்ப் பன்னிரண்டு முடிந்தபின்பு
நலமான முதற்சாதிப் பெண்ணைப்பார்த்து
சொன்னபடி விவாகமது செய்துகொண்டால்
தொல்லையில்லை காரியங்கள் சுருக்கிலாமே.

ஆமேதான் கற்பமது கொள்ளுமட்டும்
அடியாளும் இருந்திடவும் வேணுமப்பா
தாமேதான் கற்பமது முடிந்தபின்பு
தள்ளிவிடு பிற்பாடு தேவையில்லை
நாமேதான் விவரமாய்ச் சொல்லிவிட்டோம்
நன்மையுள்ள காரியத்தை முடித்துக்கொள்ளு
வாமேதான் அந்தந்த விஷயந்தன்னை
மாறாமற் செய்பவனே சித்தனாமே.

சித்தனென்று பேருபெற வெகுநாட்செல்லும்
சிவசோதி வடிவம்வந்தாற் சிவனுமாவான்
பத்தனென்று சொல்லுவர வெகுநாள்வேண்டாம்
பார்த்திடலாஞ் சிலநாளின் பருவத்துள்ளே
அத்தனென்று சொல்லுவர அனேகநாள்தான்
ஆகுமென்று குருமுனியைம் பதிலேசொன்னார்
எத்திசையுங் கீர்த்திபெற்றேயிருப்பதற்கு
இந்நூலா முந்நூறு மியம்பினேனே.

திருவள்ளுவநாயனர் கற்பம் 300
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

திருவள்ளுவநாயனர் திருவாய் மலர்ந்தருளிய

# நாதாந்தசாரம் 100.

ஆதியாய் வந்துதித்த அருள்மனோன் மணியாள் காப்பு
நீதியா யுபதேசித்த நிர்மல சொரூபன் காப்பு
சோதியாய்த் தோன்றி வந்த சுடரொளி நாதன் காப்பு
பாதியாம் பிறைய ணிந்த பராபரன் காப்புத் தானே. (1)

தானேபார்முப்புமார்க்கந் தான்சொன்னேன்கற்பந்தன்னில்
நானேநா தாந்த சாரம் நவிலுவேன் புவியோ ருக்காய்த்
தேனேதான் வழலை யின்ன தென்றுமே தெரிந்துகொண்டால்
மானேதா னெதிரே வந்து வளர்மூலஞ் சொல்லு வாளே (2)

சொல்லவே நாத விந்து சுரோணித மின்ன தென்று
நல்லவே வெளியாய்ச் சொன்னேன் நாதாந்த சாரந் தன்னில்
மெல்லவே கண்டு கொண்டால் வேதாந்த முடிவு தோணும்
எல்லவே வழியோ டேதா னிருவெளி மூலம் பாரே (3)

இருளொளி வெளிமூன் றாகி யிலங்குமுப் பாழுக் கப்பாற்
பெருவெளி கைலை மீது பேரொளி யாகிமேலாம்
குருவழி குலத்துக் கெல்லாங் கோதிலா ஞான மாகித்
திருவரு ளுருவு மான திருவடி நெஞ்சில் வைப்பாம் (4)

முப்பாழு மூன்று மாய்கை முப்பதி மூன்று வட்ட
மப்பாழு மிப்பு றத்து மானந்த மயமாய் நின்று
தப்பாம லுலகுக் கெல்லாந் தானவ னான சோதி
வப்பாக வெந்த னுச்சி வட்டத்தே வைத்த நாதன் (5)

வெளியொளி யிருள்மூன் றற்ற வெறும்பாழ தான வீட்டிற்
களிதரு முச்சி ஞானக் கண்ணிலே கருத்து வைத்து
மொழிதரு முத்தி ஞான முத்திரை செய்த தாகி
வழிவழி யுச்சி வட்டம் வாழ்பதி பரம ஞானம் (6)

மூலமாம் நடுவு மூச்சி முப்பதி முப்பா ழென்று
ஞாலமு மப்பு வன்னி நாடிய தகைமை தேறார்
சீலமா யானுஞ் சத்தி சிவபதஞ் சிற்ப ரத்தில்
மூலமாய் மூன்றில் நின்ற முடிச்சது உச்சி தானே (7)

உச்சியி னிடமாய் நின்ற உ[illegible]ாஞ் சோதி பாதம்
நச்சியே யிருப்பா னந்த நாதாந்த வெளியி லேதான்
வச்சிர வெளியா னந்த வாசியா லடர்ந்த வன்னிக்
குச்சியர லுச்சத் தானைக் குருவினாற் றிறந்து கொள்ளே (8)

உச்சியாம் வட்டந் தன்னி லுருவியே யாரா தார
நச்சிவ ஞான சோதி நாதன்றன் பாதந் தன்னில்
நிச்சிவ நிட்க ளத்தே நிர்மலன் வடிவ தாகும்
உச்சிமேல் வைத்தி ருப்பார் உயர்குரு புத்ரர் தாமே (9)

முப்பதி மாய்கை யாலே மூவுல கெல்லாந் தோன்றி
முப்பதி மூன்று பாழில் மூவருந் தொழிலாய் நின்று
முப்பதி மூன்று வட்ட முச்சுடர் முத்தி யாகி
முப்பதி தானே எங்கு முடிந்தது சோதி பாதம் (10)

முப்பாழு மூன்று நாடி மூலமு நடுமு டியாம்
முப்பாழு மூன்று வட்ட முடிச்சது மூன்று மாகும்
முப்பாழு முத்தி யாகி முடிச்சுதான் மூலத் துள்ளே
முப்பாழு பெரும்பா ழான முறைமையைக் கருவாற் காணே.

மூலமே உச்சி யாகு முச்சியி னடுவே மூலம்
மூலமே சோதி யாகு முப்பொரு ளொடுக்க மங்கே
மூலமே பகலி ரவாய் மூடிந்தது மூல நாடி
மூலமா மூச்சி தன்னை மூடியே திறந்து பாரே. (12)

மூடியே திறந்து பார்க்கில் முப்பொரு ளுதய மாகு
மூடியே திறந்து பார்க்கில் முச்சுட ருதைய மாகு
மூடியே திறந்து பார்க்கில் முப்பதி முதைய மாகு
மூடியே திறந்து பார்க்கில் மூன்றுமுப் பாழ தாமே. (13)

முத்தியே முப்பா ழாகு மூவருந் தேவ ராகு
முத்தியே மூல மாகு முப்பொருள் தானாய் நிற்கு
முத்தியே நாடி மூன்றாய் முறிந்திடப் பெரும்பா ழாகு
முத்தியே சித்திரண்டு முடிந்திட மூல மாமே. (14)

மூலமே மேல்கீ ழாகி முடிநடு மூப்பா ழாகி
ஏலமே மூல மாகி யிருந்தது வெளிபா ழாகுஞ்
சீலமா முச்சி மீது திருவடி நடன மாகும்
மூலமாஞ் சோதி யாகு முடிவிடந் தானே முத்தி (15)

பதிபசு பாச மான பாவக மூப்பா ழாகும்
பதிபசு பாச மான பாவக முத்தி யாகும்
பதிபசு பாச மான பாவக மூவ ராகும்
பதிபசு பாச மூன்றும் பாரபாத் தடக்கந் தானே. (16)

மும்மல மூன்று நாடி முக்குண முத்தி மூப்பாழ்
மும்மலங் கெட்ட தாலே முப்பாழு மதுவே யாகு
மும்மல மயக்கத் தாலே மூவர்முத் தொழில தாகி
மும்மலங் காமி யத்தே மூவரும் பிறந்த வாறே. (17)

நாசியும் நயனமுச்சி நடுவிலே நடன மாடும்
வாசியைத் தேசி யாக்கி வழியுச்சி மீது ஏறித்
தேசிக ளுக வந்த திருவடி திட்ட மாக
நாசியி னடுவிற் பார்த்தால் நாதாந்தந் தோன்றுந் தானே (18)

உச்சியாம் நாக்குக் கண்ட முமூட னுந்தி லிங்கம்
நச்சிய மூல நாடி நடுவதாம் நாட்ட மூன்றாய்
வச்சிர மூல மான வழிசுழி வீதி தானே
உச்சியா முணர்வு மூல முருவியொன் றாகி நிற்கும் (19)

மூலமாஞ் சோதி நாடி மூலாதி பாத மாகி
மாலயன் தேவர்க் கெட்டா மலரடி யுச்சி மூலஞ்
சீலமாம் பிரண வத்தே சிவலிங்க ரூப மாகி
மூலமு மேனு மொன்றாய் முடிந்திடச் சோதி பாதம். (20)

வேறு.

முப்பாழே முச்சுடராய் திரைமூன் றாகி
மும்மலமு முடிச்சாகி மூல மாகி
முப்பாழே வெளியொளியு மிருள்மூன் றாகி
முடிந்தபடி யுச்சியெனு மூல மாகும்
முப்பாழுந் தானான பெரும்பாழ் தன்னில்
மூலமாம் நாதாந்த முதல தாகும்
முப்பாழுந் தாண்டியதோர் பெரும்பாழ் தன்னில்
மூலமாம் நாதாந்த முதலைப் பாரே. (21)

இதையமதில் நடமாடும் பாதந் தன்னை
　　இடகலைபின் கலைசுழியா யிடைவி டாமல்
உதையமதி லுதித்தகலை பகலி ராவோ
　　உயர்பாதந் தூக்கியொரு பாதந் தன்னிற்
பதவிதரும் நாதவிந்து பாதம் ரெண்டாய்ப்
　　பார்விசும்பு மொன்றாகிப் பார்த்த பாதம்
இதயமதில் நடமாடுங் கமல பாதமே
　　எந்தைகுரு பாதமது வேதந்தானே. (22)

அக்கினியாந் திரைசுழினை மூடிச்சு நீங்கி
　　ஆதார நிராதாரத் தடக்கும் நீங்கி
திக்கரித் திசையெட்டு மூலகீ ரேழுந்
　　திக்குகளும் பதினாறு தெருவும் நீங்கி
மிக்கினிய தத்துவங்கள் கருவும் நீங்கி
　　மேல்கீழும் நடுபக்க மேரும் நீங்கி
அக்கினியுந் திரையறுக்கு மகண்ட சோதி
　　அதாரமாய்ப் பொருளொன்றே அறிவாய்பாரே. (23)

ஆமெனவும் ஊமெனவும் அவ்வு மொவ்வாய்
　　அக்கினியின் திரையறுக்கு மருளு மாகி
ஆமெனவே யகண்டவெளி யிருளாய்த் தோன்றி
　　யணுவணுவா யப்பாலுக் கப்பா லாகி
ஊமெனவே யுயிராக வுலக மெல்லாம்
　　உடப்பிறப்பு மொன்றாகி யுருவி னின்று
ஓமெனவே யேரொளியா முதய மாகும்
　　உண்மைதனை யாவருக்கு முரைக்கொ ணாதே. (24)

உச்சிவெளி நயனநடு நாசி மூல
　　மொன்றாகி நடம்புரியு முண்மை தன்னை
வச்சிரமா மணிச்சோதி நடன மென்று
　　மனமூல மாகவே மனத்தி னோக்கி
அச்சமறக் கூத்தாடு மகண்ட சோதி
　　யானந்த பராபரமா யனாதி மூலம்
நிச்சிவமா நிட்களத்தே நினைத்த பேர்க்கு
　　நித்தசுத்த படிகமதாய் நிற்குந் தானே. (25)

வெளிமூல மாவதுவே திரைய தாகி
வெளிக்குள்நின்ற வித்ததுவே சிவம தாகி
களிமூல சத்திபர நாத விந்து
சாட்சியாஞ்ச தாசிவம யேச ஞகி
அளிமூல மாலயனே டானு மாகி
ஐம்பூத மன்னமதி லெல்லா மாகி
வெளிமூலங் கடந்துநின்ற சோதி மூலம்
வேறென்று மில்லாத வெறும்பா ழாமே. (26)

வேறு.

மேலா தாரந் தடுக்குநிலை மேல்கீழ் நடுவாய் மேவிநின்று
நாலா கலைக்கு மெட்டாமல் நாதாந் தத்தே நடுவாகி
மூலா தாரச் சுடர்மூன்றாய் மூச்சு முனையில் முடிந்துநின்று
காலா தாரச் சுழிமுனையைக் கடந்தே நிற்பர் காரணமே. (27)

மேல்கீழ் நடுவாய் மேவிநின்று மேலாம் பதமா மெய்ப்பொருளாய்
கால்மேல் தலைகீ ழாய்நின்று கருத்தாய்க் கருத்துக்குட்பொருளாய்
மேல்மே லுருகி வெளிப்புரத்தின் மேலாம்பதத்தைக் கடந்துநின்று
கால்மே லான காரணத்தைக் கருதி யிருப்பார் காரணரே. (28)

அவ்வா யுவ்வா யம்பரமா யமர்ந்து நின்ற வரசிதனை
ஒவ்வா யொளியாய் வெளியாகி ஓங்குஞ் சோதி மூலத்தே
அவ்வா யகண்ட வெளியாகி அனாதி மூலப் பாதமதாய்
சவ்வாய் நின்ற தற்பரத்திற் சகலமும் பிறந்த தறிவாயே. (29)

போதங் கடந்த பொருள் முடிவிற் பொருந்தி யிருக்கு மாத்மாவை
நீதங் கடந்த நிலைபரத்தில் நின்ற பரமாத் மாவாகி
பேதங் கடந்த வமுதான பெரும்பாழ் வெளியிற் பேதமன்றி
நாதங் கடந்த நாதாந்த ஞானே தாளுய் நாடுமே. (30)

திரையே வெளியாஞ் சிவமறவாந் திருவாஞ் சத்தி மனமாகுங்
கிரையாங் குடிலைக் கதிர்நாதம் நிலையாஞ் சோமன் விந்தாகுங்
கரையைம் புலனே ஐவருமாய்க் கருது மாதி கருவியுமாய்ப்
பரைதான் பண்டைப் படிபார்த்தாற் பரமாத் மாவாய் நிற்குதே.

பரமாத் மாவாம் பராபரத்தே பரஞ்சீ வாத்மா வாய்த் தோன்றும்
நரவாத் மாவா கத்தோன்றி நாலா யோனி பலவுயிரா
இரவாத் மாக்க ளாய்த் தோன்றி யிறந்தே பிறந்து மிருவருமாய்
பரமாத் மாவாய் நின்றபடி பரம் குருவாய்ப் பார்ப்பதுவே. (32)

ஐயுங் கிலிருஞ் சவ்வாக வமர்ந்தே நிற்கு முப்பாழை
மெய்யும் பொருணிற் றூன் கூட்டி மேலாம் பதத்திற் றூன்நாடி
பொய்யாம் பொருளா மாதாரம் புண்ணு மயக்கந் தான்கடந்து
ஐயுங் கிலியுந் தற்பரத்தே நிற்பா ரறிவை யுடையோரே. (33)

வேறு.

நடமாடுந் திருவடியை யிதையந் தன்னில்
நாதமிடை பின்கலையாய்ச் சுழிமுனையாகி
நடமாடுந் திருவடியை யுச்சி மேலே
நாதாந்தக் கூத்தெனவே வேதமாடும்
நடமாடுந் திருவடியைப் புருவமையம்
நாடினின்று பூரணமாய் நவின்றுநின்று
நடமாடுந் திருவடியே பிராணவாயு
நாசிமுனை மீதில்நின்று நடக்குந்தானே. (34)

நாசிமுனை மீதேறி நடக்கும்பாதம்
நடுவெளியாங் கமலமுச்சி ஞானத்துள்ளே
மாசிலா வடிவுசிவ லிங்கமாகி
மாசற்ற பளிங்கொளியாய் வளர்ந்தசோதி
ஊசிமுனை மீதினிலே யண்டமெல்லாம்
ஒடுங்கிநின்ற் வாறெருக்கு முச்சிமூலம்
வாசியெனுந் திருவடித்தா மரையேயுச்சி
வழியுருவின் நாதாந்த வடிவிதாமே (35)

வேறு.

மூலமு நடுவு மொன்றும் முடிந்திடு மூல நாடி
சீலமார் தடமா மந்தச் சேதியாஞ் சுழிமுனை வீதி
சாலவு மதனைப் பற்றித் தங்கிடு வாரே யாகிற்
கோலமாய் நாதா னந்தங் குண்டலி துணையா வாளே. (36)

ஆரிய ஞான சோதி அடிநடு முடியு மாகி
மாரியாய்ப் பானுய் நின்று மண்டல மூன்று மாகி
யேறியு மிறங்கும் பாதை யேகமா மூல பாதஞ்
சாரியாய் வேத நாதன் றனையுணர்ந் திருந்த வாறே. (37)

மூலமு முடியு மொன்றாய் மூச்சினை யடக்க வுச்சி
ஞாலமாம் வெளியுள் நின்ற நாதாந்தச் சோதி காணுங்
கோலமாய்க் கண்டு நித்தங் குறியதாய்க் குறித்த பேர்க்குக்
காலங்கள் கழித்த சோதி கடவுளாய்த் தானு வாரே (38)

மூலமு மேலா மொன்றை முச்சுடர் முடிச்சு மொன்றே
காலமுங் கணக்கு மொன்றே கருதிய பொருளு மொன்றே
ஞாலமும் விசும்பு மொன்றே நாடியின் வடிவு மொன்றே
தூலமுங் கரும மொன்றாய் நின்றது சோதி மூலம் (39)

நயனத்தை மூடி நாசி நுனியிலே நாடிப் பார்த்தால்
மயமற்ற வரூப மாகி மாசிலா வடிவு தோன்றுஞ்
செயமற்ற மூல பாதத் திருநடம் பீட மாகும்
பயனுற்ற வுச்சி மூலப் பதியிலே பதிந்து நில்லே (40)

நாசியும் புருவம் நெற்றி நடுவிலே நாடிப் பார்த்தால்
வீசவே வெள்ளி முத்து விளங்குபொன் சிவப்பு பச்சை
பேசிய மரும மெல்லாம் பிரணவந் தன்னிற் றோன்றும்
மாசிலா வடிவ முச்சி மானிலந் தன்னிற் பாரே (41)

வேறு.

நாசின் நுனியே யடியாகி நயன மிடையே நடுவாகி
வாசி யுதிக்கு மிடமுச்சி மலரே முடியாய் நின்ற துளி
பேசி யிருந்த பிரணவத்தைப் பிரியா துச்சி மூலத்தே
நேசித் திருப்பார் திருவடியில் நினைப்புமறப்பு மிரண்டிடத்தே

வேறு.

நிராதார நிட்க ளத்தே நின்றதோர் மூல பாதம்
பராபரப் பதிய தாகிப் பரந்தநா தாந்த சோதி
தராதரத் துச்சி மீது தாண்டவ மான மூர்த்திப்
புராதனப் பதிய தான பொருளினைப் போற்றிக் காணே (43)

வேறு.

உச்சிப் புருவ நடுவாகி யொன்றாய் நின்ற மூலத்தே
பச்சைப் பவழம் பளிங்கொளியாய்ப் பதிந்தே நின்ற பாதமதை
நச்சி யிருப்பார் பெரியோர்கள் நாதாந் தத்திற் பேரொளியாய்
வைச்ச குறிகா ணிரவுபகல் மறவா திருப்பார் மனந்தனிலே (44)

மனமே மூலம் வன்னிகதிர் மதியாய் நின்று மாறியொன்றாய்
நினவே வுச்சி மூலமதாய் நின்றே யியங்குந் திருவடிதான்
தினமே நோக்கி யிருந்தவர்கள் திடமாஞ் சிவயோ கத்தவனே
மனமே மாய்கை தனைநீக்கி மதிபா னேக்கி மாட்டிடுமே (45)

வேறு.

சோதிபரா பரமூர்த்தி யுச்சிமீது
சொல்லிறந்த பொருளாகிச் சுடர்கள்மூன்றாய்
வீதிநடு வெளிமூல பாதமாகி
விருட்களைந்த பதிமுப்பாழ்க் கப்பால்நின்று
ஆதியந்த மில்லாத பொருளதாகி
அருவுருவந் தானாகி யகண்டமாகி
நீதிநெறி நிலைகடந்த மூலபாதம்
நின்றியங்குந் திருவடியின் நிலைமைதானே (46)

திரைகடந்த வெளிமூலஞ் சோதிநாடி
திருமூல முச்சுடராய்த் திருவெட்டாகிக்
கரைகடந்த காரணமாய்க் கடவுள்நாதன்
காணரிய பேரொளியாய்க் கலந்துநின்று
பிரைகடந்த பொருளாகி யுலகுக்கெல்லாம்
பேரொளியாம் மேரொளியி னுண்மையாகி
விரைகடந்த வித்தாகி விளைந்தசோதி
வெரும்பாழாய் வீட்டினிலே விளங்கிப்பாரே (47)

காதிரண்டுங் கண்ணிரண்டும் நாசிரண்டுங்
கையிரண்டுங் காலிரண்டுங் கலந்தேயொன்றாய்
மீதிரண்டுந் தடமாகி மாறியெங்கும்
விணைதாண்டி வழியுச்சி வீட்டைத்தாண்டி
சாதிரெண்டும் வகையாக்கிச் சமையமாக்கிச்
சாக்கிராதி யாவத்துஞ் சமைந்தமூர்த்தி
சோதிரண்டு வகையாக வடிமுடியாய்ச்
சூட்சமதாய் நின்றபடி சொல்லொணாதே (48)

அடிமூல நடுமூல மாகிமூலம்
அகாரவுகா ரம்மிரண்டு மானமூலம்
முடிமூலம் நடுமூலம் முத்திமூலம்
மூன்றுவட்ட முப்பாழா மூலமாகிப்
படிமூல மாகியதோரு ராறுதாரப்
படிகடந்த பேரொளியாய்ப் பரமமூலம்
அடிமூல மாகியதோர் அகாரந்தன்னை
அத்தனார் வடிவென்றே யறிவாரண்டே (49)

அவ்வெழுத்தே உச்சிவட்ட மாகிநிற்கு
மாகியதோ ருகாரநடு நயனமாகும்
ஒவ்வெழுத்தே நாசினுனி புருவமாகு
மோங்காரம் றீங்கார மிரண்டுமாகி
இவ்வெழுத்தே யண்டமெல்லாந் தானாய்நின்று
இருசுடரின் வகையாகி ஏகமான
அவ்வெழுத்தே யடிமுயா யமர்ந்தசோதி
அத்தனார் நடனவடி வாகுமாண்டே (50)

பரையாகு மூலத்திற் பராபரந்தான்
பதியிருக்கும் நாதாந்தப் பாழாம்வீட்டில்
நிரையாகி நிற்குமந்தச் சோதிமூலம்
நின்றிலங்குஞ் சுழியுச்சி நெற்றிநேராய்த்
திரையாகு மக்கினியைக் கதவாய்மூடிச்
செம்மையாஞ் சுழிமுனைக்குத் திறவுகோலால்
நிரையாகுங் கதவுதனைத் திறந்துபார்த்தால்
நித்தசுத்தப் படிகமதாய் நிற்குந்தானே (51)

ஆயிரத்தெட் டிதழ்க்கமலத் தருணபீடத்
தானந்த மயமாகி அகாரமாகி
ஆயிரத்தெட் டிதழடியி னுச்சியாகி
யகண்டபரி பூரணமா யமர்ந்துநிற்கு
மாயிரத்தெட் டிதழ்நடுவே ஆதியான
மருவுருவா யமர்ந்திருக்கு மனுதிதன்னி
லாயிரத்தெட் டிதழ்நடுவே சோதிமூல
அரனுமையு மிருப்பரா சனமதாமே (52)

ஆசனமா முச்சிவெளி யருணபீட
மாதாரங் கடந்துநின்ற அகாரமீதே
நேசமா யனுதினமும் நினைவதாக
நேசிப்பார் நாதாந்த நிலைபெற்றோர்கள்
பாசமல மூன்றினுள்ளே மயங்கிப்பின்னும்
பரஞான நிலையறியாப் பாவிமார்கள்
மோசமெனு மம்பலத்தே பிறந்திறந்து
மூடர்களாய் நரகமதில் மூழ்குவாரே (53

மூலாதா ரம்மென்னுஞ் சுழினைாட்டி
முதுகுதண்டு உச்சிவெளி மூலமீதே
மேலாகி மீதான பதியுமாகி
மின்னலெழூந் தேமறைந்த மேன்மைபோல
நாலான வேதமுத லுரைக்குமெட்டா
நாதாந்தச் சோதியென நவின்றுநிற்க
மேலாகும் பரஞான வீட்டைத்தானே
மேவிநிற்பார் மெய்ஞ்ஞான நாட்டத்தோரே (54)

வேறு.

நாடிய வட்ட முச்சி நடுமுடி மூல பாதந்
தேடிய முன்னோ ரெல்லாந் திடமிது முத்தி யென்று
நீடிய பாத நாடி நீள்நுனி நாசி தன்னில்
கூடியே யொன்றாய் நின்ற குறியினைக் குறித்துப் பாரே (55)

அழியாத முத்தி ஞான மறிவிப்பா னுசா னல்லால்
ஒழியாது பாச ஞான வுண்மையு மொழிபே ருது
தெளிவாகக் குருவின் பக்கந் தெளிந்தவர் தேவ ராவார்
மொழியாத முத்தி யுண்டா முப்பொருட் டலைவ ராமே (56)

முத்திக்கு வித்தாய் நின்ற மூாத்திகா தாந்த சோதி
சித்திக்குச் சித்தியான திருவடி மூல பாதம்
வித்தினுக் கெல்லா ஞானம் வித்ததாஞ் சோதி மூலம்
மத்திக்கு மத்தி யான வடிவது அகார மாமே (57)

அகாரமா முச்சி வட்ட மானந்த மயமாய் நின்ற
உகாரமா முந்தி யின்கீழ் ஓங்கார மூல மூன்றும்
மகாரமா மெழுத்தஞ் சாலே நாடொணு மூல பாதம்
அகாரமாஞ் சுழினை நாடி யாயிரத் தெட்டா மூலம் (58)

மூலமு முத்தியொன்றாய் முடிந்திட முத்தி யாகுங்
கோலமா மூல நாடி குண்டலித் துணையின் நேராய்ச்
சாலவே யுருவி யொன்றாய் சாக்கிராதீ தங்க டந்த
மேலதாஞ் சோதி பாத மேலுச்சி வெளிய தாமே. (59)

வேறு.

மேலா தார வெளியுச்சி மேலுங் கடந்து மெய்ப்பொருளாய்
நாலா கலைக்கு மெட்டாமல் நாதாந் தத்தே நடுவாகி
சீலம் பரம உச்சிவெளி சிவமாய் லிங்கச் செயலாகி
மேலா தார வெளிமூல மேலாம் பதமாய் மேவியதே (60)

வேறு.

ஆதாரத் தடுக்குனிலை யோரைந் தாகும்
அறுவெளியாம் நிராதார வாத்மா வாகும்
மீதான வெளியுச்சி சிவம தாகும்
மிக்கதிரை மாய்கையதை மிகவே யுன்னி
நாதாவை யடைவதற்கு நாத னாகும்
நடுநாடி சுழிமுனையின் நாட்ட மாகும்
வேதாவும் அரியானும் விண்ணோர் தானும்
விளங்கரிய பேரொளியாய் மேவுந்தானே. (16)

வேறு.

சுழிமூல மான சோதி துறைகடந் தரூபமாகி
ஒளிமூல மாகிநின்ற உண்மையா முச்சி மூலம்
வெளிமூல மாகிநின்று வேதாந்தச் சிவத்துக் கப்பால்
அளிமூல மாறுதாரத் தடுக்கொளி கடந்த மூலம் (62)

வெளியதைத் திரையதாக்கி வேதாந்த சிவமதான
ஒளிவதை யறிவதாக்கி ஓங்காரமான சத்திக்
களியதாம் நாதவிந்து கதிர்மதி யிரண்டுமாகி
அளியதாம் பூத மஞ்சு மாதாரத் தேவராமே. (63)

இகபர மிரண்டுக்கப்பா லேகமாம் வொன்றும் பாழாம்
பரபனைப் பரமாத்மாவாய் பாழ்வெளிப் பதிய தாகிப்
பரமனிற்பராபரந்தான் பரவெளிதானே தானாய்
பாமுதற் பரமாய்த் தோன்றிப் பாரெலாம் படைத்தவாரே. (64)

சத்தியே மனம தாகிச் சகலமுந்தானே யாகிப்
பத்தியா யறிவுமாகிப் பாசிவ லிங்க மாகி
முத்தியாஞ் சுடர்கள் மூன்றாய் மூலமாம் வன்னியாகி
அத்தியே திரையதாகி ஆதார சுழினை யாமே. (65)

அது அவ ளவன்முன் னென்ற அரியதோர் குறிகள் மூன்றும்
அது வவ ளவளே யன்றி யாதாரம் வேறுமுண்டோ
அது அவ ளவன்று னண்ட பிண்டமு மொன்ற தாகிப்
பொதுவதாய் நின்ற சோதிப் பொருளினைக்குருவாற்போற்றே (66)

முப்பொருள் மூன்று வட்ட முத்தியாம் பொருள தாகும்
முப்பொருள் மூலநாடி முடிச்சது மூன்றுக் கப்பால்
முப்பொருள் பதியிற்சாரில் மூன்று முப்பாழ தாகும்
முப்பொரு ளுணர்ந்த போதே மூர்த்தியாந் தலைவராமே. (67)

முத்தியாஞ் சுடர்கள் மூன்றை முப்பாழ தாக்கிப் பின்னும்
முத்தியு மடைந் தொன்றாகி மூலமாஞ் சோதிபாத
முத்திக்கு வித்தாய் நின்ற முப்பதபாருட் டலைமையான
முத்தியை யடைந்த பேரே மூவர்க்கு மதிகமாவார். (68)

ஆறாறு முப்பத் தாறுக் கப்பாலா மனாதி மூலங்
கூறாத குறிய தாகி குருபதத் தெய்வ மொன்றாய்ப்
பேறாத மூவர் பாதம் பேரொளி தானாய் நின்ற
ஆறாறுக் கப்பால் நின்ற ஆதியாஞ் சோதி மூலம் (69)

ஒருவழி யாகி நின்ற வொண்மொரு ளுச்சி வட்டக்
கருவழிக் காளாய் நின்று கான்மறி யாடி நிற்கும்
பெருவெளித் தடத்திற் சென்று பேரொளி மூலந் தன்னைக்
குருவழிக் குறியி னாலே குறிப்புட னோக்குவீரே. (70)

மேல்தலை கீழாய் நின்ற மேன்மையா முச்சிவட்டக்
கால்தலை மேலாய் நின்ற நாரணங் காணமாட்டார்
நால்தலை யுடையோன் மற்ற நாரணன் றேடிக் காணார்
கால்தலை கண்டபேரே காட்சியா முத்தர் தாமே. (71)

காட்சியா முத்திதன்னைக் காரணக் குருவி னாலே
சூட்சியாங் கண்டபேரே சூதான முதத ராகு
மாட்சியா மனாதி மூல மாறாமற் குறிக்கு மப்பாற்
காட்சியாஞ் சோதி மூலங் கண்டவர் பெரியோ ராண்டே. (72)

காரணக் குருவாய் நின்ற காட்சிநா தாந்த சோதி
பூரண மாக வெங்கும் புறையறக் கலந்து நின்ற
காரணன் தேவர்க் கெட்டா நடனமாஞ் சோதி மூலம்
ஆரணங் கடந்து நின்ற அருள்ஞான சோதி யாமே. (73)

உச்சிக்குஞ் சீழ்மே லாகி யுருவரு வுபாய மாகி
நச்சிவ ஞான மூர்த்தி நாதாந்தச் சோதி மூலம்
பச்சையாய்ப் பவழ முத்தாய்ப் பளிங்கொளி வர்ண மாகி
உச்சிக்கீழ் மேலாய் நின்ற யுண்மையை யுணர்வா ராண்டே. (74)

வேறு.

நாடிடையுங் கலையாருஞ் சுழினை நாடி
நடுநாசி புருவமுச்சி நடுவாய் நின்று
ஆடியதோர் திருநடனம் அகார மாகு
மானந்த பரவெளியா யமர்ந்த மூர்த்தி
கூடிருந்த நெற்றிநடு வாக நோக்கிக்
குண்டலியாம் பாதமலர் தந்த சோதி
தேடியதோர் திருவடிதான் மூல முச்சித்
திருவுந்தித் தற்பரத்தே சேருந்தானே. (75)

திரையாகுங் குண்டலிதான் திறப்பதற்குத்
திருவதினூற் சுழிமுனையெனுங் குச்சியாலே
பரையாகுங் குடிலைசத்தித் திரையை நீக்கிப்
பராபரத்திற் சென்றுமுத்தி பதிந்துமிற்கிற்
கரையாகுந் தரிசனங்கள் பதினாறெல்லாங்
கட்டறுத்துத் திரைகடந்து கைலைமீதே
உரையாகும் பயமில்லாச் சோதி பாத
முற்றணர்ந்து கண்டவர்க்கே முத்தியாண்டே (76)

பெரும்பாதைச் சுழிமுனைவழித் தடத்தேசென்று
பேரொளியாம் ஞானமுத்தி பெறுவோர்க்கெல்லாந்
திரம்பாருஞ் சுழியதுவே மூலபாதந்
திருவடியை மனத்துள்ளே திறமாய்க்கொண்டு
கரும்பாதைக் கருவழிக ளெல்லா மாற்றிக்
கைலாய வழிகடந்தார் காட்சிமோட்சங்
சுரும்பாருங் குழலுமையாள் பங்கனெங்கோன்
சூட்சாதி பாதமலர் சூடுமாண்டே (77)

அண்டபகிரண்டமுச்சி வெளிக்குமப்பால்
ஆனந்த பராபரனு ரமர்ந்தவீடு
மண்டலங்கள் மூன்றுமதி கதிரும்வன்னி
மனமாதி மூலததே மருவிநிற்கும்
கண்டகுரு நாதாந்தச் சோதிபாதங்
கரைகடந்த உச்சிவெளிக் கைலைதன்னில்
அண்டரெல்லாம் போற்றிநிற்கு மகாரந்தன்னை
யனுதிபரஞ் சோதியென்றே அறிவாராண்டே (78)

வேறு.

அகாரமு மகாரந் தானு மானதோர் வகாரந் தானும்
உகாரமாம் பிரண வத்தே ஓங்கார ரூபமாகி
நகாரமா மஞ்செழுத்தின் நாதாந்த ரூப மாகி!
சிகாரமாஞ் சிற்பரத்தின் செயலெல்லாந் தானாய் நின்றார் (79)

உச்சியா மூலா தார மோங்கிப கடவை நாடி
குச்சியாம் நாதசாரக் குருவினாற் கொடுக்க வாங்கி
வச்சிர வன்னி யான வடிவதாங் கதவு தன்னைக்
குச்சியாற் திறந்து கொண்டு குருவினு லருளைக் கூட்டே (80

பிண்டத்தின் மூல மான பிரணவந் தன்னைத் தானே
அண்டத்தின் மூலத் தோடே அடிமுடி. யொன்றாக் கூட்டிக்
கண்டத்தின் மேலே நின்ற கலைபதி னாற தாகக்
கொண்டிடைக் குருவி னாலே கூர்மையாய்த் தெளிந்து பாரே (81)

கழுத்தின்மேற் கலையீ ரெட்டாய்க் காதுடன் கண்ணு மூக்கும்
அழுத்தமர் முகமஞ் ச கி அருவமஞ் செழுத்து மாகிப்
பழுத்ததோ ரெழுத்த தான பராபரப் பொருளை யுன்னி
எழுத்திலா வெழுத்தைத் தானே யேகமா யேற்றிக் காணே (82)

நடுவடி மூன்றொன் றான நாசியாம் நயன முச்சிக்
கடுவெளிக் கப்பால் நின்ற காரணச் சோதி தன்னை
அடுமையா யாசான் பக்க லறிந்தவ ரருள்பெற் றார்கள்
கொடுமையாங் குணத்தை நீக்கிக் குருவரு டன்னைப் போற்றே. ()

வெளிமூல மாகி நின்று வேதாந்தங் கடந்த சோதி
ஒளிமூல மாகி நின்று ஓங்கிய மூலா தாரம்
அளிமூல மாறு தார அடுக்கெலாங் கடந்து நின்று
வெளிமூல மான சோதி விரிந்தது பதியு மாமே (84)

அகாரமே வலம தாகு மாகிய விடம்உ காரம்
உகாரமே நடுவ தாகி ஓங்கிய வுச்சி தன்னில்
நகாரமா முச்சி மூன்றும் நாடிய எட்டெ ழுத்தாய்
அகாரமா முச்சி மூல மட்டாங்க யோக மாமே (85)

அகாரத்தை யுச்சி யாக ஆனதோ ருகாரந் தன்னைச்
சிகாரத்தின் நயன மாக்கிச் சிறந்தவோங் காரந் தன்னை
நகாரத்தின் வடிவாய் நின்ற நாசியி னுபா தாக்கி
அகாரத்தின் வடிவை நோக்க அத்தனார் வடிவ தாமே. (86)

நகாரமே நாசி யாகும் நாடிய மகாரம் நாவாஞ்
சிகாரமே நயன மாகுஞ் செடமது வகார மாகும்
யகாரமே செவியாய் நின்று அஞ்செழுத் தரூப மாக
ஓகாரமாம் பிரண வத்தே யுதித்துடன் ஒடுங்கு மாண்டே. (87)

ஓம்நமோ நமசி வயமென் றோதிய மந்திரத்தை
ஓம்நமோ மூன்றி னுள்ளே ஓங்கார ரூப மாக
ஓம்நமோ சிவய மென்று ஓதிய மந்திரத்தை
ஓம்நமோ சிவாயமென்று வொளிவெளி யொன்றாய்க் காணே (88)

மீதானப் பதியாய் நின்ற மேன்மையாஞ் சோதி நாதன்
ஆதார மூன்றுக் கெல்லா மருவுரு வாகிநின்று
வேதாவு மரியுந் தேட வெறும்பாழ தாகி நின்ற
நாதாவு மண்ட மீதே நடனஞ்செய் வார்பா ராண்டே. (89)

அண்டத்தின் வடிவாய் நின்ற அகாரமா மெட்டெ ழுத்தைக்
கண்டததின் மேலே நோக்கிக் கருதுவார் கருவைச் சாரார்
பிண்டத்தின் வடிவாய் நின்ற பிரணவ மெட்டெ ழுத்தாய்க்
கொண்டத்தைக் குறித்த பேர்கள் குடிலையிற் சார்வார் தாமே

தூலமாங் கண்ணை மூடிச் சூட்சமாங் கண்தி றந்து
மூலமா முச்சி மீதே முடியடி யொன்றாய்க் கண்டாற்
சீலமாம் ஞான சோதி சிலம்பொலித் திருக்கூத் தான
கோலமே காண லாகுங் குறியறக் குறித்துப் பாரே. (91)

அறிவெனும் ஞானந் தன்னை யானந்த மயமா யுச்சிக்
குறியிலே குறித்த பேர்க்குக் கோதிலாச் சோதி தோன்றும்
நெறியிலே யமர்ந்து நின்ற நினைவிலே நிலைய தாகி
அறிவிலே யறிவைப் பற்றி யானந்த மாகி நில்லே. (92)

ஆனந்த மாகி நின்ற அகாரமா முச்சி வட்ட
வானந்த வடிவி னுள்ளே வாழ்பதிச் சோதி மூல
மோனந்த மாகி நின்ற முத்திக்கு வித்து வாகித்
தானந்த மாகி யெங்குந் தானவ னாகு மாண்டே. (93)

தானவ னாகி நின்ற தலமது உச்சி மூலம்
வானவர் தேவர் காண்பர் மதியதாஞ் சோதி பாதம்
ஆனதோ ரகார மண்ட வாகாய வீட்டுக் கப்பால்
ஞானவா னேற்று மந்த னட்டமு பதிதா னுண்டே. (94)

வேறு.

பதினாறு தெரிசனமுஞ் சுழினைவீதிப்
பாதையிலே செல்லாது பரத்தேநிற்குங்
பதினாறும் பாந்தனிலே தோன்றுமல்லாற்
பாபாபத்திற் செல்லாது பரத்தேநிறகுங்
பதினாறு மோரெழுத்தா யுச்சிமீதும்
பார்விசும்புந் தானாகிப் பரத்தேநிற்கும்
பதினாறு தரிசனமுங் கடந்துஞான
பாதமதைக் குருவருளாற் பற்றிநில்லே. (95)

குருலிங்க சங்கமுமூன் றென்றாய்நின்ற
குறியதனைச் சுழிமுனையிற் குறித்துக்கொண்டு
குருலிங்க சங்கமதாஞ் சோதிமூலங்
கூறறியப் பளிங்கொளியாய்க் குருவுமாகி
குருலிங்க சங்கமேயா காயமாகிக்
கோதிலா நாதாந்தக் கூத்துமாகிக்
குருலிங்க சங்கமதாய்ப் பொருள்கள் மூன்றுங்
கோதிலா நாதாந்தக் கோல மாமே. (96)

வேறு

பிண்டமு மண்டப் பிரணவ மானவப் பேரொளிதான்
அண்டமும் பிண்டமு மெண்டிசையி னும்பிறந் தானந்தத்தே
தொண்டதிற் சித்தின் றெழில் மூன்ற தாகித் துரியமற்றுங்
கொண்டாடி உச்சியின் மேற்கொண்ட கோலம்நற் கோலமிதே

உச்சித் துளைவழி மூட்டித் திறையை யுருவியொன்றாய்
நச்சிவ மான நாதாந்தக் கூத்தின் நடனமதாய்
விச்சின் விரிசுடர் மூன்றுமொன் றாகி வியாக்ரமத்தே
வச்சிர மான செகசோதி பாதத்தில் வாழ்ந்திடுமே. (98)

மாறாத் தியானந் திருவடித் தாமரை மனத்தினுள்ளே
கூறாத் தியானம் பதினா றெழுத்துங் குருவருளால்
ஆறாதா ரங்கடந் தானந்த மான அகாரத்திலே
நீறாகு மென்ற திருவடித் தாமரை நேசிக்கவே. (99)

செகமாய்கை நீக்கிப்பின் சிற்பா மாய்கைச் செயலறிய
அகமாய்கை யாகிய வானவ மும்மல மாவதெல்லாஞ்
சுகமான துக்கச் சடர்சொந்த மான சுடர்சத்தியாம்
மகமான பேரொளி பாதார விந்தத்தை மன்னிநில்லே (100)

ஞானமா யிரத்தைந் நூறும் நவரத்ன மெனுமெண் ணூறுங்
தானமாம் பஞ்ச ரத்னந் தருமைந்து நூறுங் கற்பத்
தேனதா மோர்முந் நூறுஞ் செப்பிய பின்னு மிந்த
மோனநா தாந்த நூற்றை மொழிந்தனன் விளங்க முற்றே.

திருவள்ளுவர் நாதாந்தத் திறவுகோல்

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய

கற்பம் 300-க்குச் சுருக்கம்

# குருநூல் 50.

ஆடியதோர் நடனதிரு மூலத்தாலே
ஆட்டான சிதம்பரத்தின் ஆட்டமெல்லாங்
கூடியதோர் பெரியோர்கள் பதினெண்பேரைக்
குலாவியே தெண்டனிட்டுப் பாதம்போற்றி
நீடியதோர் நந்திதனைப் பணிந்துகாத்து
நினைத்தபடி பாடுகிறேன் முத்திதானுந்
தேடியதோர் தேட்டெல்லாம் இதற்குள்ளாகுந்
திரமாயைம் பத்தோரட் சரமுங்காப்பே. (1)

காப்பான ஐம்பத்தோ ரட்சரத்தைக்
கருவான சுக்கிலத்தி லமைத்தருட்சஞ்
சேப்பான ஆயிரத்தைந் நூறுக்குள்ளே
திறந்திட்டேன் திறந்திட்டேன் அறிவுள்ளோர்க்குக்
கோப்பான குருமொழிகொண் டுறுதியாகக்
கூறுவேன் நூல்வழியிற் குறைவில்லாமல்
மாப்பான மறைப்பெல்லா மிதிலேவிள்ளும்
மார்க்கமப்பா நாட்டகத்தில் மாட்டினேனே. (2)

மாட்டினேன் கற்பமுந்நூ றுக்குச்சூஸ்த்ரம்
மகத்தான குருநூலே விளக்கமாக
ஊட்டினே *னுட்கைதனை உரைக்கக்கேளு
உள்ளபடி கருமறைப்ப தொன்றுமில்லை
நீட்டினேன் பெரியோர்க்கு நிலைமைகாணும்
நீணிலத்தோர் காணார்க ளறிந்துபாரு
பூட்டினேன் கற்பவிதி வசியம்வாதம்
போக்கான போக்கெல்லாஞ் சுருக்கினேனே (3)

---

*உட்கை-உள்ளுளவு, அதாவது இரகசியப்பொருள்

சுருக்கான மனைவிமுதற் சாதிகிட்டா
சொரூபமுள்ள ரெண்டான சாதியில்லை
குருக்கான மூன்றான சாதியுண்டு
குணமாக அனலிமன தறிந்துபார்த்துப்
பெருக்கெடுத்துச் சிவபோக வாழ்க்கையெய்தி
பேருலகி லெங்காளும் பிரியாதின்ப
திருக்கெடுத்து வாழஅன லிதன்னைச்சேர்த்துத்
தீர்க்கமுடன் பூசைசெய்ய முறைமையைக்கேளே (4)

கேளப்பா முன்வாலை பூசைசெய்யக்
கெடியான பதினாறு வயதுவேணும்
மீளப்பா நாற்பதுக்குள் தீட்சைமார்க்கம்
வியர்தெடுத்துச் சனிகையுடன் கூடிப்போகும்
ஆளப்பா அருடனுக்கு அறுபதாகில்
அதன்மேலே வாயாது பலமோயில்லை
கேளப்பா யிருபேரும் கூடிநித்தம்
கெடியாக வாழ்ந்துண்ண முறைமையப்பாரே. (5)

முறையான சனிகைதனைச் சேர்த்துக்கொண்டு
மூர்க்கமுள்ள அமுரிபுளி தினமுமாட்டு
உரையான முப்பதுநாள் முன்னேசெய்து
உடன்சார காரமெல்லா மெடுத்துக்கூட்டித்
துறையான முப்பதுநாள் வந்ததானால்
தூசவைத்துப் பீங்கானிற் றெளிவைவாங்கு
புரையான மூன்றுநாள் வருகுந்தேனைப்
புத்தியுடன் பிசகாமல் வாங்குவாங்கே. (6)

வாங்குவது இப்படியே மாதந்தோறும்
வரிசையாய் ஆங்கிரிவு மதிலேவிட்டுச்
தாங்குவது ஒட்டிலிட்டுக் காயவைத்துத்
தவளமற் பார்க்கையிற்கஸ் தூரிவீசும்
ஓங்குவது மணிமணியா யிரங்கும்பாரு
ஒகோகோ தாரையப்பா மணிபோற்காணும்
நீங்குமே யதையருந்த பிணிகளோடும்
நிமிஷத்தில் நமனோடும் நிசந்தான்காணே. (7)

காணுவதுஞ் செந்தூர மெழுகுவீதங்
கசகாம லந்திசந்தி யிருபோ துண்ணப்
பூணுவதும் புளியுண்ணு அமுரியுண்ணு
போக்கோடே அந்தியிலே அமுரிகொண்டு
ஊணுவதுஞ் சந்தியிலே அமுரிபோதம்
உற்பனமாம் பாகமதை அறிந்துகாணும்
தாணுவதுங் குருபாதம் போதமாகுஞ்
சனிகையைநீ மறந்திட்டு வேறேதேடே. (8)

வேறேநீ தேடாட்டா னுயிர்தான்போகும்
வெகுசுறுக்குக் காரப்பா நாளைத்தானும்
ஊரேநீ யிருந்துகொண்டு உறங்கும்போது
உடலினுள்ள ரோகமெல்லாம் மேலேகாணுந்
தேறையிலே திங்களொன்று காலமேதான்
திறமாகப் பேதிக்குங் கண்டுபாரு
கூறையிலே மேலெல்லாந் தடிப்புக்காணுங்
குரையுள்ள ஊரலது தோணும்பாரே. (9)

பாரப்பா திங்களது ரெண்டேயானாற்
பாரிப்பாய் பேதிக்குங் காலமேதான்
சீரப்பா அந்தியிலே இறங்கிவீழுஞ்
சிறப்பிலா மண்டையிடி கால்கைகுத்துங்
கூறப்பா வாநதியுமே மெத்தக்காணுங்
கொடுமையடா பேதிமிக்க மனந்தாளாது
தேறப்பா வாந்தியுமோ மெத்தவாகும்
திரமான இடிமேலே யிடியுமாமே. (10)

இடியோடே போசனமோ மெத்தக்கொள்ளும்
இடுப்புவலி மண்டையிடி கால்கைகுத்தும்
வெடியோடே வயிறூதும் பொருமல்காணும்
வெடித்துவிடும் நாக்குதடு விரிந்துபோகும்
புடியோடே காலெரியுங் கடைவாய்வேகும்
புதுமையுள்ள கண்டமது பச்சைப்புண்ணுங்
குடியோடே திசைநாதங் கேட்கும்பாரு
கூர்ந்துண்ட மருந்தாலித் தனையுமாச்சே. (11)

ஆச்சப்பா தீட்சையது நாலேயானல்
அண்டபகி ரண்டமெலாம் பற்றிவேகும்
போச்சப்பா உடலினுள்ள காரமெல்லாம்
பொன்போலத் தீர்க்கமுமாம் கெட்டியாச்சு
வீச்சப்பா வெலும்பினுள்ள சத்துப்போகும்
வீரியமாய்த் திரிவதுபோல் விபரங்காணும்
மூச்சப்பா திங்களது அஞ்சுஆனல்
மூழக்கமடா பேதியுடன் வாந்திகாணே. (12)

காணுமே அஞ்சுதனைச் செயித்தாயானற்
கனகமடா உன்தேகங் கல்லுகல்லு
பூணுமே அஞ்சுமட்டுந் தீனியப்பா
போட்டாலும் ஆற்ருது பூசைகொள்ளுந்
தோணுமே ஆருன திங்களப்பா
தொடுகுறிபோற் கற்பமுண்ணு தீனிதள்ளும்
ஊணுமே பேதியது மெத்தப்பெற்று
உள்ளிசுவா யடிவயிறு நோவதாமே. (13)

நோவாகும் எழுதிங்கள் நோத்துக்கோர்
நுவல்பேதி யதிகமாய் போகும்பாரு
தாவாமற் ருவுமடா இளைப்புண்டாகும்
தண்ணீருச் சோர்வேண்டாம் வெக்கீராகும்
ஆவாமற் போவதில்லை யொருநாளுங்கான்
அப்பனே கற்பமுண்ணக் காணும்பாரு
போவாம லெட்டான தீட்சையப்யா
போனதொரு சிவன்வந்த தசதியாமே. (14)

அசதியுற்ற உறக்கமுடன் பேதிமெத்த
ஆச்சரிய மிடுப்புவலி சந்துநோகும்
அசதியுடன் மேல்மூச்சுக் கபங்கள்வீழும்
அனுதினமும் நொந்துவிடும் பச்சைப்புண்ணும்
அசதியுடன் குய்யமுதற் கபாலமட்டும்
அநேகவிதம் பேதியுடன வாய்வுகுத்தல்
அசதியுடன் குய்யமுதற் கபாலமட்டும்
ஆச்சரியம் வெந்துநொந்து புண்ணதாமே. (15)

புண்ணான சுக்கிலமோ இளந்தேங்காய்போற்
புதுமையுள்ள ரசினையது போலவாகுங்
கண்ணான அமுரிபுளி வேகமெத்தக்
கண்டிடுமே அந்நேரம் வாதப்போக்கு
ஒண்ணான பொருளப்பா மூன்றென்றாச்சு
உத்தமனே காரமது கொஞ்சங்காணும்
விண்ணான உலகத்தின் விசாரமெல்லாம்
மிரண்டோடுங் காரமென்ற சுண்ணத்தாலே. (16)

சுண்ணமுடன் பத்தான திங்கள்தன்னிற்
சுருக்கெனவே கழிச்சலது தோணும்பாரு
அன்னமுடன் சாரத்தாற் றூரமாகி
அடியற்றுப் போச்சுதையோ வேகத்தாலே
தன்மையுடன் திராவகத்தாற் கழிந்ததய்யா
தளன்றதொரு சடலமது இறங்கிப்போச்சு
கன்னமிட்ட சந்துவழி கீழ்நோக்கிக்
கழன்றுவிடும் பத்துதிங்கள் கண்டுபாரே. (17)

கண்டுண்ட படியதனு லெபியைத்தட்டிக்
காரணமாந் திரேகமது சூட்சமாகி
உண்டுண்ட மறுபிறவியத் தானுமாகி
உருவோடே நான்பிறந்து ஒளியதானேன்
விண்டுண்ட படியெனக்கு சொன்னயீசன்
வேணபடி விபரமெல்லாங் கண்டுகொண்டேன்
திண்டுண்ட படியதனூற் சாகாக்கல்வி
திரட்டினேன் உருட்டினேன் தினமுண்டேனே. (18)

உண்டபடி எதாலே ஆச்சுதென்றால்
உற்பனமாம் நாதவிந்து உண்டசுத்து
கண்டபடி புளியமுரி யதிலேசேர்க்கக்
கனகசபை திருநடன மூலத்துள்ளே
விண்டபடி அருச்சனையில் விந்துகட்ட
விபரமுடன் மேலான முத்திமுத்தி
நின்றபடி கருவூரில் வளர்ந்தவாழ்க்கை
நிகழ்த்தினேன் திருநீற்றின் மகிமைதானே. (19)

மகிமையென்று திருநீறு உன்னீரப்பா
மகத்தான பூரணத்தைக் காணமாட்டாய்
தகைமையென்ற அந்நீரை உள்ளேகொண்டு
தவறுமலனுதினம் பூசித்துவந்தால்
மகிமைபெற்ற அதனுடைய சாரமப்பா
மகத்தான பராபரத்தின் மகிமையாகும்
நகைமையென்ற அந்நீரை மேலேபூச
நாடாது ஏவலொடு நோவும்போமே. (20)

நோவாடு பில்லிவைப்புச் சூனியந்தான்
நேரவான முறைப்பாடு திட்டிசூலைப்
பாவோடு கிரந்திவெட்டை மேகமெல்லாம்
பறக்குமடா இன்னும்வெகு ரோகந்தானுந்
தாவோடு பதினென்றுந் தீட்சைமேலே
தான்வாங்குங் காரத்தை யெடுத்துணர்த்தச்
சாவோடுங் கூறுகிறேன் கேளுகேளு
தரக்கான சூரணத்தை மாட்டுவாயே. (21)

மாட்டுவதுங் காலமேவ ராகன்ரெண்டு
மாட்டி பூரணத்தை யுடனேகொள்ளு
பூட்டுவது அந்தியிலே கடுக்காய்வீதம்
புரட்டியந்தப் புளியுடனே அமுரிகொள்ளு
நாட்டுவது இப்படியே ஆண்டெட்டு
நாட்டிடவே நமனோடும் நோவுந்தீரும்
ஆட்டுவது வயதுபதி னாறுமாகும்
அளவற்ற வித்தையெல்லா மாடும்பாரே. (22)

ஆடுவது யிப்படியே சனிகைமீளி
அறிந்துமே தெண்டனிட்டு மனத்தைப்பார்த்துக்
கூடுவது இருவரையுஞ் சேர்த்துவைத்துக்
குறித்திடுநீ சித்தருட சூரணத்தை
நாடுவது மாட்டயினி விபரங்கேளு
நலமாகப் பூசைசெய்ய முறையையூட்டு
தேடுவது புவிதனிலே யிருந்துகொண்டு
தேகத்தைச் சித்திசெய்து மேலேவறே. (23)

ஏறையிலே என்னூலைப் பார்த்துத்தேரு
எளிதல்ல இந்தநூல் தெளிவுமெத்த
ஆறையிலே அடிக்கடியே பார்த்துப்பேசு
அரைட்சணத்திற் சித்தியடா அறிந்துபாரு
கூறையிலே குருவினுட திறத்தைக்கண்டு
கொண்டிடுவாய் தினந்தோறும் ஆதிநின்று
தேறையிலே அனுபோகங் கண்டுபாரு
சிறப்படுமே சிவக்ஞானந் திறமதாமே. (24)

திரமான அஞ்செழுந்தா லவிதமாச்சு
திரியந்தச் சிகாரத்தால் வசியமாகும்
உரமான வகாரத்தால் வாசியோகம்
உற்பனமாம் யகாரந்தா லதீதமாகும்
பரமான நகாரத்தாற் குளிகைகட்டிப்
பார்க்கவே சரிபோகும் பண்பேசெய்து
வரமான மகாரமோ கனமுமாகி
வளர்ந்துகந்த சித்தரெல்லா மார்க்கங்காணே. (25)

காணமல் மாண்டார்கள் உலகத்தோர்கள்
கைபாகந் தெரியாமற் கெட்டார்கோடி
ஊணமற் போனதினா லனேகம்பேர்கள்
ஊர்சுற்றுங் குருக்களையிங் கருகழைத்து
தோணமல் உபதேசங் கேட்டசீஷர்
தொல்லுலகி லிறந்தவர்கள் அனேகங்கோடி
பூணமற் பூணுகின்ற பஞ்சதீட்சை
புகட்டினாற் சாவேது பிறப்பைமாற்றே. (26)

மாற்றுவதும் பிறக்கின்ற ரெண்டெழுத்தாம்
மகத்தான சித்தரெலலா மானவாறும்
ஆற்றுவது மூன்றோடே ரெண்டுஞ்சேர்த்து
அப்பனே அர்ச்சிக்க வாதஞ்சித்தி
தோற்றுவதும் பிராணயம் பண்ணத்தோணும்
தோஷமெல்லாந் திசைநோக்கி உருவைஎன்றும்
போற்றுவது மைங்காயக் கருவைப்போலப்
புனிதமாய்க் கிடையாது போதந்தானே. (27)

தானென்த ஆங்கார ஆணவத்தைத்
 தள்ளிப்பின் பாருமெய்ஞ் ஞானமார்க்கங்
கோனென்ற வெட்கமுடன் மமதைதள்ளிக்
 குறிப்பாகக் கற்பமுறை அறிந்துகொண்டு
பானென்று மிக்துவுட னாதம்ரெண்டின்
 பக்குவத்தை யறிந்தல்லோ பார்க்கவேணும்
வானென்ற வாழ்க்கையிலே உறத்துக்கொண்டு
 மருவிப்பார் வித்தையெல்லா மனத்திற்கண்டே. (28)

கண்டுகண்டு மனக்தேறி யுண்ணவேணுங்
 கற்பமுத மருந்திநிதங் காணவேணும்
முண்டிமுண்டிக் கருவிஜனே அறுக்கவேணும்
 மூதண்ட லேகியத்தைக் கொள்ளவேணும்
அண்டியண்டிச் சமுசாரத் தோடிருந்து
 ஆயிபதந் தனைப்பணிந்து பூசைசெய்வாய்
விண்டுவிண்டு உந்தனுக்குச் சொல்லிப்போட்டேன்
 விபரமா யுகாரத்தைப் பூசுவாயே. (29)

பூசுவது பூரணத்தை யுண்டசாரம்
 பூமிதனி லிருக்கமட்டும் துவாலேபோடு
வீசுவது புளியோடே நீறுஞ்சேர்த்து
 விரவியொன்றாய்த் துவாலேயிட்டு உருட்டிப்போடு
மூசுவது வாசமென்று பெண்ணினுக்கால்
 முழுமோச மாகிவிடும் கற்பம்போச்சு
ஏசுவது புளியுள்ளே மெத்தவுண்டு
 இரங்கிவிடுந் தனிவீட்டி லிருந்துசெய்யே. (30)

செய்கையிலே பலகூட்ட மனுக்களாகாச்
 சிவபூசைக் கிசைந்தவரைச் சேர்க்கலாங்கேள்
பொய்கையிலே முழுகிஞற் சாரம்போகும்
 போகவிட லாகாது முழுகவென்றாற்
கொய்கையிலே அகாரத்தை எடுத்துமாட்டு
 குருவருளால் ஆதியந்த அகாரந்தன்னே
கையிலே பூரணத்தை வாங்கிக்கொள்ளு
 கருத்தாக் கிதுமுறைபோற் செய்திடாயே. (31)

செய்திட்ட மந்திரமோ கோடாகோடி
செழிப்பான மூலிகையோ கோடாகோடி
கொய்திட்ட கருவிகளோ கோடாகோடி
குருவாகி நின்றமுறை கோடாகோடி
நெய்திட்ட சிவதீட்சை சத்திதீட்சை
நிலையான மவுனமென்ற தீட்சையுண்டு
எய்திட்ட முப்பத்தி ரண்டுதிட்சை
எடுத்துரைத்தே னைம்பத் தொன்றும்பாட்டே. ()

பாட்டான பாட்டப்பா முப்பதுக்குள்
பார்ப்போர்க்கு ஆதிமுத லந்தமட்டுந்
தேட்டான தேட்டெல்லாம் அதற்குள்ளாச்சு
தேசத்தின் கடத்தையெல்லா மிதற்குள்ளாச்சு
கூட்டான கூட்டெல்லா மிதனுக்குள்ளே
குலாவுகின்ற ஊனுறக்க மிதனுக்குள்ளே
ஆட்டான ஆட்டப்பா தீட்சைமார்க்கம்
அதைவிட்டா லொன்றுமில்லை தீர்க்கம்போமே (33)

போமதுதா னெதனாலே அழிந்ததென்றால்
போக்கோடே காதலித்தை எடுக்காதாலே
ஆமதுதா னழியாது போகமூழ்கி
அப்பனே கற்பமுண்ணக் கோடியாகும்
காமதுதான் பிறவிக்குட் பிறவியானேம்
காதாக்க ளறிந்தல்லோ உண்டாரப்பா
தாமதுதான் பூரணத்தை நோக்கநோக்கத்
தனிப்பிறவி யில்லாமற் றானுவாரே. 34)

தானான கற்பத்தை யுண்ணமற்றோன்
தாரணியோ ரறியாமற் கெட்டார்கோடி
ஊனான உடலுயிரை அறியமாட்டார்
உற்பனமாங் கற்பனையை அறியமாட்டார்
மூனான முப்பாழு மாகுமென்று
மூட்டிவிட்ட வகையறியார் போகிமார்கள்
வீணான பயல்களுக்கு விள்ளவேண்டாம்
விண்டிடுவே னிந்தமுறை யறியார்பாரே. (35

அறியாமல் வாதத்தைச் சுட்டுச்சுட்டு
அறிவுகெட்ட மூடருக்கு வாதமேது
விரியாமற் குவிந்தகற்ப தீட்சையாலே
விளைந்தமுதல் மேவவல்லோ வேதையாகும்
புரியாமற் சுட்டதினால் வருவதேது
பூவான பூரணத்தில் மீளவேணும்
சிரியாம னுலகத்தி லிருக்கவென்றாற்
சிவசிவா அதீதமது மூப்புச்சாணை (36)

முப்பூவு மும்மலமும் இரண்டுமொன்று
மூர்க்கமுள்ள ஆதியடா நாதம்நாதம்
அப்பூவில் விளைந்தச் சவுக்காரந்தான்
ஆரறிவார் சுக்கிலத்திற் கல்லுப்பாச்சு
தப்பில்லை யிவ்விரண்டாற் சடலமாச்சு
தயவான ஆண்பெண்ணு மிதுவேயாச்சு
இப்புவியிற் பிறவியறி யாதமாண்பர்
இனியேது காண்பதில்லை யறிந்துபாரே. (37)

பாரப்பா இல்லையென்ற பிறவிதானும்
பார்தனிலே பதினாறு முழத்தின்கீழ்
சீரப்பா பூமிக்குட் சென்றுபுக்கிச்
சிறந்திட்ட நவநீதம் புதைப்பினாலே
வாரப்பா காயாதி கற்பமாகும்
வளமான குருவடா அண்டமாகுங்
கூரப்பா நவக்கிரக மொன்பதுக்குங்
குருவாகுங் கருவியது தொண்ணூற்றாறே. (38)

தொண்ணூற்றாறு விதமான வாதம்வாதம்
தொடுகுறியி லறுபத்து நாலுமாச்சு
உன்னுற்ற பொருளாலே எட்டுமாச்சு
ஒடுங்குபன்னி ரெண்டினிலே எட்டுந்தங்கி
அன்னத்தின மலசலமும் அற்றுப்போச்சு
அறுசுவையாற் காயமது அழிந்துபோச்சு
கண்ணொத்த புருஷனுக்கு எய்தும்பாரு
கனமான பட்சியுட மார்க்கங்கேளே (39)

மார்க்கமுடன் மலசலமாம் வாய்நீர்வாதம்
மகத்தான பொருள்நாலும் வெளியேபோகாத்
தீர்க்கமுடன் பெலங்கெட்டு வயறுபோச்சு
திறமறியா திகைத்தள்ளித் தயங்கினார்கள்
கார்க்கமுடன் கருவான வழலையாச்சு
கருதியதில் விளைவுசவுக் காரமாகும்
ஆர்க்கமுட அதிலிரண்டும் நன்றாய்ச்சேர்ந்தால்
அதுதானே பெலக்காரம் அறிவாய்க்கேளே. (40)

கேளப்பா அமுரிபுளி யதன்மேற்போடக்
கெட்டியா யீரெட்டு மதிநாலாச்சு
ஆளப்பா இரண்டுடனே இரண்டுஞ்சேர
அப்பனே முப்பூவு முடித்தவாறுந்
தேளப்பா கொட்டுதல்போற் சுண்ணமாகத்
தினந்தோறும் ஆட்டிப்பார் ஆடைபத்து
நாளப்பா வாய்கூட வெந்துபோகும்
நாவுவெந்து வாய்வெந்து நாசமாச்சே. (41)

நாசமடா கருவிகளாந் தொண்ணூற்றாறும்
நலமாக வெந்துவெந்து போச்சதப்பா
பாசமடா ஆசையென்ற விருப்பம்போச்சு
பாழான கொரேமென்ற கோபம்போச்சு
காசமென்ற சற்பத்தாற் சித்தியாச்சு
கண்டிப்பாய் பதின்மூன்றி லுள்ளமட்டும்
வாசமென்ற துற்குணங்க ளுருகிப்போச்சு
வளமாச்சு பதின்மூன்று தீட்சைக்குள்ளே. (42)

உள்ளான உள்ளமெல்லா மொடுங்கியொன்றாய்
உறவாச்சு ஐம்பதுக்குள் தீட்சைமார்க்கம்
கல்லான கல்லெல்லாங் கரைந்துபோகும்
கடுமையுள்ள சுண்ணத்தா லிதுவுமாச்சு
புல்லான புதுப்பாண்டம் போலேபாகும்
புதுமையுள்ள சுண்ணத்தா லானவாறுஞ்
சொல்லான சொல்லெல்லாஞ் சொல்லமேலாஞ்
சுகமான நாதத்தா லானவாறே. (43)

வாறான உலகத்து வாதிமார்கள்
வகைநாலு சரக்குதன்னைத் தள்ளிப்போட்டுப்
பேரான வெளிச்சரக்கை வாங்கித்தானும்
பேருலகிற் சுடுவார்கள் சுத்தைபோலச்
சீரான மூலிகையில் வாதமுண்டோ
சிறந்திட்ட காயாதி யாகுமோசொல்
நீரான அகாரத்தா லாகுமாகும்
நினைவுகெட்டுப் போகாதே உண்டுபாரே. (44)

பாரடா சிவமூலி சகஸ்திரத்தெட்டின்
பாலிருக்கும் நாற்சரக்கைக் காணமாட்டார்
ஊரடா இருக்குகின்ற விணரப்பா
உணர்ச்சிகெட்டுப் போனாரே கருக்காணாமற்
சீரடா கருக்குருவை என்னவென்று
சீமையிலே அலைவார்கள் குருத்தோணாமற்
கூறடா அதுயிதென்ன வென்றுதானுங்
கூட்டமிட்டுப் பார்த்தல்லோ சாவார்வீணே. (45)

வீணான பயல்களுட மார்க்கங்கேளு
வெளியிலுள்ள கோவிலுக்குள் பூந்துபூந்து
கோணாமற் கும்பிடுவோ ரொன்றுங்காணார்
குறும்பரவ ரலைகின்ற மார்க்கமேதோ
காணாமல் நாணுகின்ற மடையரப்பா
நாய்போலத் திரிவார்கள் தலங்கள்தோறும்
தோணாது மூழுகுவார் தீர்த்தமென்று
துறையேதுங் காணாத மடையர்தானே. (46)

மடையனென்றாற் கோபிப்பான் மாடுமோடு
மகாமோட்சங் கண்டாற்போற் பூசைசெய்வான்
கொடையான கொடையதுதான் வந்தாற்போலக்
கூறுகெட்ட கழுதையவன் பூப்பறிப்பான்
விடையாதே அவர்குணத்தைப் பார்க்கும்போது
விதிப்படியே யவன்புத்தி மேவும்பாரு
படையான கருவிகளை வெல்லமாட்டான்
பரப்ரம்மம் போலிருப்பான் மூடன்தானே. (47)

மூட னுக்கு மூடனு யிருந்துகொண்டு
முப்மூலச் சுக்கிலத்தை அறிந்துஉண்டு
மூடனுக்கு மூடனு யிருந்துகொண்டு
மூர்க்கமுள்ள சமாதிதனி லிருந்துமீண்டு
மூடனுக்கு மூடனு யிருந்துகொண்டு
முடிவான நாலெட்டுத் தீட்சைபெற்றே
மூடனுக்கு மூடனு யிருந்துகொண்டு
மும்மூலங் கொண்டுமே மூத்திபெற்றே. (48)

பெற்றனடா தீட்சையினி லிருக்கும்போது
பேருலகில் மனுக்களுடன் கூடிவாழ்ந்து
உற்றனடா வறுமையிலே வறுமையாகி
ஒருவருடன் நான்பேச்சுப் பேசாமற்றான்
கற்றனடா செகத்திலுள்ள கல்வியெல்லாங்
கசகாப லதன்மேலே மூப்பாலுண்டு
சித்தனடா மெய்யனுக்கு மெய்யன்யானே
செகத்திலுள்ளோர் பொய்யனென்று செப்புவாரே. ()

பொய்யான காயத்தை மெய்யென்றெண்ணிப்
போக்கொன்றங் காணும லிருந்துகொண்டு
சையோக வாழ்க்கையிலே மதிமயங்கி
சருவாங்க மறியாத சண்டாளர்கள்
மெய்யென்ற பூரணமாஞ் சாகாக்காலும்
மெய்யாக உண்டறிந்தார் வேகாச்சுண்ணந்
தையலப்பா இரண்டினொடு நாலினாலே
தாய்பதத்தைப் பூசித்துத் தானானாரே. (50)

தானான மந்திரமோ ஐம்பத்தொன்று
தாக்கவதிற் கல்வியெல்லாம் மேலேவிள்ளும்
ஊனான உடற்பிறப்பி னுலேயாச்சு
ஒருமனதாய்க் கண்டோர்க்கு விதியைமாற்றிப்
பானான அமுதமுண்ட கற்பத்தாலே
பராபரசிவ ஞானற்பா ருலகிற்றானும்
ஊனான முப்பொருளைக் கண்டவாதி
உருக்கமுடனைம்பத்து ஒன்றுமுற்றே. (51)

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளிய

# முப்புச்சூத்திரம் 30.

சீர்சிறந்த குணமகமே ரதனிலுள்ள
செழுங்கமல விநாயகரைப் பணிந்துபோற்றி
கார்புகழும் பிரமருத்ரன் மாலின்பாதங்
கருத்திலே எந்நாளுங் கருதிப்போற்றிப்
பூரணியா மென்தாயார் வாலைதேவி
பொன்னடியைச் சிரசுதனிற் பொருந்திப்போற்றி
வாரணத்தி லேறுமென்ற னீசான் தன்னை
வாழ்த்தியே வாதமுப்புச் சொல்லுவேனே.

சொல்லக்கே ளிந்தநூ லார்க்குங்கிட்டா
சுகயோகி யாமாகிற் சிக்குமின்னூல்
கல்லிலே தேங்காயை யுடைத்தாப்போலக்
கருதுகிறேன் முப்பதுக்குள் கருவைப்பார்த்து
நல்லநினை வுள்ளமா ணுக்காசிங்கா
நாட்டாரோ டிணங்காதே குலத்துக்கீனம்
பொல்லாங்கு செய்குணத்தைத் தவிர்த்துப்போடு
பொய்களவு பிறர்தாரம் பெண்ணுந்தள்ளே. (1)

தள்ளடா நூல்பார்த்தோ ரநேகருண்டு
தவறுமற் பேசுவார் நூல்கள்கற்று
கள்ளர்களைக் கண்டாக்காற் கவிழ்ந்துகொண்டு
கண்ணெடுத்துப் பாராதே கருச்சொல்லாதே
வள்ளலடி மறவாதே மௌனயோகம்
வளர்பதியி லைப்பதையும் பார்த்துக்கொண்டு
துள்ளாதே முப்பதுவுங் கிடைத்ததென்று
துணிவாகப் பேசாதே துயரெய்தாதே, (2)

எய்தினாற் கடைத்தேற மாட்டாயஞ்வா
இகபரமா மிரண்டினுக்குந் துரோகியாவாய்
துய்யகுணந் தனைத்தாண்டி ஓடாதே
சொன்னபடி நீயிருந்து தொழிலைப்பாரு
அய்யனருள் வந்தெய்தும் ஞானமாகும்
அறுபத்து நாலுசித்துந் தானேயாடும்
பொய்யில்லை யாண்டையின்னால் புராரியாணை
பூதலத்திற் சொன்னதிது ஆகுதற்கே. (3)

ஆவதற்கு ஆயிரத்தைந் நூறிற்சொன்னேன்
அருமையுள்ள பூநீரை யெடுத்துக்கொண்டு
தாவுதற்குக் காரமொன்று சாரம்நாலு
தனதாகத் தானறிந்து பாண்டத்திட்டு
மேவியே மூன்றுநா ளானபின்பு
விபரமாய்த் தெளிவிறுத்துத் தெளிவிற்கேளு
தாவியே கந்தகமும் ரசமோடொக்கத்
தானரைத்துத் தெளிவுதனிற் கொட்டிப்போடே. (4)

போட்டாலு மின்னுமுள்ள சாக்கைக்கேளு
புகழான துருசதுவும் வீரம்பூரந்
தேட்டான பாஷாணக்தா ளகமோடொக்கச்
சேர்த்துமே பொடித்தந்தத் தெளிவிற்கொட்டி
வாட்டமாய் வாரமது வைத்துமூடி
வகையாக ஆதையிறுத்து வன்னிமூட்டிக்
காட்டாக ஜலமெல்லாந் தொக்குமாகிற்
கனகமென்ற பீங்கானி லூற்றிப்போடே. (5)

போடேநீ ரவியில்வைக்க வுப்பதாகும்
பொங்கமதா யுப்பெடுத்துப் பதனம்பண்ணு
காடான மூடருட னுரைசொல்லாதே
காட்டாதே யிப்பொருளைக் கருவாயெண்ணு
தேடாத தேட்டிதுதான் வெள்ளியிற்சொன்னேன்
சிவன்மீதி லாணையப்பா செய்துபாரு
மாட்டேனென் றேடுமறு பத்துநாலும்
வன்னியண்ணுஞ் செயமாகும் வகைதான்பாரே. (6)

பாரேநீ யிவ்வுப்பை யார்தான்செய்வார்
பாருலகிற் கொடுத்துவைத்தோர் செய்வாரப்பா
கூரான குருமொழியைக் கூறிடாதே
கோசபீசக் குறியைக் குணமாயாய்ந்து
சீரான நூலதனைப் பூசைசெய்து
சிவயநம வசூரத்தின் தண்ணீர்கண்டு
பேரான உப்பைவிட்டுச் சூரஞ்சொல்வேன்
பேசாதே வாதவுப்பு வயணங்கேளே. (7)

கேளேநீ சாரம்நவச் சாரமல்ல
கெடியான வெண்காரம் வெடியுப்பல்ல
தாளேநீ கேசாதி பாதமட்டுந்
தனியாக வளர்ந்ததடா தண்ணீருக்குள்
நாளேநீ யுண்சடத்தி லூண்தானுண்டு
நலமாகக் கொடுப்பார்கள் கேள்விவேண்டுஞ்
சாளான சிதம்பரத்தில் வளர்ந்தசாரஞ்
சடலமதி லிந்துப்பென் றிதற்குப்பேரே. (8)

போதனை மாற்றியல்லோ யிந்துப்பென்பார்
பேசாதே யவரோடு வாதுவேண்டாம்
பாராதே அவர்கள்முகம் பகையாயெண்ணு
பாடுபடாச் சண்டியென்று புறத்திற்றள்ளு
சீராய்க்கேள் சாரத்தை யறியவேண்டிற்
செபம்வேணும் தவம்வேணுஞ் சிந்தைவேணும்
பேரான பரம்பொருளைக் காணவேணும்
பேரின்ப வாழ்க்கையிலே நின்றாற்றானே. (9)

நின்றாக்கால் தன்னைத்தா னறிவாயப்பா
நிர்வாணி வாலைப்பெண் ணிருத்தஞ்செய்வாள்
குன்றான சாரந்தான் மண்ணிலுண்டாங்
குணமில்லா மாந்தர்களே கூறக்கேளுஞ்
சென்றான உன்சாண்தான் கள்ளைக்கண்டு
செகத்திலே வதைக்குடித்தால் வெறிமீளாது
குன்றான குவலயத்தி லானந்தக்கள்
குடித்தவனே மகத்தான சித்தனாமே. (10)

ஆமென்று சொல்லுகிறே னதுவேதென்றால்
அன்பான உன்னுடைய உடலுக்குள்ளே
வாமென்ற வாசமதாய்ப் பழுத்திருக்க
வளர்ந்ததடா ஒழியாத அருவியாகித்
தாமென்ற உன்னுடைய தாளின்கீழ
தாரைகொண்டு ஏகுதுபா ரமுரிதானும்
வாமென்ற தனைதப்பிடித்து மரக்காலெட்டு
மறவாம லளந்துவிட்டு வகையைக்கேளே. (11)

கேளப்பா கடைச்சாரம் பலந்தானைந்து
கெடியான வெண்காரம் பலந்தானைந்து
வேளப்பா லிங்கமொரு பலந்தான்ரெண்டு
விதமாக இடித்துச்சா ரத்திற்கொட்டி
மீளப்பா வாரமது வைத்துமூடி
விளம்புகிறேனைந்தாநாள் தெளிவிறுத்து
வாளப்பா வன்னியிட்டுக் குமூறக்காய்ச்சி
வண்மையுடன் ரவிதனிலே யுலர்த்திடாயே. (12)

உணர்த்தியே குப்பிதனில் வைத்துக்கொண்டு
உத்தமிக்குப் பூசைசெய்து பாதம்போற்று
மணர்ந்ததுவே கற்பூர வாசம்வாசம்
மனதடக்கிக் கொண்டாக்கால் வயதோநூறு
கனதனமாங் காரமுடன் சாரஞ்சொன்னேன்
கனிவான அண்டத்தைச் சொல்லக்கேளு
மனந்தளா மண்ணுக்குள் வளர்ந்தஅண்டம்
வன்னியுண்டு சலமுண்டு வார்த்தைமூன்றே. (13)

மூன்றாகி ஒன்றாகி நின்றஅண்டம்
முப்பழுமாய்ச் சருக்கரையா யமர்ந்தஅண்டங்
குன்றாத கோபுரமாய் வளர்ந்தஅண்டங்
குவலயத்தில் மூன்றுதிக்கு மூதிக்குமண்டஞ்
சென்றான செண்டாகி உதித்தஅண்டஞ்
செகஞ்சுமந்த ஆனைக்கல் லென்ற.அண்டம்
ஒன்றாகி எப்போது மழியாஅண்டம்
ஓகோகோ சித்தருண்ணும் அண்டந்தாமே. (14)

தாமேதான் தானாகி முளைத்தஅண்டஞ்
சண்டமா ருதமென்னுஞ் சயிலஅண்டம்
வாமேதான் வான்கொழுந்தா யுதித்தஅண்டம்
வாசாம கேசாமாய் நின்றஅண்டஞ்
சாமர்த்திய மல்லவப்பா இந்தஅண்டஞ்
சமரசமாய்ப் பாடிவைத்தே னண்டந்தோண
நேமத்தில் சொன்னபடி பந்தஞ்செய்து
நீதோண்டி எடுமொழியை மறந்திடாதே (15)

மறவாமற் கொண்டுவந்து உறலிலிட்டு
மாவதுபோ லிடித்ததனை எடுத்துக்கொண்டு
இறவாமற் கரிவுப்பை யதன்மேற்கொட்டித்
திடமாய்மேற் சட்டியிட்டுச் சீலைசெய்து
இரவியில்லை மூன்றுநாள் காய்ந்தபின்பு
இயல்பெறவே தூபமிட்டுத் தீபங்காட்டித்
தெரியாமற் புதைத்துவைத்து மண்டலந்தான்
தேறியபின் பதையெடுத்துக் கல்வத்திட்டே. (16)

இட்டுமே யரைக்கவொரு ஜெயநீர்கேளு
இரையாதே இப்பொருளை உன்னுள்வைத்துத்
திட்டமாய்ப் பண்ணைச்செவ் வீரம்வாங்கித்
திடஞ்சமனும் மனோசிலையும் நிரப்பிவிந்து
அட்டமாய்ப் பொடித்ததனைப் பலமாய்மைந்தா
அமுரிபடி அரைவீசம் விட்டுகல்ல
கெட்டியாய்ப் பிசைந்துபீங் கானில்வைத்துக்
கெடியாகப் பனிதனிலே வைத்துப்போடே. (17)

வைத்துமே வாரஞ்சென் றதையெடுக்க
வகையான செயநீராம் பதனஞ்செய்து
சத்துவாய்க் கல்வத்தில் வைத்தமுப்பைச்
சதிராயிச் செயநீரை விட்டுஆட்டிப்
பத்தியாய் வாரம்வரை அரைத்தெடுத்துப்
பரிவாக வில்லைசெய்து ரவியிற்காய்ந்தாற்
சித்தியா மைம்பதெருப் புடத்திற்போடு
சீதளமா யாறியபின் னெடுத்திடாயே. (18)

எடுத்துமே குப்பிதனிற் பதனம்பண்ணு
ஏகாந்த அக்ஷரத்தை லக்ஷமோது
விடுத்துமே செம்பதுதான் பத்துச்கொன்று
வீசிப்பார் பத்தரையுந் தப்பாதப்பா
கடுத்துமே நீக்கிவிடு கல்லென்றேதான்
கருத்திலெண்ணு ஞானசற்ப யோகந்தன்னை
நடத்துமே அண்டாண்ட மயம்பொன்னாகும்
நாடுமலை கல்மரங்கள் நிலம்பொன்னாமே (19)

பொன்னாகுங் கோடிவரை யழியாமூப்புப்
பொருளறிந்து பாடிட்டோன் அவனைசித்தன்
என்னாளு மறிவுதனில் வளர்ந்துநிற்கும்
எம்பிரான் றன்முடித்த ஏகமூப்புச்
சொன்னேன்யான் சிவயோகி தனக்குக்கிட்டுஞ்
சோரமில்லா நெஞ்சினர்க்குச் சித்தியாகும்
என்னையா இந்தமுறை யார்க்குக்கிட்டும்
எம்பிரா னிடமறிந்தோர்க் கெய்துந்தானே. (20)

தானென்றுஞ் சுத்தபத் தினியோடொக்கத்
தான்மருவி மற்றவைரத் தாயென்றெண்ணும்
வானென்ற மார்தருக்கு மகாயோகிக்கும்
மவுனமொடு இன்னூலைப் பார்ப்போருக்குங்
கோனென்ற தானதர்மங் குறைவில்லார்க்குங்
குற்றமது நினையாத குணத்தினோர்க்குந்
தேனென்ற குணத்தோர்க்கு எய்துமின்னூல்
திருடர்களுக் கெந்நாளுஞ் சிக்காதென்றே. (21)

என்றேதான் செலவதிகஞ் செய்யவேண்டாம்
இயல்மூன்று பணத்திற்கு அதிகமாகா
அன்றுடஞ் செபதவங்கள் பக்தியோடும்
ஆத்மாவைக் கண்டறியு மட்டுநீயும்
அன்றாடஞ் செய்தொழிற்கு மேலாகாது
அன்பர்களை யென்னாளும் மறக்கொணாது
நன்றாகப் பிழைக்கவென்று மூப்பதுக்குள்
நலஞ்சொன்னேன் சாபமில்லை அடைவாய்வாங்கே. (22)

வாங்குவா யாயிரத்தைந் நூறும்பாரு
வகையசமெண் ணூருடனே ஐநூர்பாரு
பாங்குபெற மூந்நூறும் நூறுமைம்பப்
பதிவான முப்பதுவும் பதினைந்தான்
ஏங்காமற் பதினொன்றுங் குறைவில்லாமல்
இவ்வுலகிற் றன்கிடைத்தா லவனேசித்தன்
பாங்கமாய்த் திரியாதே பழுதுமாகும்
படுபட்டாற் பலனுண்டு பாரின்மீதே. (23)

பாரின்மே லூனமில்லார் பிறந்தபோது
பத்திமுத்தி வைராக்கியம் பண்ணவேணும்
கூரியே குருவருளைத் தேடவேணுங்
குருவறிந்து முன்கற்பங் கொள்ளவேணும்
தேரியே யோகத்தில் நின்றுகொண்டு
தெளிவான காதாந்த சாரம்நூறும்
வீரியமாய் வாதமிரு நூறும்வார்தது
வீதிசுத்தி வந்தவனென் பிள்ளையாமே (24)

ஆமேதா னிரண்டடியாய்ச் சொன்னவேதம்
அதுபோதும் உலகோர்க்கும் அறிவோனுக்குங்
காமேதான் காமனையும் ஒழித்துப்போட்டாற்
கைக்குநெல்லிக் கனியெனவே கடவுள்நிற்பார்
சோமனென்ற நீரறிந்தோன் சுத்தவாதி
சுத்தசூல மறியாதான் சுணங்கனாகும்
காமப்பால் கானற்பால் தனையருந்திக்
கானகத்தின் றெழில்பாரு கடியசித்தே. (25)

சித்தியாம் முத்திபெற வைக்குந்நீரு
சீர்சிறந்த தாய்பதத்தில் வைக்குநீரு
வெத்தியாம் விளக்கொளியாய நின்றநீரு
வேதாந்த வேதவொளி கண்டநீரு
சத்தியாய்ச் சிவமாசித் தழைக்குநீரு
தாரணியெங் கும்நிறைந்து சமைந்தநீரு
புத்தியாய்ப் பூமலராய்ப் பூத்தநீரு
புகழ்மாயை தனையொழிக்கும் பிரமநீரே. (26)

நீரிலே நீரறிந்தால் நிலைக்கும்வாதம்
நிலையான சிதம்பரமுங் காணலாகும்
காரிலே கார்பூத்துக் கறுத்துத்தோன்றுங்
காரமென்ற பொருள்தானுங் காட்டும்பாரு
சீரியதோர் நாகத்தை யாட்டலாகுஞ்
திருடரென்ற நவலோகஞ் சுண்ணமாகும்
வீரியத்தைத் தான்தொலைத்துப் பேடியாக்கும்
விளையாடும் குழந்தைகுணம் வருகுந்தானே. (27)

தானென இவைகளுக்கு ஆதியான
தாய்தந்தை இரண்டெழுத்தைக் காணவேணும்
வீணாகத் திரியாதே வெளியுள்பாரு
வெண்மதியாம் வாசியென்ற சவாரிசெய்வாய்
ஏனோதான் வாழ்நாளை வீணைப்செய்தாம்
என்மகனே அதையறிய நாளோயில்லை
வானாட்டி லுள்ளோர்கள் செய்தபாதை
வழிதெரிந்து நீசெய்து சித்திகாணே. (28)

காணப்பா முப்பதுக்குட் கருவையெல்லாங்
காட்டினேன் பரிபாஷை கபடில்லாமல்
ஏனென்று பேசாதே மனைவியோடே
இருந்தவனே என்னுடைய பிறவியாகுந்
தோணவே இவ்வுலகில் யார்க்குக்கிட்டும்
தூயமுதச் சொற்கடவா மாதுதேவி
வாணப்பா தவமுடித்தோன் றனக்குக்கிட்டும்
வழிதுறைகள் சுளுவாக முடிப்பாய்தானே. (29)

தானேதா னிந்தவொரு நூலைத்தானுந்
தனியாக வைத்துநல்ல பூசைசெய்து
மானேதகன் சிவயநம ஓம்கிலியென்று
மனத்திலே நினைக்க நாளும்பேசங்
காலேதா னோடாதே காமத்தீயாற்
கலங்காதே மலங்காதே காடேறாதே
வானேதான் பொருளிதென்று அறிந்துகொள்ளு
வஞ்சனையில் லாமொழிமுப் பதுவுமுற்றே. (30)

முப்புச்சூத்திரம் முப்பது
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய

# வாத சூத்திரம் 16.

காப்பு.

பூரணமாய் நின்றெழுந்த முதல்வன்காப்பு
புகழ்பெரிய அம்பிகைப்பெண் பாதங்காப்பு
காரணமாங் காரசாரக் குருவாங்காப்பு
கதித்தெழுந்த ஷழிமுனியின் பாதங்காப்பு
வாரணமாம் ரவிமதியும் வழலைகாப்பு
வாக்குதவுஞ் சரஸ்வதியும் பிரமன்காப்பு
ஆரணமாம் லட்சுமியின் பாதங்காப்பு
அறுமுகனுங் கணபதியும் ஆதிகாப்பே.

காப்பாக என்கருத்துக் கிசைந்தமைந்தா
கருத்துள்ள ஏலேலச் சிங்கமேகேள்
வாப்பாக மறைவான முப்புமார்க்கம்
வகைதெரியச் சொல்லுமென்று பணிந்துகேட்டாய்
எப்பாகச் சித்தரெல்லாம் பாடிவைத்தார்
என்மகனே அதையறிய வயதோயில்லை
தாப்பாக மூப்பூவை வெளியதாகச்
சாற்றுகிறேன் சிந்தைவைத்து மகிழ்ந்துகேளே. (1

கேளப்பா ஈரடியாய் வேதஞ்சொன்னேன்
கெடியாக இவ்வுலகோர் பிழைக்கவேண்டி
கோளப்பா பரிபாஷை ஒன்றில்லாமற்
கொட்டினேன் ஆயிரத்தைந் நூற்றினுள்ளே
தாளப்பா அதைக்குறுக்கி எண்ணூர்சொன்னேன்
தயவாக அதைக்குறுக்கி ஐந்நூர்சொன்னேன்
மூளம்பா அதைக்குறுக்கி முந்நூர்சொன்னேன்
முக்கியமாய் நாதாந்தம் நூற்சொன்னேனே (2)

சொன்னேனே இவைகளிலே விரிவாய்த்தானே
துய்யகுண முள்ளதிட சித்தசிங்கா
பொன்னேரற் புத்திதனில் மிகுந்தபின்னாய்
பூரணமாய் முப்பதுக்குட் கருவைஎல்லாம்
பின்னாலே பரிபாஷை பிழையில்லாமற்
பேதாதி பேதங்கள் தவறில்லாமற்
பன்னாமற் கோசாமற் பதம்பிரித்துங்
பாடுகிறேன் வெள்ளையாய்த் தெரியத்தானே. (3)

தானான வாதத்தின் மூப்புக்கேளு
தலைகீழாய்ப் பாடிவைத்தார் சித்தரெல்லாம்
ஏனோதா னுலகத்தோர் மலைக்கும்வண்ணம்
ஏகமாய்ப் பரிபாஷை யாகச்சொன்னார்
வானபிரா னெனக்குரைத்த வண்ணமாக
வஞ்சனைக ளில்லாமற் சொல்லக்கேளு
காணாத காரத்தின் பெருமைதன்னை
கண்காட்சி யாகவேதான் காட்டுவேனே. (4)

காரமென்றும் வீரமென்றும் பச்சைஎன்றுங்
கதிரென்றுங் கன்னியுட நாதமென்றும்
போரான பிண்டமென்றும் குருவண்டென்றும்
பேர்பெரிய கும்பிக்கல் வழலைஎன்றும்
வாரான புளிஎன்றுஞ் சவ்வாதென்றும்
-வகையாக ஐங்கோல வன்னிஎன்றுங்
கூரான கோசமென்றுங் குமரிஎன்றுங்
குணநீர்மேல் நெருப்பென்றுங் கூறுந்தானே. (5)

தானான சிலைஎன்றுந் தாரைஎன்றுந்
தற்பரமாஞ் சத்திசிவ பரைதானென்றுந்
கோனான பானைஎன்றுங் குருதிஎன்றுங்
கூறுவார் நாமங்கள் பேதாபேதம்
வீணாக இதனாலே மாந்தரெல்லாம்
வெவ்வேறாய்ச் செய்தழிந்து விருதாவானார்
மானான காரமென்றால் மண்தானப்பா
மண்ணில்மிக மகத்தான மண்தான்பாரே. (6)

பாரேநீ தைமாசி மீனமூன்றிற்
 பலிக்குமே சந்திரனார் விந்திலைலே
சீரேகேள் மண்தனிலே ஜலமேபாய்ந்து
 சிக்கிபதில் ரேசித்து ஜெனிக்குங்காரம்
வாரேதான் ரவிபடவும் பூக்கும்பாரு
 வானவர்கள் மெச்சுகின்ற வழலைமைந்தா
மீராமல் மறியலிட்டு மூன்றுநாளும்
 விடிந்ததொரு நாலாநாள் ரவிக்குமுன்னே. (7)

ரவிபடா ததற்குமுன் னதனைவாங்கி
 நாதாந்த மூர்த்தியரைப் பணிந்தெடுத்துத்
தவியாதே இதற்குநிக ரொன்றுமில்லை
 சந்திரனைத் தரித்தசிவ மைந்தனாகும்
புவிமீதிற் சொல்லிவிட்டேன் பூரந்தன்னைப்
 புத்தியினற் செய்பாகம் அறிந்துகொண்டு
அவியாத சாரத்தின் அருமைதன்னை
 அறைகுறேன் ஏலசிங்க மறிந்துகொள்ளே. (8)

கொள்ளவே ஆதியிலே உதித்தநாதங்
 குணமான சுத்தஜல மிதற்குப்பேரு
வள்ளவே வழலையென்றும் பசளையென்றும்
 வாகான வஸ்துவென்றும் தேன்பாலென்றும்
விள்ளுவார் வெண்சாரை பனஞ்சள்ளென்றும்
 விபரமுள்ள பூநீர்சஞ்சீவிஎன்றுங்
கள்ளான பாறைஎன்றும் விந்துவென்றுங்
 கானகத்துச் சாரைஎன்றும் பாடினாரே. (9)

பாடினார்வெண் சாரைகரு நெல்லிஎன்றம்
 பதிவான காசாம்வே ரென்றுஞ்சொல்வார்
தேடினல் வெளிகளிலுங் கிடையாதப்பா
 தெள்ளமிர்த முள்ளிருக்கு மூண்டுதேரு
கூடிப்பார் அண்டபிண்டம் நிறைந்துநிற்குஞ்
 குணமான பனைமரமென் றதற்குப்பேரு
நாடிப்பா ரனந்தமர மெங்குநிற்கும்
 நலமாகப் பாளைகொய்து நாட்டம்பாரே. (10)

பாரேநீ பொதிகைமலேச் சார்பிலப்பா
பாங்காக நான்குபே ரதற்குமுண்டு
தேரேநீ மலேயினுச்சிக் காடுமுண்டு
தெளிந்துநின்ற கீழ்வரையும் ரோமக்காடு
கூறேநீ ஐந்தெழுத்தைத் தழுவிநிற்கும்
குணமான அகாரமென்று மதற்குப்பேரு
வாரேநீ பீஜமென்று மதற்குப்பேரு
வகையான அகாரமைந் தெழுத்துமாமே. (11)

ஆமப்பா காரமுடன் சாரஞ்சொன்னேன்
அதற்குயிரும் நிலேமூன்று மறியச்சொன்னேன்
காமப்பா அதுகளுட பேருஞ்சொன்னேன்
கருத்தறிய நின்றநிலே சூட்சஞ்சொன்னேன்
நாமப்பா மறைப்பெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
நான்கண்ட பாகமிது வேறுமில்லே
காமப்பால் தனேஒழித்தோர்க் கெய்துமின்னுல்
கண்டுகொள் ளுப்பெடுக்கக் கருச்சொல்வேனே. (12)

கருச்சொல்வேன் காரமது ஒன்றேயாகும்
கனிவான சாரமது நாலதாகும்
உருதியாஞ் சாரத்தி லதைக்கரைத்து
உறவாக்கி அதைநீயும் பதனம்பண்ணு
அருதியாய் மூன்றுநாள் தெளிவிறுத்து
அடைவான கடைச்சாக்கு வீரம்பூரம்
நிருதிநீ பொடித்ததிலே தூளேக்கொட்டி
நேராக முன்போலத் தெளியவைத்தே. (13)

வைத்துமே மூன்றுநாள் தெளிவைவாங்கி
வாகாக அடுப்பேத்தித் தீயைமூட்ட
நைத்துமே ஜலமெல்லாம் சுண்டிப்பினபு
நாயகமே பீங்கானில் வார்த்துப்போடு
பைத்துமே ரவியில்வைக்க உப்பதாகும்
பாங்காக அதைஎடுத்துப் பதனம்பண்ணு
சைத்துமே தாய்தந்தா ளென்றுசொல்லி
சரியாகக் குப்பிதனி லடைத்திடாயே. (14)

அடைத்தபின்பு சிறுகண்ணும் நாகம்வாங்கி
அதையிலுப்பை எண்ணெயிலே சுத்திசெய்து
திடப்படவே நாகமதை உருக்கிச்சாய்க்க
திகட்டாம லுருக்குமுகங் கிராசஞ்செய்ய
வடுப்படவே உப்பெடுத்துக் கொடுத்துப்பாரு
வாதியே நாகச்செம் பாகுமப்பா
மூடிப்பட்ட ததைக்குருவாய் வைத்துக்கொண்டு
மூவுலகிற் சித்துவிளை யாடுவாயே. (15)

ஆடப்பா செம்பதைத்தன் பத்துக்கொன்று
அடைவாக நீகொடுத்தால் யீரஞ்சப்பா
மூடரப்பா முறையறிந்து செய்யமாட்டார்
மூட்டரளுக் குரையாதே மூழ்கிப்போவாய்
தேடப்பா தேட்டான தேட்டிதாகும்
தெரியவே சொல்லிவிட்டே னுணுக்கமாக
காடப்பா திரிந்தேநீ அலையவேண்டாம்
கண்டுகொள்வாய் பதினாறுங் கணக்குமுற்றே. (16)

திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த சூத்திரம் பதினாறும்
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளிய

# மூப்பூ சூஸ்திரம் 11

## திருப்புகழ்ச் சந்தம்.

ஆதியந்தமு மேயடைத் தாண்டருள்
சோதியாம்பர நாதனடிதொழ அருள்மேவி
நீதியாயெனை யீன்றரு ளன்னையாம்
சாதிபெண்குலத் தாரணி பூரணி அடிபோற்றி
ஓதியாயெனைப் பெற்றதோர் வாலையும்
மாதுபங்கய மாமலர் சூடியான் பணிவேனே
ஈதறிந்து யியம்பினினன் திருவருள்
ஏதுமே தடையில்லை என்னூலது எழியோர்க்காய்

எளியனுயிர மேறுட னைந்துநூர்
யொழியு மேகம தாகவே கூறினேன் புவிமீது
கிழியுமெட்டுநூர் மொழியு மைந்துநூர்
விழியுமூன்றுநூர் சுழியுமொன்றுநூர் குருவாக
வழியுமொன்றுநூர் புகழுமைம்பது
சுழிவுமுப்பது அறிவிலாதநூல் பதினாறு
ஒளிவும்நாதநூர் விதியறிந்திடு
அழிவிலாப்பொருள் மொழியும்பத்தொன்று பொதுவேலம்

ஏலயேலமெனக் கூவிப்பாடுறேன்
ஜாலஜாலஞ்சை யோகமறிந்திடார் சனியாலே
கோலகாலனருள் நீலகண்டப்பொருள்
நீலிநீலியெனுந் தாயுமோனமருள் தருவாளே
ஆலியாலியெனும் ஆயிசொன்னதிது
போலிபோலியென ஊர்கள்சுற்றியே திரிவாரும்
வேலிவேலிதழை காய்கிழங்குகனி
காலிகாலியென வாகுவாகுமென்ப திதுமோசம்

மோசமோசமென் றேவுரையாடுவான்
ஆசபாசவினை யானதையொளித்தோ ரணுகாரே
நேசனான ரசவாதியென்பவன்
தேசதேசமதி லேதிரிந்தவனும் வந்தேதான்
மோசமாகிக்கண் கெட்டலைகுவார்
கோசபீசமறி யாதமூடர்கள் தெரியாமல்
வாசிவாசிவா ரேசகத்திலருள்
பூசையுற்றுமன நேசமுற்றவன் தனவானே

தனந்தனமென எண்ணிடும்பேயர்கள்
தனமுங்கண்டிடார் நினைவுமாறுது அலைவாரே
நினைவிலாதநீதா ரெனதுசீடனே
உனதுமீதினி லன்புவைத்து னுரைசெய்வேன்
கனககாரமது புளியதாகிவிடும்
மூனதாகவே முப்புமன்க்கமு மறிவாயே
தினமதாகவே பனியின்காலமதில்
நினைவதாகவே கவனமாயெடு இதுதானே

தானமென்றபொருள் தன்னைத்தானேயறி
மோனமந்திர சாரமுண்டதில் தெரிவாயே
ஏனமாளவும் யாகமீறிடா
சோணையும்பொருள் கானங்கூடிட அறிவாயே
தானமாகவே நானுமீய்ந்திட
காணலாமிது காரசாரமும் கரைத்தேதான்
வானவன்னியில் காய்ந்தபின்னது
சீனக்குப்பில் நாணையத்துடன் அடைத்தேதான்

அடைத்தபின்னதில் அவ்வையுச்சரி
அடைத்துமண்டல மேகழித்தெடு கதிரோன்முன்
இடத்தினிற்பெரு மிடத்தில்வைத்திடு
சடத்தமின்னமோ ரிடத்தில்வைத்தெடு சரியாக
அடைத்துப்பூமியின் நாதமெடுத்ததை
அடைத்ததவ்விடம் புடத்தைமுடித்திடு வகையாக
திடத்துடனிரு பெழுத்தையுமதில்
அடைத்துடனொரு வாரமானபின் அதின்மண்ணை

மண்ணைக்கெல்லியே மாரவெடு
    விண்ணுமண்ணுமே விளைந்தொருரூபமாம்    நிழலாகும்
கண்ணில்கண்ட சவ்வெழுத்தையுச்சரி
    பண்ணுஞ்சாரைபோல் பாயுஞ்செலக்குமிழ்    சரியாக
திண்ணமாகவே சேர்ந்தவைப்பிது
    வண்ணமெட்டுள திக்குபந்தனஞ்    செய்வாயே
எண்ணியெண்ணியே யேழைமாந்தர்கள்
    மண்ணிலுன்னியே மடிந்தார்கோடியே    அறியாமல்

கோடியானகல்லுத் தேடியெடுவினை
    யாடலாமதில் வீடெலாந்தங்க    மிதையீசன்
வாடிடாமலே ஆதியிலிதைத்
    தேடிவைத்தனன் யோகிசட்டுடே    தெளிவாக
நாடியசித்தன் கூடிவாழ்ந்திட
    மாடிகட்டிடப் பாடிப்படித்திதைச்    செய்வார்கள்
சாடிடுங்கார சாரவுப்பையும்
    போடுபோடுநீ யுளியதாகிடும்    புசலாதே

புகலிடாமலே குப்பியிலேயடைச்
    செகத்தில்மண்டலஞ் சமாதிகழித்தெடு    கனிவாக
இகபரப்புகழ் மௌனமந்திரம்
    அகமகிழ்ந்திட துகையறுநூறு    உரைப்பாயே
வகையதாகவே கல்வுந்தன்னிலே
    தகமைதீர்விட்டு தானரைத்துநீ    வடிவாக
துகையதாகவே ரவியிற்காய்ந்தபின்
    பகலிலேழுமண் சீலைசெய்துநீ    புடம்போடு

போட்டுப்பின்னதை வாட்டியேயெடு
    காட்டுவாய்பரி பத்துக்கொன்றிதை    இடுவாயே
நாட்டுநாட்டுநீ நாலுயுகம்வரை
    ஆட்டுஆட்டுநீ யார்க்குங்காட்டாதே    வெளியாக
பாட்டிலேபய னின்னதிதுவென
    எட்டிலெழுதின காரியமறிந்துநீ    செய்வாயே
மாட்டுமோட்டென பதினொருபாட்டையும்
    கேட்டுக்கொண்டு நீகிரகித்தறிந்திடு    முடிவாமே

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய

# நவரத்தின சிந்தாமணி எண்ணூருக்கு

# சூஸ்திரம் 100

வேதாந்தமென் ணூர்தன்மொழி விசிதமொரு நூறும்
    மேவுந்தமிழ் கவிசொச்சமும் விதியாலிவை யருளும்
நாதாந்தசின் மயமேவிய நவரத்தின பீடம்
    நவகண்டமீ ரேழும்புகழ் நவசித்தர்கள் மகிழும்
பாதாம்புய நாதாக்கள்தன் பரிபூரண கமலம்
    பதினெண்பல கலையாய்ந்து நூல் பாடப்பணிந் தோதும்
தாதாவெனும் பொதிகைக்கிரி தலம்வாழ்குரு முனிவர்
    தாள்போற்றிரு வடியேதொழு தர்ச்சித்தோ துவனே.()

மேவுந்திருச் சிற்றம்பல சனகாதிகள் சூழும்
    விண்தாவிய பொதிகைக்கிரி மேவும்வள ராசன்
தாவுமகத் தீசரெனை யாட்கொண்டடி யேனை
    தமிழோதிமெய்ஞ் ஞானச்சுழி தலமேவிய குருவால்
யாவும்பல பொருளுமருள் யமிர்தமெனக் கூட்டி
    ஆதாரமே லாதாரமு மனுக்கிரக மளித்து
காவுஞ்சுழி மூலாதாரப் பிராணாலயர் தந்து
    கருவூர்குடி நகர்வாழெனில் கருணையளித் தாரே. (2)

இரவிக்கதிர் முகமேனிய பகல்போன்றிட லொளிவாம்
    இமையோ ரயன்மாலுஞ்சிவ மறியார்சுழி தலமுந்
திரவியருள் ஞானப்பதி செயல்பெற்றிடு பெரியோர்
    தினம்வாசிகொண் டமிர்தமுணற சித்தாதிகள் பெருமை
மறலியகத் திடுவார்யகி தலமேகுடி கொள்வார்
    வாழ்வார்திரு சிற்றம்பல மகிழ்வார் மதிபூண்டு
காணுதிகட் பொறிநீரிட கருவிதனைச் சுடுவார்
    காந்தத்துட முறையாலுமே கருதும்வினை யொழியே. ()

காந்தச்செந்தூரம் வேறு

ஊசிக் காந்தமெனி லேழு பூசியிவை
யுயரத் தூக்கிவிடு மாதலால்
ஓரி ரண்டுபல மாவதற்கரிய
வுறுதி வைத்துக்குழிக் கல்லில்நீர்
வீசி யேவிடுவீர் தூள தாகப்பொடி
மேவி சம்பழநீர் விட்டபின்
மேல தாகவொரு சாமஞ் சாடிவனு
வேக மாமயன மிவையதும்
பாசி போன்றிடுதல் மெழுகு தன்பதமும்
பார்த்தெ டுத்தும்வழித்து வில்லைசெய்
பாரு தன்ரவியில் வைத்திடுஞ் சுவரல்
பாக மாகும்பத மாயெடு
பூசி தமகலி லூட்டி மேலகனு
புகல்மண் சீலைபு மேழதும்
புலல்ச லஞ்சுவா கதிர்மு கம்படவும்
பூட்டி டும்ரவியில் வைத்திடே. (4)

சீலை செய்தெடுகே ணேசன் பூசையிடு
செய்கை யாய்ப்புடமுங் கோழிதான்
செவியு மூன்றுவிசை சாரு விட்டரையுர்
தெளிவதாய் மயனம் வருவதால்
மூல மாமிவையு மூன்செய்த புடமும்
முறைத விற்படியு முணர்வதால்
மூலையெ னுஞ்சலநீர் தாழை தன்னியல்பு
மூட்டிக் சாட்டிவிடு மயனமால்
வாலை தன்மெழுகு சாம மாட்டியெடு
வருக லால்வழியும் வில்லைசெய்
வைத்தி டும்ரவியி லிட்டிடு மகலில்
வட்டி மூடிமண் சீலைசெய்
மாலை நோமதில் குக்கு டத்தின்புடம்
வன்னி யிட்டுமெறு பின்பது
மாறு மூன்றுபுடந் தாழையின் முலைநீர்
வார்த்துச் சாடிப்புட மூன்றிடே. (5)

காந்தச் செந்தூரமும் வருத னும்புரசை
காணும்பூ வின்னிற மாதலால்
கண்டெடு சிமிளிற் பதனமாய் முடியுங்
கைவசப் படுவ தரிதுகாண்
இந்த செந்தூரமி தாகு மிவ்வவிழ்த
மிணைய தாகுமனுப் பானமும்
நிலைகொண் டேத்திவிடு நோய்மி ணிக்கிடவும்
நிகரி லாதமுறை யறிதலால்
விந்தை யாவினுட கிருதமா மதனில்
விட்டிடு மிலையும் பணவிடை
வினவு மிந்தவியஞ் செந்தூ ரந்தனினு
மேவி ளங்குபத மிவ்விதம்
சிந்தை யேனுனது வறுமை நீங்கிவிடுந்
தேக மாவதுஞ் சவுக்கியம்
சிலேத்தும மாம்வினைக ளிருபத் தொன்றுவிடுந்
தீரு மண்டலமி தாகுமே. (6)

மண்ட லத்திலறுங் காச ரோகமெனில்
மாறி யோடிவிடு மாய்கையாய்
வச்சிர தேகம்வனு வாகுங் கற்றாணது
மதூா நீரதுவு மாறிடும்
அண்ட வாயுவுடன் தமர கங்களும்
ஆறு சூலையும கோதரம்
அவிழ்தமு முணர்வீ ராவின் பாலுஞ்சிறு
பயறு மன்னமு மருந்துவீர்
கண்ட வர்களனு போக பண்டிதர்கள்
காண்கி லார்களெனில் கண்டபேர்
கனக மாகுஞ்சடம் நோய்க ளற்றுவிடுங்
கருது பத்தியமறு பத்தியம்
விண்டுநோய் விடுமே தந்தி மேகம்வெடி
சூலை குன்மசயம் வோடிடும்
விசித மோர்தினமி ரண்டு வேளையுணர்
மேனு மேனும் வினைபோகுமே (7)

வேறு

வினைப்பயன் விடுபட் டேபோம் மெய்க்குரு விளக்கத் தாலும்
இணையிதற் கவிழ்தமேது யின்னுந் தேன்க முஞ்சி வாங்கி
முனைந்திடு மனுப்பா னத்தில் முன்புமண் டலந்தான் போலுங்
கனைந்திடும் நோய்க ளேகுங் காந்தச்செந் தூர மூட்டே. (8)

செந்தூரம் பணந்தான் கொண்டு தேனதுங் கழஞ்சு தாக்கி
இந்திரன் முகத்தின் நேரே யிருந்துநீ குழைத்து மத்தி
மந்திரத் தியானஞ் செய்து மகிழ்ந்துமண் டலந்தா னுண்ண
தந்திர மாக வெய்துஞ் சச்சுவாய் வதுவும் போமே. (9)

பசும்பயர் பாலுஞ் சோறும் பத்திய முருங்கைப் பிஞ்சும்
விசும்பிடுந் துவரை யாதல் வெள்ளையா மேஷம் வற்றல்
கசிவெனி வெல்லாந் தள்ளுங் காந்தச்செந் தூரத் தாலும்
நசிந்துபோம் பாண்டு சோகை நவின்றிடும் வீக்கம் போமே. ()

நசித்திடு மஸ்திச் சூடும் நஞ்சுதின் னவர்க்கு மெய்தும்
இசிவுடன் வலியு மேகும் இளந்தையின் முறடும் நீங்கும்
பசந்தயிர் புளிப்பு மஞ்சு பாலதும் பலமு மஞ்சு
மசியும்நோய் பணச்செந் தூர மவுழ்தமத் தித்து வுண்ணே. ()

கன்மங்கள் தீர

உண்ணு மண்ணு லத்தில் நோய்போ மும்பது மிரண்டுவேளை
கண்விழி துலக்க மாகுங் காலையு மாலை யுண்டால்
விண்ணொளி யறிய லாகும் விருப்பமாம் விழிதன் பார்வை
எண்ணுள்ள காலம் வாழ்வா ரிந்திர னொளிகாண் பாரே. (12)

பாண்டு சோகை தீர

பித்தப்பாண் டதுவும் போகும் பிரமிநீ ராமை யேகும்
வைத்திடுஞ் செந்தூ ரத்தால் வசிகர மாகும் நோய்போம்
சுத்தமாஞ் சங்குச் சாற்றில் தொடுத்துமண் டலமேயுண்டால்
வித்தக னருளால் சாத்தியம் வெண்குஷ்ட மதுபோமாண்டே

மதுரந்தேன் சிருதம் ரெண்டும் வைத்திடும் பணசெந் தூரம்
விதுரநோய்சடம்விட் டேகும் வேளைகொள் தினந்தான்ரெண்டு
பதறிடா திரண்டு பக்ஷம் பத்திய மாக வுண்டால்
கதிரவ னொளியுங் காணுங் காந்தியு மதீத மாண்டே. (14)

வேறு

காந்தி மீறுங் கதிர்தன் ஞெளிவதாம்
வாந்தி தன்னை வராமல் நிறுத்திடும்
மாந்த மெட்டும் மலைகட லேகிடும்
சாந்தமாகுந் தடையொன்று மில்லையே. (15)

மாறு மாறும் மகோதர மண்டலம்
தேறுந் தேறுமே திப்பிலி சுக்குடன்
கோறுங் கோறுங் குருமிள கும்அனல்
நீறும் நீறும் நெருப்பில் வெதுப்பிடே. (16)

ஒண்ண ரைப்பல மோடதி விட்டிடுங்
கண்ண வுங்கனல் காந்திச் சுடர்பட
வெண்ண வுமிவை வீசிடுஞ் சூரணம்
பண்ணு மேகிருதம் பாலுந்தே னுகுமே. (17)

பாலுந் தேன்பஞ்ச தாரையி லும்விடு
காலங் கண்டு கருதிக் கொடுப்பிரேல்
மேலும் மேலும் விசையுள்ள வாயுவும்
தூலம் விட்டுத் தொலைதூர மேகுமே, (18)

நாசிப்புண்ணுறுதல்

தூர தூரத் தொலைதூர மோடிடும்
மாற மாற வனேகநா ளில்லைபார்
கார காரவுங் கம்மல் சயம்விடும்
நாறு நாறுமே நாசிப்புண் ணுறுமே. (19)

அப்பும் உப்பு மறிந்துசெய் தாலல்லோ
செப்பொ ணுதரி தாரக்க ளங்கதாம்
சுப்பி ரமாய்க் கழஞ்சது பத்தெடை
பொற்ப ரீதபொன் கெந்தியெ டையதே (20)

அன்ன பேதியு மவ்வெடை யேசமன்
சொன்ன தோர்சாரக் காவதுஞ் சுத்திசெய்
நன்னஞ் சூதமு நாகமு மைந்தெடை
அன்ன மேனடை யஞ்சுஞ் சரியதே. (21)

## சூதக்களங்கு

தொந்திக்கச் சூதமு நாகமு ருக்கிடு
இந்த சோர்சரக் கேத்துங் கலுவமில்
பொந்தி யும்பூவ ரசன்வித் தேயெடு
தந்த தோர்குழித் தைலமி றக்கிடே. (22)

தயிலம் விட்டுச்சா டித்திடுஞ் சாமம்நால்
செயல தாய்வழித் தேசிறு பில்லைசெய்
அயில மீதி லருணன் முகம்பட
தயிலக் குப்பித னக்குமண் சீலையே. (23)

சீலைமண் ணேழுஞ் செய்தவு லர்த்திடு
சாலக் குப்பிச்ச ரக்கையுந் தாக்கிடு
வாலை வாய்தமர் மயிருஞ் சொருகிடு
வேலை யுண்டோபின் வேறொரு குப்பியே. (24)

குப்பி வாயில்முன் குப்பினு ழைத்துமே
ஒப்ப றவாயு ளூந்துமா வெண்கரு
இப்ப தமேயே மூசீலை சுத்தியே
தப்பொ ணாது தாணிப் புடமதே. (25,

மருந்தி ருக்கு மதுகுப்பிக் குப்பிமேல்
பொருந்த வும்பூமி தன்னிற் புகட்டிடு
வருந்து மேவிமண் சீலைவ லுத்திடு
அருந்துங் குப்பி யதுமணல் சோறிடே. (26)

சோற வும்மணல் சுத்தி யிருவிரல்
ஏற வும்மேரு யிட்டிடு குப்பிமேல்
கூற வுந்தணல் கொண்டிடு வன்னிதான்
ஆற வும்புட மவ்வித மாகுமே. (27)

ஆறி டும்புட மாறின பின்னெடு
வாறி டுங்கவ சங்களும் வாங்கிடு
கூறி டுங்களங் காவது குப்பியிற்
சோறி டுஞ்சூத நாசத்தி னாட்டமே. (28)

தங்கச்செப்பு

வங்கர் தாரமதாச நாகமும்
அங்க மாங்களங் காருமெடுத்திடு
தங்கச் செப்புந் தயிலமாங் கெந்தியால்
திங்க ளன்னையின் செய்கையா லாண்டையே. (29)

லிங்கக்கட்டு

சிங்க மாகுந் தெளிந்திடு வங்கமாம்
லிங்க மாவ தொருபலம் வாங்கிடு
தங்க மேஅயச் சட்டி தனிலிடு
மங்கொ ளாதுநல் லெண்ணெய்த் தீ யேற்றிடே. (30)

எத்தி யேயிரு சாமஞ் சுருக்கிடு
பார்த்திடும்பத மாகத் தைலமுந்
தூத்தி டுமேது ளிதுளி விட்டிடு,
சேத்தி டுமேதி ருப்பித் திருப்பிடே. (31)

திருப்பி யேவிடின் தேங்கிடா லிங்கமுஞ்
சுருக்கி டும்வலு சோதிப்பிர காசமாம்
மருப்பொ ளாதுமால் இங்கத் தைலமாம
இரும்பு போல்வலுத் தேவிடும் லிங்கமே. (32)

வேறு விருத்தம்.

வலுத்தி டும்வலு வேகம தாகிடும்
மதியில் பத்துக்கொன் றீயவும் பொன்னதாம்
நலுத்தி டும்வய தேழரை யாமெனில்
நாடி னார்கள்நா தாக்கள் மருத்துவம்
பலித்தி டும்பரி வேதைக்கு மீண்டுபோம்
பாரி லும்பண்டி தற்கிது வேண்டிடில்
தொலைத்தி டுபெண் தோகை மயல்விடுஞ்
சொன்ன தெல்லாஞ் சுருக்கங்கா ணண்டயே. (33)

சொன்ன தோரரி தாரக் களங்கெடு
    தொட்டுப் பாரயச் சட்டி தனிலிடு
வன்ன கெந்தித் தைலங்கொண் டூட்டிடு
    மாறி டும்இரு சாமஞ் சுருக்கிடு
அன்னை யாமபி ராமி பதம்பணிந்
    தான பின்புபூ சித்துமே நீயெடு
வின்ன மேதுபொன் போலிது வர்ணமாம்
    மெய்வி ளங்கிடு மேன்மை பெறுவரே. (34)

ஏழு மூன்றுமி ரண்டெனில் மூசையி
    லிவையு ருக்கிப்ப தம்வரும் போதினில்
வாழு மேவரும் பாக மறிவதால்
    வருத லிற்குரு வொன்று கொடுத்திட
தாழு மோதனி யெட்டரை யாகுமே
    தாழ்ந்த பேர்கள் தரணியில் வாழ்வர்காண்
சூழுஞ் சூழுஞ் சுகமவை காண்கிலீர்
    சூக்ஷா சூக்ஷஞ் சுருக்க மறிவரே. (35)

தாளகத்தில் வங்கமெடுக்க

வேறு.

தாள கத்திற் றனியியனுஞ் செய்பவர்
நாள துண்டோபார் நாயுருவி யுப்பும்
மாளு மீய மதளைக்கு முந்தையின்
நாளு மாண்பிள்ளை நன்னமு தியிதே. (36)

உப்பு தன்னி லொருவிரா கனிடை
தப்பு மோகுழிக் கல்லில்நீர் பாச்சிடு
அப்ப வேயரி தாரம் பலமிடு
முப்பு தொட்டிடு மூலியா லாகுமே. (37)

விருத்தம்.

பூவோ டோங்கு மூலியின் பூவதாம்
    புகலுஞ் சுந்தர புட்பாதி மூலிகை
தாவி டுமேம ருக்களின் பூவதாக்
    தாணி தன்னிற் பூங்காவி லிருப்பதாம்

வாவிசே ருங்கொய் யாமரப் பூவெனில்
வஸ்து விந்த மகிமையைக் காண்கிலார்
கோவிதங் கும்பற் கும்பலாய் மேவிடில்
கூறி னேங்குண வாசமி தாண்டையே. (38)

எங்கு முண்டுயீ யத்திற்செங் தூராஞ்செய்
இணங்கிப் பாருநீ யிதிற்சத்தி ராதுகாண்
அங்கு முண்டம் புவியின்கண் கானலில்
அழக தாகவம் மூலிவ ளப்பர்காண்
இங்கு முண்டுமெங் கெங்குமுண் டாமெனில்
இருக்கு மந்த விடங்க ளறிந்திடீர்
வங்க மேவு மழுகண்ணி மூலிபோல்
வாழு மேவளர் மூலியுங் கொய்திடே. (39)

கொய்தி டும்அந்த மூலிகை வாங்கிப்பின்
கொண்டெ டுசிறு பிள்ளை யமுரிதான்
எய்தி டுமிதை நீருவிட் டேயிடித்
தேங்கி டாம லெடுத்து பிழிந்திடு
மெய்ய தாகுங் குழிக்கலு வந்தனில்
மேன்மை மூன்று வகைமருந் தேயிடித்
தெய்து மேயிவை சாறுவிட் டாட்டிடு
ஏங்கி டாதொரு சாமமுந் தாக்கிடே. (40)

ஆட்டி டும்போ ததுபதங் கண்டிடு
ஆகு மைப்பத மவ்வித மானபின்
நாட்டில் மேவிடுங் கூத்தன் குதம்பையும்
நாடெ லாமுண் டனேகவ ளுந்திரங்
கூட்டு மேவியம் மூலிகை வாங்கிடக்
கூறி னேஞ்சிறு பிள்ளை யமுரிதான்
வாட்டி டுமேபின் னீர்விட்டுச் சாடிடு
வாங்கி டீர்சாம மாட்டி யரைத்திடே. (41)

அரைக்க ரைக்கவே மைப்பதம் போல்வரு
மப்ப தம்மெழு காடுமிஞ் சாமமில்
இயக்கி யேயம் மெழுகைவ ழித்தெடு
என்ன மாயமிம் மைசதுர் பில்லைகாண்

கரைத்தி டுங்கதிர் கானல்மூ கம்பட
காந்தி யிலுலர்ந் தேயெடு மூசையில்
சிரைத்தி டாதசெப் புத்தக டொன்றதாஞ்
செய்தி டுமூசை வாய்க்குச் சரியதே. (42)

சரிய தாகுமுக் காலரைக் காலதாய்
சங்க மாமூசை வாய்க்கு நெருக்கிடு
வரிய தாகும் வரியின்மே லோட்டது
வைத்துச் சந்துவாய் மண்சீலை செய்திடு
குறிய தாகக் கதிர்முகந் தாக்கிப்பின்
கொண்டி டும்பெரி தானவெ ருவதாய்
பிரிய மாயிதை ரெண்டு வெருவிலும்
பின்பு மேசிறு நாலெரு வாகுமே. (43)

நன்று மேபுடங் காற்றடி யாதிடம்
நாலெரு வுவிட் டேயனல் முட்டிடு
வென்று மேகன லாறிவெ டுப்பதால்
மேலும் வைத்தசெப் புத்தகட் டையெடு
கண்டு மேவும் பதங்கம தாகிடுங்
காண்கி லும்மதைக் கத்தியால் வாங்கிடு
விண்டி டரிவை வீணிற் பதறிடா
மேலு மேமெது வாயெடு பற்பமே. (44)

பற்ப முஞ்சிறு மூசையில் தாக்கிடு
பார்த்து மேவிக் கரியில்வைத் தூதிடு
இற்ப தென்ன யிவைவீய மாகிடும்
இன்ன மும்மயச் சட்டியில் வைத்திடு
சிற்ப தென்னச் செழுங்கன லாவெறி
தீப மாகும்நல் லெண்ணெயும் விட்டிடில்
உற்ப தென்ன விளக்குத்தீ பாக்கினி
ஊட்டி டவேபொன் கெந்தித் தைலமே. (45)

வங்கவெட்டை.

தயில முட்டித் தனிரெண்டு சாமமுந்
தாக்கி டுந்துளி தாந்துளி யாமெனில்
வயிர மாகும் வலுவது வெட்டையாம்
வங்க மாமிதற் கீடது மில்லைபார்

மயில மில்லா வடிவதும் பொன்மயம்
மதியு மேழு தேய்வானது மூன்றிடை
பொயிலத் திருமே் புலையனு னென்றிடும்
பொதிகை மேவும கத்திய ராணையே (46)

உருக்கு மாமுக மொன்று குருக்கொடு
ஓடு மேவ யதெட்டரை யாமெனில்
பெருக்க மாயெடுத் தேசில வாதிகள்
பேசு வார்கள் பெருமைய தாகவுஞ்
செருக்கு மோசெகத் தோர்கள் பழித்தனர்
சிறுமை யோசில காலமும் வாழலாங்
குருமு னிவற்கு றித்தெனக் கோதினுர்
கோரு மென்மதி போலநீ செய்யுமே (47)

என்ம தியாலெ டுத்துரைத் தேன்றமிழ்
எய்திடு மமுதக்கவி பாடலாய்
சொன்ன தோர்திரு வள்ளுவன் சொல்மொழி
சூக்ஷ மெண்ணூ றிதுசொச்சம் நூறினில்
வின்ன மில்லை விகற்பமு மில்லைகாண்
விரித்து ரைத்தேன் வெகுவித நூற்பயன்
மன்ன ரும்மண்ட லீசர் மகிழுவார்
மால்தே விவர லாறும கிழ்வனே. (48)

வேறு

இல்லை தாரமி யம்பின தோர்முறை
வெல்ல லாமோ விதமென்ப ரிகைக்ஷயும்
சொல்லர் சொல்லார் வெகுசனு வோயில்லைக்
கல்லு மேலெழு துங்கருத் தாமெனில்
புல்லர் தாமோ பொருளுங்கல் லாவதுஞ்
செல்லு மோசெடிப் பூடும்பொன் னுகுமோ
கொல்லவந் தெமன் கூற்றன் வினையதாய்
இல்ல மேயுன துள்ளம திந்திடே. (49)

இல்லை யில்லையெண் சாணுட லுக்குளே
சள்ளை பொன்றுசா காக்கால்வே காத்தலை
அல்லு மேபக லானத றிந்தபேர்
விள்ள லாகும்வி னைப்பயன் றெண்டதும்

தொல்லை யேது மகாமேக லேகியக்
கள்ள மாய்வந்த நோயைய சுற்றிடும்
நல்ல வன்குரு சாமி யருளினால்
எள்ள ளவுமி திற்பிச கில்லையே. (50)

விருத்தம்

திருமருவும் வடிவழகரம் மாதா வாலை
செங்கமலப் பாதமலர் தெரிசித் தேயான்
மருவுதிரு பொற்கமலம் பணிந்து போற்றி
மகாமேக லேகியமும் வணங்கிச் சொல்லக்
கருவுருவா பெணையீன்ற அன்னை யார்தன்
கருணைவைத்து நவரத்ன மணிக ளாக
குருவான அகஸ்தியர்தன் கிருபை யாலுங்
கூறுகிறே னுண்டே யினிக்கூறு வேனே (51)

வேறு விருத்தம்

கூறு வேன்கடுக் காய்த்தோடுந் தாணியுங்
குறித்த தோர்நெல்லிக் காய்த்தோடுஞ் சீரகம்
ஏறு சுக்கு மிளகுடன் திப்பிலி
ஏல ரிசிக்கி ராம்பும துரமும்
தேறு மேகரு வாயுடன் பட்டையுஞ்
சேர்க்கை யான லவுங்கமும் பத்ரியும்
ஈறு மேசாதிக் காயுமந றுக்குடன்
இன்னு மெவாச்சா ரம்வாலுமி ளகதே. (52)

வாய்வி ளங்கமு மக்கிராகா ரத்துடன்
வாறு!காமணெனில் கோஷ்டமு மாதலால்
தூய தன்சம னென்று பலமரை
சூட்டி ஞேமாவின் கிருதம ரைப்படி
சேயெ னும்பலந் தேனதும் பத்ததாஞ்
செய்கை யிவ்விதக் கார்கோல்சன் னரியும்
வேயெ னும்வெட்டி வேர்கிழ்க்காய் நெல்லிவேர்
விகித மேவகை யொன்றக் கரையதே. (53)

பலமெ னுமறை யாகுஞ் சரிசமன்
பார்த்தெ டுத்துமே நீர்படி நாலது
வலமா வின்பால் படியது தானரை
வாரு மோரிடைக் கமுகின்பூச் சார்படி

சலவுஞ் சம்பழச் சார்படி தானரை
சாத்திடுங் கையான் சாறு படியரை
கொலமா குஞ்சிறுக் கீரைசெ றுப்படைக்
கொண்டி டும்படி யாவ தறையதே. (54)

கீழ்கா நெல்லி யரைப்படி சாதுங்
கேளுங்கற் றாழைச் சாரு மறைப்படி
வாழ்வ தோர்சரக் காவதுஞ் சூரணம்
மற்ற வேர்கள் வகையெலாஞ் சூரணம்
தாழ்வு மேதொரு தாளிதன் சட்டியில்
தண்ணீர் தேன்பசும் நெய்யது வாமெனில
வேழ மாமுகன் குண்டலீ வல்லபை
விகித மென்குரு மாமுனி தியானமே (55)

கொச்சகம்

தாளியிவை யானதொரு சட்டிதனி லிவ்வகைகள்
வேளீர்போல் பாலைவிட் டடுப்பில் பக்குவமாய்
தேளிதுவென் றேகனலுந் தீபமது போலெரிக்க
நாளிலேநீர் சுண்டியிவை நடப்பதுவுங் கண்டிலரே. (56)

தொக்கிவிடும் பாகதுபோல் சூக்ஷமது வேயறிந்து
புக்கிவிடு மேயிறக்கிப் பூட்டிவிடுஞ் சூரணத்தை
தக்கிவிடு மேகிளறித் தானதனை யேதுழவி
சோக்கிவிடா லேகியமே துதித்துவிடு மேபணிந்தே. (57)

பணிந்து அகத் தீசர்பதம் பாயாச மன்னமுடன்
அணிந்து சுவையுடனே யற்சித்தா றுதனைசெய்
வணிந்து கிருபையினால் மகாமேக லேகியத்தைக்
கணிந்துகல சந்தனிலுங் கருதிவிடும் பக்ஷமதே. (58)

பக்ஷமது உண்டால் பாழ்போன் றிடும்வினைகள்
தக்ஷணமே லேகியத்திற் சமன்களற்சிக் காய்விதம்
உச்சந்தள்ளிக் காலையிலு முண்பதுவு மாலையெனில்
அக்ஷணமே வேளையிரு அவ்விதமாய்க் கொள்வீரே. (59)

கோலமென்ன கோலமின்னூல் குருமுனிபால் வந்தவிதி
ஞாலமென்ன வுண்டவிழ்தம் நாற்பதுகா ஞண்ணையினும்
பாலனது வாகுமுடல் பத்தியம்பெண தள்ளிவிடு
வாலேவய தாஞ்சடமும் வச்சிரம்போ லாகிடுமே. (60)

கலித்துறை

இருதம்நெய் யாகு மாவின் பசுந்தயிர் கெடியதுமோர்
வருதத் துவரை யவரை வழுதலைக் காயும்பிஞ்சும்
சிறுத்தப் பசும்பயர் வெள்ளாட்டின் பாலுஞ் சிறுமுருங்கை
மூறித்திடுந் தேனு மரைக்கீரை முள்ளும் வெள்ளரியே (61)

வெள்ளரி சுண்டை யாதண்டை வற்றல்வெள்ளாட்டிறைச்சிக்
கிள்ளையுங் காடைக் கிளுவையு முள்ளான் கிருமுசலும்
தள்ளிடும் பச்சைப் புராவெனு மாமை தசையிதுபார்
கள்ளுநங்கோ ரக்கர்மூ லப்பு ளிபுகைக் கைப்பும்விடே (62)

விட்டிடுஞ் சூலைக் கிரந்தியும் வாயுவும் விக்கல்கக்கல்
கட்டிடுஞ் சேத்துமர் தொண் ணூற்றி யாறுங் கடல்புக்கிடும்
மட்டில்லாச் சூசி சூதக வாயுவு மாந்தமெட்டும்
வெட்டிடும் நோயை மகாமேக லேகியம் விளங்கிடுமே. (63)

வச்சிர கண்ட மணிகண்ட மாலை வாயடைப்பும்
உச்சிப் பிளவைத் தவடைப் பிளவை யோனிப்புத்தும்
மச்சது மேக மதுரநீர்ப் பானை மகோதரமுந்
தச்சிடுஞ் சூலை யூன்வாய்வு சச்சுக் தவறிடுமே. (64)

இசுவெட்டுக் குன்ம மினியெட்டுமூல மெய்தும்வெடி
அசவெட்டு மாந்தை யன்னத்துவேச மரைக்கடுவன்
கசிவெட்டுப் புண்கள் கனல்வன்னி ரோசிக் காதுமந்தம்
விசும்விக்க லேப்பங் காசமும் வாந்தி விடுபடுமே. (65)

வெண்பா

வலிகுன்மம் நீர்க்கட்டு மகோதரமு நீரழிவு
கலகமெனில் மேகமொடு காந்தல்போம்—வலிகுன்மம்
மேகமிரு பத்தொன்றும் வெடிபுண்கள் சூலைபரும்
தாகமறுஞ் சோபமறுந் தான். (66)

சன்னிசுர தோஷமறுஞ் சாந்தமது வாகுமெனில்
இன்னவிதப் பாண்டுசொரி பெய்திடா—சன்னிசுரம்
மகாமேக லேகியமு மண்டலங்கொண் டேவரவுஞ்
சுகதேக மாகுமெனச் சொல். (67)

சார்ந்தயிவை லேகியமுந் தானதுசெந் தூரபற்பம்
சேர்ந்துவொரு மண்டலமுஞ் சென்றதால்—சார்ந்தயிவை
சூதகெந்தி வாளமிதைத் தோசைகமட மாதரமே
வாதசட மாமெனினும் வாழ் (68)

என்றமிட லேகியமு மெந்தமிவை செந்தூரம்
வென்றதின மாகிலுமே விட்டுவிடா—என்றமிவை
கண்கள் விழிபொழிவாங் காணுபகல் சக்கிரனும்
உங்களுக்கெல் லாந்தெரியு மூண்மை (69)

திருப்புகழ்ச் சந்தம்

அபிராமிசிவ ஞானசுந்தரி
அம்பிகைவாலை மனோன்மணியந்தரி
தபோதனர்மெச்சிடு வானந்திபூரணி
சச்சிதானந்த திரிபுரைநாரணி வருவாளே

கணேசகுண்டலி சரஹணபவனே
கருத்துகந்தநீ யாள்வாய்சிவனே
துணையுனதனுக்கிரகஞ் செய்வாய்நிதமே
சொல்லும்வயிரவன் மாத்திரைக்கிதமே தருவாயே (70)

சாதிலிங்கமுடன் மிளகுதிப்பிலியுஞ்
சரக்கில்வெண்கார மக்கிராக்காரமுஞ்
சோதியிந்துப்புஞ் சூஸ்திரகாபியுந்
தூக்கிவொயிரு களஞ்சதவீதமாய் சமனாக

ஆதியெனுமிவை சரக்குகளேமையு
மப்போதேகுளிக் கல்வமிட்டுப்பின்
மேதியோர்புகழ் சம்பழச்சாற்றினால்
விகிதமாயிதை யொருநாளரைத்திடு மெழுகாக (71)

மெழுகுபதத்தில் வழித்தெடுத்தூநீ
வெய்யலில்சவிபடா நீழலிலுலர்த்திடு
பழுதுவராசுரைக் குடுக்கைதன்னிலே
பத்தியுடனடைப் பதனமதாகவே சுகமாக

எழிலாயனுப்பா னங்களறிந்திடு
இஞ்சிச்சுரசத்தில் குன்றியிடைகொடு
நழுவாதசுரம் விட்டலேந்தோடிடும்
நலமாயக்காலே மாலேவிடாமலே தருவாயே (72)

காலேமாலேயு மீரைந்துதினங்
கருதிக்கொடுத்திடச் சுரமதுவகிடுந்
தோலேச்சுற்றிய சன்னியுந்தோஷமுஞ்
சொல்லாதோடிடும் வல்லபம்பாருநீ முறையாக

மாலேவருமூன் றுமுரைக்காச்சனும்
மலேகடலதுவுந் தாண்டியோடிடும்
வேலேயென்றேநினே யாமலேமருந்துசெய்
வேண்டுந்திரவியங் கிடைத்திடும்ஆண்டேகற் செயமாக (73)

## வேறு விருத்தம்

மாயா தென்றுங் குகாந்தகன் மாத்திரை
மாது கெந்திப் பலமுக்கா லாகவுந்
தூய பொன்னரி தார மதினிடை
சூத்திர நாயியுஞ் சூதமு மவ்விடை
தாயெ னும்மனோ சிலேயு மவ்விடை
சாஸ்திர பேதிவெண் காரமு மவ்விடை
நேய மாமிங்கி லீகமு மவ்விடை
நேர்மை யாய்ச்செய சுத்திசெய் தானதே (74)

## குருவிருத்தம்

சுத்தி செய்து சுகாந்தமாங் கல்லினிற்
சத்தி யாய்விடுஞ் சம்பழச் சாற்றினால்
குத்தி யேவிடு வீர்குழிக் கல்லில்நீர்
சித்தியாகுந் தினமூன்று நாளிலே. (75)

மூன்று நாளும் முலைவிடா தாட்டிடு
வேண்டி யேமய ணமெழு காகிடும்
வீண்டி யேவிடு வீர்வழித் தேயெடு
காண்டி பமிவை கண்டெடு குன்றியே. (76)

உண்டி டநிழல் தன்னி லுலர்த்திடு
அண்டி டுஞ்சிமிள் தன்னி லடைத்திடு
விண்டி டுப்விஷ வேட்கை சுரம்விடும்
கண்டி டுமிது காட்சியைப் பாருமே. (77)

தேனும் விட்டுத் திரிகடு குப்பொடி
மானை வைத்திடு மத்தித்துக் குன்றிடை
மானு மேமழு வேந்திய மான்பரன்
காணு மேவிக் கனலிற் கருதிடே. (78)

வாத சன்னி வருமைய பித்தமுங்
கேது ராகுதன் இடுங் கெணங்களுஞ்
சூத சன்னி சுகசன்னி தான்முதல்
சாத கமாய்ச முத்திரம் புக்குமே. (79)

சூரி யன்கதிர் சோதி யொளியினில்
வாரி யேமது ரம்விட்டுக் குன்றிடை
நாரி யர்முலைப் பாலது வாங்கியே
தேறி யேவிடுஞ் செய்துமத் தித்திடே. (80)

மத்திக் காலை மதியினு ணர்ந்திடு
வைத்தி டும்ஐந்து நாள்வித முண்டிட
எத்தி யோடும் வியாதியு டல்விட்டு
சித்தி யாகுஞ் சிவனார்சொல் வாக்கியமே. (81)

வேறு விருத்தம்

எட்டெட்டு மறுபத்தி னாலு போதும்
எய்திடுமே பற்பச்செங் தூரச் சுண்ணம்
வெட்டிடும் பார்மேக ராஜாங் கத்தெண்ணெய்
வேகமா மேகங்க ளிருப துந்தான்
கட்டிடுமே பாசத்தின் கயற்றி னாலே
கனல்சூழ்ந்து கருகிவிடு மாதலால்நீ
கட்டும்வீ ரகொடியைம கிழ்வதாக்
கருவமென்று நினையாதே உண்மை பாரே. (82)

வேறு விருத்தம்

சேர ணித்திரு மேவு மலர்ப்பதஞ்
சித்தி நாயகன் மத்த கஜமுகன்
வார ணித்திரு மாமல ரஞ்சகி
மாது அன்னை மலர்ப்பதம் யான்றுதி
பூர ணிப்புவ னம்பிகை தன்னருள்
போற்றி னேனடி யேன்றிரு வள்ளுவன்
நார ணிசிரோ நாயகி பொற்பதம்
நான்ம லர்த்துதித் தேன்குரு வாண்டையே. (83)

முன்னை யும்முக்கத் தாரிவி லாமிச்சு
மூலி யிற்கொடி வேலிப்ப ருத்தியும்
இன்னி வத்தில சிறுசின்னி கொண்ணையு
மிலவன் கோங்கு விருக்ஷிக முல்லையும்
நன்ம லரும்நன் னரி விழுதியும்
நத்தைச்சூரி யுருவிய முக்கிராப்
பின்னை மாமல ராம்பலுந் தோடையும்
போமுட்டிசித் தாமுட்டி தானுமே. (84)

குருவிருத்தம்

முத்துச் சங்கு முதியார்தன் கூந்தலுஞ்
சித்து மேவுஞ் சீதாசெங் கழனியும்
வித்துக்கை யான்வில் வத்தின்வேர் வெட்டியும்
குத்தனுங் கூத்தன் குதம்பையி தாண்டையே. (85)

விருத்தம்

வாறுதன் மூலி வேர்வகைத் தோடும்
வாங்கிடு வன்னியில் வெதுப்பி
வனமதி லிலகு மூலிதன் ரசமு
மறுவொரு பாண்டத்தி லூட்டி
வேறதில் றேடு மிகப்பத முலத்தி
மிவையெடுத் தடுப்பினி லேற்றி
வெதுப்பிப் பொன்னிற மாயெடுத்துக் கல்லுரலில்
மேலுநற் சூரண மாக்கி
பாரிது கடைதன் சாக்கதும் பரங்கிப்
பட்டையுந் தாணியுங் கடுக்காய்
பகரில வெதோ ரறத்தையுங் கோஷ்டம்
பரங்கிசாம் பிராணிகொம் பறக்குஞ்

தேரவே மிளகுந் திப்பிலி யேலஞ்
சீரகஞ் சிறுநாகப் பூவுஞ்
செழுஞ்சுக்கு மதுரஞ் செவ்வியங் கிர்கோல்
சிங்கியுந் தாமி தாண்டே. (86)

தெளிவ தாயிடித்துக் காற்பல வீதந்
தினுசதை யனலிலும் வெதுப்பி
செய்கைதா னிடத்துச் சூர ணப்பதமாய்
செண்பகப் பூவுங்கஸ் தூரி
பொளியவு மமூர்த மதுரமாய்ச் சொரியும்
பொதிகைநா யகனருள் கிருபை
பூரணப்பச் சைக்கற்பூ ரஞ்சவ் வாது
புனுகுரோ சனைக்குங்கு மப்பூ
சுழிமு னைக்கமல மிடம்வ லம்புரியுஞ்
சூரணம் வகைக்குக்காற் பலமாய்
சூட்டி யேபொடித்துப் பாண்டத் திற்சுத்த
சித்தாம ணக்கெண்ணெயு மிரண்டு
வளிபட மிகவுஞ் செவ்விள நீரு
மாவின்பால் தேசிப்பால் பசுநெய்
வான்கு மரியின்சோர் சலமும்வல் லாரை
மணக்காளான் நெய்யுங்காற் படியே. (87)

கனக ரத்தின மாங்கோபு ரந்தாங்கிக்
கதிர்புனற் றண்டுநீர்க் காகம்
கருதும் வெள்ளறுகு சின்னிபொற் கையான்
காற்படி ரசமதுங் கணக்காய்
தனம்பெரும் பாண்ட மதனி லூட்டிடுமே
சாத்திடுமெண் ணெநெய் பாலுஞ்
சாறுஞ்சூ ரணமுங் கரைத்துத் தன்னடுப்பில்
சாக்குத்தூ ளதுவெனுந் தாக்கி
மனமெனும் வாளப் பருப்பது மரைத்து
வகையொரு பலமதி லூட்டி
வாடை சேருமல் வன்னி யிட்டெறிக்க
வரும்பதம் நீரெலாஞ் சுவறுந்

தினமெனும் உத்திர நக்ஷத்திரம்நாளில்
செழுங்கதிர் காலையி லுதையம்
தீபாக்கினி கடிகை சென்று பின்கமலந்
திரெய் திந்திடுவ தும்பதமே. (88)

சிறுகொதி கொதித்து வருங்கடு கதுவுஞ்
செலுத்திடும் நீரெலாஞ் சுவரும்
தீந்தண லாற்றிப் பாண்டமு மிறக்கிச்
செலுத்திடு வாடைதன் பொடியை
கருவிசெந் தூரங் களஞ்சது மூட்டிக்
கடிகைசென் றிறுத்திடுங் கலையம்
கடுகுவெவ் வேருய்க் கட்டி யேதிறளுங்
கடுகுதன் பெருமையா ரறிவர்
நெறிவிளங் கதீத குருமூனி யருளால்
நிகழ்த்தினே னிருபமாய்த் தமிழில்
நிருபது மன்னே கமலபொற் பதத்தை
நெறிதவ ராமலும் யேற்றிப்
பெரும்பெறப் பகற்றும் நெற்பதும் கேற்றிப்
பின்னுமண் டலமிருந் தெடுத்து
பெரிய தோர்வினையும் பக்ஷத்தி லேகும்
பின்னிட்டுப் போய்விடு மாண்டே. (89)

குஷ்ட மும்பதினெட் டஷ்ட குன்மங்கள்
குடல்வலி மூலமெட் டகலும்
கொடியதோர் கிராணி களுஞ்சுரஞ் சன்னி
கொடூரசாத் தியமறிந் தோட்ட
கஷ்டமு மணுகுஞ் சயமொடு காசங்
கண்வலி விழிகுரு டனைத்தும்
கால்கர முடக்கல் கடிவிஷந் தீருங்
கறடுகள் மூறடுக ளகலும்
திஷ்டியும் வீக்கந் தீபன மந்தஞ்
சிரணம் வாந்திவிக் கலும்போம்
தினமொரு கரண்டி கண்டு தூட்டிடைதான்
செலுத்திடீ ரிச்சாபத் தியமாம்

நஷ்டமு மிலைகாண் சிருவரும் பாலை
　　நடத்துமிவ் விதமறிந் தூணர
நரகம் போம்சொர்க்கம் நாள்வரை யினுமே
　　நல்வினைப் பிறவிகா ணுண்டே. (90)

## திருப்புகழ்ச் சந்தம்

வனத்தனிலுவர் பூப்பூக்கும்பின்
　　மதிரவிமுகம்படக் காய்காய்க்கும்கண்
டினமறிந்திடீர் பூநீர்மேலதில்
　　இடிவிழுமின்னற் கொழித்துமேமழை
தினஞ்சொரிந்திடு புனலுவாருகிணிற்றுன்
　　திரமாகவேபாய்ந் தூடன்சுவரிடும்பார்த்
தினந்தெரிந்திடு மாசிபௌர்ணமிகண்
　　டினமாய்நிலை பிரிமாமலெடுத்திடு தவாமல் (91)

அகிலபுவனமதி லடையாளம்பார்
　　அஞ்சுநிலத்தி லொருநிலமாம்அண்ட
பகிரண்டமீரேழு பதினாலும்பார்
　　பரிசைக்ஷசெய்து சோதித்திடலும்திசை
மகிதலமலைகடல் நேற்மேற்குப்பின்
　　வடதிசைதென்றிசை நடுப்போக்குயிச்
செகமிவைதனிலும் பாற்ராயபுரிமிகச்
　　சிறந்தது தர்மா புரிநிலம்பாலை வனமாமே (92)

பஞ்சநிலத்திலும் பூப்பூக்கும்கொக்கு
　　பாவைகளிருப்பது போற்றெரியும்இவ
வஞ்சிலும்வேளூர்ப்பூ துய்யநிறம்அது
　　வைடூரியமபோற் பூவிருக்கும்எடு
கஞ்சிவையானும் பெண்ணதுவாம்ரெண்டும்
　　நாதவிந்திவை பிள்ளையதாம்மிகக்
கொஞ்சிடுவாரிரு கூறுமொன்றேநற்
　　குடிவாழ்நில்மறிந் தெடுதினமேஇது நலமாமே (93)

என்னாரிவைமொழி யெடுத்துரைத்தேனா
　　னிவைநூற்றெட்டும் விரித்துரைத்தேன்பார்
கண்ணுப்பசுவு மொருதுரையில்கட்டித்
　　கருவுங்குருவுங் கைகொடுத்தேனிந்த

மண்ணும்வின்னு மறிக்கெடுத்துகொண்டு
வடிவாய்ச்செய்வாய் தீட்சைதனையதை
எண்ணுமிரண்டுமொன் றுய்முடித்தாற்பின்
னெழுகோடியுகம் வரையிருப்பாயேஇதுசரியாமே (94)

விருத்தம்.

இந்தவிதம் நிலமறிந்து யெடுப்பாரில்லை
இனமறிந்து கல்லெடுத்துச் சுடுவாரில்லை
நிந்தனையென் பேரில்குற்றஞ் சொல்லுவார்கள்
நினைத்தபடி முடியுமோ நீவிப்பாரு
மைந்தனே பேலேல சிங்காகேளு
மற்றவருக் குரைப்பதில்லை யுனக்குச்சொன்னேன்
சுந்தரமே கல்லில்வரு மமுரிதன்னுல்
சுத்திதச தீக்ஷையினுல் சுண்ணமாச்சே (95)

கல்லுப்புச்சுண்ணம்

சுன்னமிவை மித்துருசத் துருவே யாகுந்
தொட்டசரக் கறுபத்து நாலும் நீரும்
முன்னமொழிந் துரைத்துவிட்டேன் கிளிக்குச் சொன்ன
மொழிபோலே வெளியாகச் சொல்லி விட்டேன்
இன்மொழியிற் பிழையிருந்தா லிந்தநூலை
யெறித்துமே போட்டுவிடு மில்லா விட்டால்
மன்னவனே யண்டமிடிந் தனேகஞ் சுக்கல்
மாணமெய்துந் தலைதெரித்து மடிவார் தாமே. (96)

விருத்தம்.

அகிலபுவ னங்களதில் அலைந்தா லென்ன
அண்ட ரண்டஞ் சுற்றியுமே திரிந்தா லென்ன
மகிதலமென் றறிந்துகற்பங் கொண்டா லென்ன
வளர்பிறையுந் தேய்பிறையு மறிந்தா லென்ன
சுகியொடு அறுசுவையை யகற்றி லென்ன
சுத்தவைக் கிறிகையிலுந் தெளிந்தா லென்ன
முகிவுமுடி வைந்தாண்டு நிருவி யுண்டால்
முறிந்துயெண்ணை கக்கிவிடு முதக மாமே. (97)

முடுகு விருத்தம்

எண்ணைக்கிவிடு மன்னமுண்டுவரு மேவிதிப்பதுவர் தள்ளிடும்
உண்ணவுண்ணகடுங் காரமேறுங்கறி யுப்பகற்றிவிட நலமதாம்
மண்ணெடுத்தவறு சுண்வயற்றிவிடு மழுதுபச்சரிசி யாதலால்
விண்ணுமண்ணுஞ்சிவக் கியானமேதவிர விருவிநீரமுதிற்கொண்டிடு
புண்ணதாகும்புவி நீரகற்றிவிடு போகங்காய்கறிமீன் மாங்கிஷம்
பெண்மயற் புகைநீர் வுஸ்துடன்பினி பெணியாவதுகஞ் சாவிடும்
கண்ணதாகும்நதி நீர்சலமொழியக் கருதொணுதுவிளைவனமெலாங்
கண்குடத்துசல நீரைவிட்டுமரு காசினிச்செலங் தள்ளிடே. (98)

ஐயமீறியன லாலசுடாக்கனது மங்குமாதிதமும் லிசிடல்
அக்கினிப்பித தாபசோஷா மனுகினுந்துய்ப வாவின்பால்
செய்திடும்மிளகு சீரகங்கரிய வேம்புடன்புளி யாரைதான்
சிறுப்பருடன் தேனுங்கூட்டிடுதல் சீதளம்வருத லுடல்தனில்
பையரத்தைவேர்க் கொப்புடன்புரசை பதுமல ரமுரிநீரினில்
பத்துக்கொன்றுகுரு நீருந்திவிட பறக்குமேசுரமுஞ் சீதளங்
கொய்யும்வாய்வுகுடிகொண்டுகொந்திவிடகூறும்சுக்குசிறுசீரைவேற்
குடிநீர்தன்னமுளிபத்துக்கொன் றுகனல்குறுகவுஞ்சுரசங்
கொண்டிடே (99)

வெண்பா.

இந்த விதமருந்த வெண்ணேகக்குஞ் சுத்தசலம்
அந்த சலத்திலுவ ரைந்துபலம்—இந்தசலம்
வாரிநீர் காழிவை ரேயக்கல் லொன்றுபலம்
ஞேரிவிடுந் தீக்ஷைபத்துஞ் செய்யே. (100)

மூத்துச்சிப்பி தசதீக்ஷைசெய்ய

செய்கைமுத் துச்சிப்பி தேத்துந்தச தீக்ஷைபுனல்
ஐயமிலாச் சுத்தசல மந்தவுவர்—செய்கைவிதஞ்
சட்டிதனி லிட்டுமறு சட்டிசிறு சாய்க்கவிய
அட்டியிலாக் கோழிபுட மாண்டே. (101)

வாச்சுதிவை சுண்ணம் மடக்குசிறு சாயிரண்டு
ஏச்சு திவைமடக்கி லிச்சுண்ணம்—வாச்சுதெடு
பேர்பாதி யிட்டுப் பின்னும்வை ரேயக்கல்
அரறிவு ரோ அறியா ரண்டே. (102)

வைத்திடுமேற் பாதிவை ரீயத்தை மூடிவது
சுத்திடுமண் சீலைதிரி சூட்டிடுவாய்—வைத்துவிடு
குக்குடமும் பத்தெருவாங் குமுரிடுமே சுண்ணமதுஞ்
சொக்குஞ்சரக் காகிடுமாஞ் சுண்ணம். (103)

சாக்கு பலமொன்று சற்குருவு மேகளஞ்சு
அரக்குடமிழ்நீர் தன்னாலதைக் குழைத்து—சாக்கதுமேல்
கவசமது புகட்டிக் கதிர்முகமுங் காட்டி
அவிழ்த மெனுந்தழைகொண் டாட்டே. (104)

ஆட்டினதின் மேனு மசக்கிதிரி சீலையுணர்
வாட்டிவிடும் பத்தெருவில் வாலையாம்—ஆட்டிவிடு
எந்தயிலை யெந்தசரக் கிவ்விதமாய் செய்கைபடி
அந்தயிலை யென்றறையு மாண்டே. (105)

வேறு சந்தம்.

நவாத் தினமணி நன்னூற் சுருக்கமாஞ்
சிவமெய்ஞ் ஞான சிந்தாமணி சூஸ்திரம்
மவுன பீட மாணுக்கள் மகிழ்ந்திடுங்
கெவுன யோகக் கிருகையு மாய்ந்துணர்

விவேக மாமொழி வேதம் விளங்கிடில்
கவர்கள் கோடி கண்டெடுத் துணர்வரோ
தவமே லாறுவா தாரமீ ராறுயிர்
கவுனங் கொண்டுணர் காக்ஷி யடைவரே. (106)

இன்னூல் சாஸ்திர மென்னூர் கருக்கிடை
சொன்னேஞ் சொச்சம்நூல் சூஸ்திர மாதலால்
பண்ணு மாமறைப் பாடல்மே வைந்துநூர்
வண்ணச் சிந்து வைத்திய வாதமும்

நன்னூ லாய்ந்து நற்பொரு ளருளதும்
மண்ணுள் ளவரை வாழிமென் மேலதாய்
அன்னை யம்பிகை யாண்டே யருள்பதம்
முன்னமே பூசி முற்றும் இரத்தினமே. (107)

முத்தி யடைய மூவைந்து நூறும்
சித்தி யடையச் சிறந்ததெண் ணூறும்
சுத்தி யறியச் சுருக்கம நூறுகும்
சத்தி யைத்தெரியச் சமைந்த ஷைநூறும்

கத்தி யம்போலக் கற்பமுந் நூறும்
சூத்திர மாகக் குருநூ லைம்பதும்
பத்தித் தெரியப் பதினாறு முப்பதும்
நத்தியே பத்தும் நாதாந்தம் நூறுமே. (108)

வேறு விருத்தம்.

நவரத்தின மொன்பது மொன்றுடன் கோர்வைநூல்
நவகண்ட புவன மவைசூழ்
நகரிலகு மகிதலமீ ரேழுடக முதிவீர
ஞானமூ வைந்து நூறில்
சிவகுருமெஞ் ஞான வகத்தீச ரருளாலுந்
திருவள்ளு வனெனும் பேரால்
திகிரிகட லகிலமிவை முனிரிஷித போதனர்கள்
சித்தர்பதி னெண்மர் மகிழும்
தவமரைநன் னூல்விசித ரத்தினசிந் தாமணி
சாஸ்திரமென் னூற்றி யாறுஞ்
சரிதையில் விளங்குமதி யமுதமழை பொழியவுஞ்
சதாகோடி யுகம்வ ரையும்வாழ்
கவுனமணி சொச்சமொரு நூறுமிவை யெட்டுகெவி
கைவல்ய பாட லுறையுங்
கனகமணி நாதாந்த நூறுபரி பூரணங்
கண்டரி கடாக்ஷ முற்றே. (109)

திருவள்ளுவநாயனுர் நூறு முற்றிற்று.

---

# விளம்பரம்.

இந்த கற்ப சாஸ்திரம் முன்பு குழந்தைவேற் பிள்ளையவர்கள் ஓலைப்பட்டுப் பிரதியின்படி அச்சிடலானது. இப்போது அச்சிட்டிருக்கிறஇந்தப்பிரதியானது கோழிக்கொடி வாலையானந்தசுவாமிகளுடைய ஓலையேட்டுப் பிரதியின்படி சரிபார்த்து பதிப்பிக்கப் பெற்றது.

**இ. ராம, குருசாமிக் கோன்,**
புஸ்தகஷாப் புதுமண்டபம், மதுரை.

உ

பரமபதி துணை.

# NEW CATALOGUE OF BOOKS.

## புதிய புத்தக கியாட்லாக்

இ. ராம. குருசாமிக்கோனார் ஸன்

புக்ஷாப் புதுமண்டபம், மதுரை.

## பச்சிலை மூலிகைகளின் தமிழ்ச்

# சித்தவைத்திய அகராதி.

இதில் பச்சிலை, கடைச்சரக்கு, பஞ்ச பூதச்சரக்கு, உபரசச்சரக்கு 120 பரிபாஷைப் பெயர்கள், 5 உப்புவகை இனங்களையும், உப்பாகுஞ் சரக்குகளின் விபரத்தையும் வகாரம், செந்தூரஞ் செய்ய சரக்குகளின் உருக்கின சத்துருமித்துருவையும், புளியாகும் சரக்குகளின் விபரத்தையும், 64-பாஷாணங்களின் பெயர்களையும், அவைகளின் சத்துரு மித்துருவையும், நிகண்டுகளின் பரிபாஷைப் பெயர்களையும் விபரமாய்க் கூறியுள்ளது சித்தர் நூல்கள் ஆராய்ச்சிசெய்வோர்களும், வைத்தியஞ்செய்ய ஆரம்பஞ் செய்வோர்களும் இப்புஸ்தகத்தை வாங்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகையால் ஒவ்வொருவரும் வாங்கிப்படித்துப் பார்த்து, இதின் உண்மையை அறிந்து மருந்துகள் செய்து பயனடையக் கோறுகிறேன். 280-பக்கங்கள்கொண்ட கலிக்கோர்பயிண்டு சுத்த பதிப்பு

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0

# அகஸ்தியர் கௌமதி நூல்

இந்த சாஸ்திரம் இதுவரை வெளிவராமல் பழைய ஏட்டுப்பிரதியாக ஒரு சுவாமியாரிடமிருந்தது ஷையார் ஒருவருக்கும் வெளியிடாமல்தன்னனுபவத்தில் வைத்துக்கையாண்டுவந்ததை மகா-ா-ா-ஸ்ரீ இ. ராம. குருசாமிக்கோனரவர்கள் சுவாமியாரிடம் போய் வேண்டும் பொருள் கொடுத்து வாங்கி அதைப் பிரதி பண்ணி யாவரும்பார்த்துப் பயனடையுமாறு அச்சிட்டு வெளியிடப்பட்டது. வைத்தியம், வாதம் மாந்திரீகம் முதலான பாகங்கள் சுருக்க முறைகளாகச்சொல்லியிருக்கிறது. வெகு அருமையான சாஸ்திரம்

புத்தகம் 1க்கு விலை அ 0—12—0

அகஸ்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமான

# பன்னிருகாண்டம்.

இது அகஸ்தியர் பன்னீராயிரத்துக்குச் சூஸ்திரமாகப் பன்னிருகாண்டங்களாகப் பாடியுள்ள சாஸ்திரம் 1.-வது வைத்திய காண்டம் 2.-வது வாத காண்டம் 3.-வது சுண்ணக்காண்டம். 4.-வது செந்தூரக்காண்டம் 5.-வது பற்பகாண்டம் 6.-வது தைலக் காண்டம் 7.-வது கற்ப காண்டம். 8.-வது யோக ஞான காண்டம். 9.-வது தீட்சாவிதி காண்டம். 10.-வது சாபநிவர்த்தி காண்டம். 11-வது ஜாலகாண்டம். 12-வது மந்திர காண்டம். ஆக பன்னிருகாண்டம் சுருக்க சூஸ்திரமாயுள்ளது.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

## அகஸ்தியர் கற்ப மூப்புக் குருநூல்

இதில் கற்ப விதிகளும் முப்பு முடிக்கும் விபரமும் பற்ப செந்தூர கைபாகஞ் செய்பாக முறைகளும் சுண்ணம் மெழுகு தைலம் வாலை பூசை நாற்பத்தி முக்கோண சக்கரத்தின் பூஜா விதிகளும் கற்ப தீட்சை முறைகளும் தெளிவாகச் சொல்லி யுள்ள சாஸ்திரம்.

புஸ்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

# யூகிமுனிவர் 1200

## கும்மி 1000, பரிபூரணம் 200 இரண்டு சாஸ்திரங்கள்.

இம்முனிவரால் பாடியுள்ள சாஸ்திரங்கள் அநேகமாயிருப்பினும் ஒவ்வொரு நூல்களும் ஒவ்வொருவர் கையடக்கமாய் வெளிவராமல் இருந்ததில் இந்த சாஸ்திரங்கள்மட்டும் என்னிடம் கிடைக்கப்பெற்று உலக நன்மையைக் கருதி அச்சிட்டு வெளியாக்கியுள்ளேன். இதில் வாதம், வைத்தியம். ஞானம், முப்பூ விபரங்கள் கூறியிருக்கின்றன. கலிக்கோ பயிண்டு புஸ்தகம் 1-க்கு விலை ரூ 2—0—0

## இராமதேவர் வைத்திய காவியம் 1000

இதில் கற்பமுறைகளும், சத்துரு மித்துருச் சரக்குகளும், தைலமுறைகளும், வைத்தியமுறைகளும், அஷ்டகர்ம விபரங்களும், கருமான விபரங்களும், பஞ்சபூதங்களின்விபரமும், பற்பசெந்தூரம், சுண்ணம் செய்முறை பாகங்களும், அஷ்டாங்கயோகமுறைகளும், ஞானங்களும் கூறியிருக்கிற புஸதகம் 1க்கு விலை 1—0—0

# திருவள்ளுவர் கற்பம் 300

இதில் நாதாந்த சாரம் 100. கற்பக்குருநூல் 50. முப்பு சூஸ்திரம் 30. வாத சூஸ்திரம் 16. முப்புச்குரு 11, வைத்தியசூஸ்திரம் 100 ஆக 7-சாஸ்திரங்கள் அடங்கியது. திருவள்ளுவர் பாடிய ஞானவெட்டி 1500க்கு சூஸ்திரமாகப் பாடியுள்ள சாஸ்திரம் இதுவேயாகும். இதில் குருமுடிக்கும் பாகங்களும், செயநீர் முடிக்கும் பாகங்களும் பூநீர் விபரங்களும், அமுர்த தாரணையின் நுட்பமும் முப்பூ இன்னதென்ற விபரமும், வழலைமார்க்கமும் தெளிவாகக்கூறியுள்ளது புத்தகம் 1-க்கு விலை ரூ 0—14—0

## அகஸ்தியர் தற்க சாஸ்திரம்

இது அகத்திய முனிவரால் புலத்தியருக்கு உபதேசஞ் செய்தது. இதில் பதினென் சித்தர்களாலும் பாடிய வைத்திய வாத யோக ஞான நூல்களின் பரிபாஷைப் பெயர்களையும், அநேக மர்மங்களுக்குதாத்பரியங்களையும் விபரமாகக் கூறியிருக்கிறது. விலை அணு 0-10-0.

இதுவரை ஏட்டுப்பிரதியாயிருந்து புதிதாக அச்சிட்ட

# அகத்தியர்பரிபூரணம் 1200

இந்நூல் ஞானம், யோகம், இன்னதென்று அவரவர்களே எளிதாகத் தெரிந்துகொள்வதோடு தன்னைத்தானறிந்து ஞான யோக சாதனையடைந்து வெகுகாலம் ஜீவித்திருக்கவும், கற்பதேகி யாகவும், அநேக வைத்தியம், வாதம், சத்துரு-மித்துருவிபரங்கள் சொல்லியுள்ளது புதிய சாஸ்திரம் கலிக்கோ பயிண்டு விலை ரூ 2—0—0

# காகபுசுண்டர் 1000

சித்தர்களில் ஒருவராகிய புசண்ட மகாரிஷி என்பவர் பிரளய காலத்தில் கல்லாலின்மேல் இருந்து ஒவ்வொரு பிரளய காலமும் பார்த்துவந்தவர். இவர் அநேகசாஸ்திரம் பாடியிருக்கிறார். ஆனால் இதுவரை சில சாஸ்திரமட்டும் அச்சுக்கு வந்திருக்கிறது. ஷியாரால் பாடியதில் முக்கியமான இப்புசண்டர் பெருநூல் காவியம் 1000. இது வரை ஏட்டுப்பிரதியாயிருந்து இப்போதுதான் புதிதாக அச்சிட்டிருக்கிறது. இதில் யோகம். ஞானம் அமுததாரணை வாசி விபரம் முதலிய இன்னும் அநேக மர்மங்களும் அடங்கியுள்ள சாஸ்திரம். 250-பக்கங் கொண்ட கலிக்கோ பயிண்டு. புஸ்தகம் விலை ரூ 2—0—0

## விஷவைத்தியமென்னும்

# "ஒன்பதுவிஷ ஆரூடம்"

இதில் ஒன்பதுவிதமான விஷ ஆரூடசாஸ்திரங்களைச்சேர்த்து ஒரே புத்தகமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பாம்பு. தேள், நட்டுவக்காளி, பூரான், செய்யான், வண்டு, அரணை, எலி, நாய், குரங்கு, பூனை, முதலானவைகள் கடித்து விஷமேற்பட்டால் பச்சிலை மூலிகைகளினாலும், கடைச்சரக்குகளினாலும், விஷத்தை நீக்குவதற்குஇலகுவான முறைகளாய்ச் சமயோசிதம்போல் செய்வதற்கான விதமாய்க் கூறியிருப்பதோடு மந்திர யந்திர பூஜாவிதிகளும், விபரமாய்ச் சொல்லியிருக்கிறது எமது மூதாதைகள் கையாண்டு அநுபவித்துவந்த உண்மையான சாஸ்திரம். சுத்தப்பதிப்பு 392-பக்கங்கள் கொண்ட கலிக்கோ பயிண்டு.

பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூபாய் 2...0...0

## கொங்கணர் நடுக்காண்டம் 500

கொங்கணர் பாடியுள்ள மூக்காண்டம் 1500 ரில் கடைக்காண்டம் 500 கிடைத்ததை மாத்திரம் வெகுநாளாக அச்சிட்டு விற்பனையாகி வருவது யாவருக்கும் தெரிந்தவிஷயம். பாக்கியுள்ள முதல்காண்டம் 500ம், நடுக்காண்டம் 500ம் வெகுகாலமாகக் கிடைக்காம லிருந்து இப்பொழுது ஒரு ஏட்டுப்பிரதி நடுக்காண்டம் 500 மாத்திரம் கிடைத்து. அதை அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. அநேக கனவான்கள் பார்க்கவேணுமென்று எதிர்பார்த்திருந்த அரிய சாஸ்திரங்களில் இதுவும் ஒன்றேயாகும். புத்தகம். 1-க்கு விலைஅணு 0—12—0

## கருவூரார் வாதகாவியம் நொண்டி 700

இதில் கற்பம், வயித்தியம், வாதம், ஞானம், யோகமுதலிய பாகங்களை நொண்டிச் சிந்தாகவும், ஆனந்தக் களிப்பாகவும், அம்மானைப் பாவாகவும், சிந்தாகவும் இம்மாதிரி பல வர்ணமெட்டுகளாய் வேடிக்கை விநோதமாகச் சூட்சமாய்ச் சொல்லிய சாஸ்திரம்.

புஸ்தகம் விலை ரூபாய் 0—14—0

17-சாஸ்திரம் அடங்கிய இராமதேவரென்ற

## யாகோபு வைத்திய சேர்வை

இராமதேவ ரிஷியாக இருந்துபின்பு மக்காவுக்கு சென்றுநபிமார்களுடன் பேசி அவர்கள் இவர் திறமையையும் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்து யாகோபு என்று பெயர்கொடுத்தார்கள் பின்பு யூனானிமுறைகளையும், தமிழ், முறைகளையும் கவனித்து அநேக வைத்தியங்களும், வாதம், யோகமுறைகளும், ஞானமும், நாடி விபரமும், சரக்குச்சுத்திகளையும், 17-சாஸ்திரங்களாகப் பாடியிருக்கிறார். இந்த சாஸ்திரத்தை அநேகர்வாங்கி ரெம்ப அனுபவ முறையாகக் கையாண்டு வருகிறார்கள் 17-சாஸ்திரம் சேர்ந்த கலிக்கோபயிண்டு விலை ரூ 9—0—0

இந்தப் பதினேழு சாஸ்திரங்களையும் பனிரெண்டு புஸ்தகங்களாக தனித்தனியாகவும் பயிண்டுசெய்திருப்பதால் வேண்டியவர்கள் தனித்தனிப்பிரதியாகவும் கிரையத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

# புலஸ்தியர் கற்பம் 300.

இதில் கற்ப சாதனைகளின் விபரங்களையும் யோக ஞான மார்க்கத்தையும் அகார உகார விபரங்களையும் வாசி யோகஞ் செய்யும் முறைகளையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாகக் கூறியுள்ளது ஓலை யேட்டுப் பிரதியிலிருந்து அச்சிட்டது புத்தகம்1-க்குவிலை 0--10--0

## புலஸ்தியர் வாதசூஸ்திரம் 300.

இந்த சாஸ்திரத்தில் ரசவாதத்துக்குரிய செம்பு வேதை செம்புச் செந்தூரவேதை, துருசுச்செம்பு எடுக்கு விதம், கெந்தக தைலம் நாகரச கெந்தி தைலத்தின் பெருமையும் அதினல் மாற்று உயரும் முறையும் தங்க உரம், வெள்ளி உரம் செய்யும் முறைகளும் சரக்கு கட்டுவகைகளும், செந்தூரப், பஷ்பம், சுண்ணம், இவைகளை அநுபோக முறைகளாய்ச் செய்து கொடுத்து குணமாகும் வியாதிகளை ரெம்பவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை ரூ 0—10—0

## தன்வந்திரி வைத்தியக் குருநூல் 200

இதில் தன்வந்திரி பகவான் பாடிய சாஸ்திரத்திற்கெல்லாம் திறவுகோல் போல் ஷையாரால் சொல்லிய சாஸ்திரத்தில் பற்பம், செந்தூரம், மாத்திரை, தைலம், சூரணம், சரக்குக்கட்டு வகைகளை எளிதாகச் செய்துகொள்ளக்கூடிய முறைகளாகத் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. புஸ்தகம் 1-க்கு விலை அணு 0—8—0

## நந்தீஸ்வரர் நிகண்டு 300

இதில் உப்பு இன்னதென்றும், வீரம், பூரம், வெள்ளைப் பாஷாணம் என்று சொன்ன சரக்குகளின்னதென்றும் அதினல் வகாரம் முடியுமென்றும், மூலிகை யென்ற சரக்குகளின் விபரமும், ஓம் என்றதின் பொருள் இன்னதென்றும் இன்னும் அநேக பரிபாஷைக ளெல்லாம் விபரமாகச் சொல்லி யிருக்கிறது.

புஸ்தகம் 1-க்கு விலை அணு 0—8—0

## வைத்திய வாதயோக

# ஞான சாஸ்திரத் திரட்டு

வெகுகாலமாக ஏட்டுப் பிரதிகளாயிருந்த அரிய பெரிய அநேக நூல்களை ஏராளமான பொருள் செலவு செய்து சேகரித்து வந்து 10-பாகங்களாக அச்சிட்டிருக்கிறது வைத்தியம்; வாதம்; யோகம், ஞானம், வாசி மார்க்கம், யோக அப்பியாசம், கற்பமுறை, தீட்சை விதிகள் தெளிவாகச் சொல்லியுள்ளது. பாகம் 1க்கு ரூ 1—4—0

## முதல் பாகம்

திருமூலர், தெட்சணாமூர்த்தி, கணநாதர், சுப்பிரமணியர், போகர் இவர்களால் கூறியசாஸ்திரங்கள் சேர்ந்தது

## இரண்டாவது பாகம்

போகர், காலாங்கிநாதர், கமலமுனிவர், இடைக்காட்டுச் சித்தர், புண்ணாக்கு சித்தர், கொங்கணர், சூதம்பை சித்தர், அம்பிகானந்தர், டமரானந்தர், வால்மீகர், இவர்களால் கூறிய சாஸ்திரங்கள் சேர்ந்தது

## மூன்றாவது பாகம்

கடைப்பிள்ளை, ஜெய முனிவர், கல்லுளிச்சித்தர், கஞ்சமலைச்சித்தர், புலிப்பாணி முனிவர், கௌசிகமுனிவர், மிருகண்டமகாரிஷி, குருராஜர், இராமரிஷி, அத்திரி மகாரிஷி புசுண்டமகாரிஷி, மௌனசித்தர், சூதமாமுனி, இவர்களியற்றிய சாஸ்திரங்கள் சேர்ந்தது

## நாலாவது பாகம்

மச்சமுனிவர், வேதமுனிவர், தூர்வாசமகாரிஷி, யூகி முனிவர், வசிஷ்டர், பாம்பாட்டிசித்தர், ஞானச்சித்தர், சுகப்பிர்மரிஷி, கூர்மானந்தர், சூரியானந்தர், கண்ணானந்தர், அசுவனிதேவர் பராசரிஷி, தேரையர், இவர்கள் கூறிய சாஸ்திரங்கள் சேர்ந்தது

## ஐந்தாவது பாகம்

சுந்தரானந்தர், கடுவெளிசித்தர், சங்கிலிச்சித்தர், ஊர்வசி, பதஞ்சலியர், வியாக்கிரமபாதர், திரிகோணச்சித்தர், கொங்கணர், பரத்துவாசர், சங்கரர், வரரிஷி, சமதக்கினி மகாரிஷி, சச்சிதானந்தர், கடைப்பிள்ளை இவர்களால் பாடிய சாஸ்திரங்கள் சேர்ந்தது.

## ஆருவது பாகம்

இராமதேவர், யாகோபு, யோகச்சித்தர், வேதாந்தச் சித்தர், பிரமமுனி, சங்கமுனிவர், தன்வந்திரி, கோரக்கர் திலோர்த்தமை இவர்கள்கூறிய சாஸ்திரங்கள்சேர்ந்தது.

## ஏழாவது பாகம்

சட்டைமுனிவர், கணநாதர், இராமதேவர், ஈஸ்பரன், ஈஸ்பரி, பிடிநாக்கிசர், காசிபமுனிவர் பதஞ்சலியார், அகப்பை சித்தர், அல்லாமாப்பிரபு விளையாட்டுச்சித்தர் இவர்களால் கூறிய சாஸ்திரங்கள் சேர்ந்தது.

## எட்டாவது பாகம்

உரோமரிஷி, சட்டைமுனிவர், ஜனகர், கலைகோட்டு மகாரிஷி, அழுகணிச்சித்தர், நொண்டிச்சித்தர், சுந்தரானந்தர் திருமூலர் கொங்கணர் இவர்களால் கூறிய சாஸ்திரங்கள் சேர்ந்தது.

## ஒன்பதாவது பாகம்

கருவூரார், கொங்கணர், பிர்மானந்தர் கல்லுளிச் சித்தர், திருமூலா தத்துவராயர் இராமானந்தர் சுந்தரானந்தர் இவர்களால் பாடிய சாஸ்திரங்கள் சேர்ந்தது,

## பத்தாவது பாகம்

அகஸ்தியரா பல்பாடிய கோர்வை நூல்களும்சிவானந்தர், நாதாந்த சித்தர் இவர்களால் கூறிய சாஸ்திரங்களும் சேர்ந்தது.

பாகம் 1-க்கு விலை ரூ 1—4—0